# வேலைக்காரி

# வேலைக்காரி

பேரறிஞர்
டாக்டர் சி. என். அண்ணாதுரை,
எம். ஏ.,

LIBRARY

பூம்புகார் பிரசுரம் பிரஸ்
63, பிராட்வே,
சென்னை - 600 001.

விலை ரூ. 4-90

*பூம்புகார் வெளியீடு எண்: 154*
*முதற் பதிப்பு: ஜூலை, 1980*
*உரிமை: திருமதி ராணிஅண்ணாதுரை*

**அச்சிட்டவர்கள்: பூம்புகார் பப்ளிகேஷன்ஸ் பிரஸ், சென்னை-600 001.**

## பதிப்புரை

நாடகம் என்பது ஒரு நாட்டின் கலையை, கலாச்சாரப் பண்பை, நாகரிக வளர்ச்சியைப் பிற நாட்டினருக்கு எடுத்துக் காட்டும் அளவுகோலாகும்.

அதுபோலவே...

நாடகம் எனப்படுவது ஒரு நாட்டில் அல்லது சமூகக் கோட்பாட்டில் இருக்கும், 'நல்லது—கெட்டது' ஆகியவற்றை விளக்கிக் காட்டுவது மட்டுமல்ல, அதற்கான பரிகாரத்தைத் தேடித் தருவதுமாகும்.

இது கலை. இந்தக் கலைக்கு, நமக்கு முன்னே வாழ்ந்த மூத்தவர்கள், 'கூத்து' என்று முடிசூட்டி முத்தமிழ் நாட்டை வலம்வரச் செய்தனர். அத்தகைய 'கூத்து' என்னும் துறையை பின்பற்றிய பின்வந்தோர், அதன் மூலமாக இனவுணர்ச்சி மங்கவும், இதிகாச புராணங்கள் தலைதூக்கவும், சுயபுத்தி சிதறவும் பெரிதும் பயன்படுத்தி வந்தனர்; அதிலே வெற்றியும் கண்டனர்.

ஆம்; மனித மனத்தைக் கவரும் சக்தி எதற்கு உண்டோ, அது கலையாகும். அந்த கலைக்குள் புகுத்தப்படும் கருத்து எதுவானாலும் அது மனித மனத்துக்குள் இலகுவாகப் புகுந்து, அந்தக் கருத்துக்கேற்ப நடக்கச் செய்துவிடும்.

அப்படிப்பட்ட வில்லங்கமான—விபரீதக் கருத்துக்கள் கொண்ட—காட்சி நிறைந்த கூத்தினை நடத்தி, தன்மானத்தோடு வாழ்ந்த தமிழனைத் தரைமட்டமாக்கி, வைரம் பாய்ந்த நெஞ்சை தைரியமில்லாததாக்கி, எதற்கும், 'ஏன்' என்று கேட்டு வாழ்ந்தவனை, அப்படிக் கேட்பது 'வீண்' என்று நினைக்கும்படியாகச் செய்த ஒரு காலத்தில் நாம் இல்லை.

அவ்விதம் செய்யப்பட்டு, அடிமைப்பட்டுக் கிடந்த ஒரு கட்டத்தில்தான் மாயக்கலையில் வல்ல மன்னன்—நமது அண்ணா, அதே நாடகக் கலையின் வாயிலாகத் தாழ்ந்து கிடந்த தமிழகத்தை உயர்த்தும் பணியை மேற்கொண்டார்.

எந்த ஒரு நாடகக் கலையின் மூலமாக நாட்டு மக்களின் சொல்—செயல் இரண்டையும் மாறுபடச் செய்தார்களோ, அதே கலையின வாயிலாக இதே தாயகத்தை—தமிழகத்தை மீண்டும் விழிக்க வைக்க 'நாடகம்' சமைக்கத துவங்கினார்.

இன்றளவும் உலக அரங்கில் போற்றப்பட்டு வருகின்ற ஷேக்ஸ்பியர், பெர்னார்ட்ஷா போன்ற நாடக மேதைகளின் நாடகங்களில் எல்லாம் மனத்தைத் திருத்திப் பக்குவப்படுத்தும் துளிகளையே பரவலாகக் காண முடியும். ஆனால் அறிவுலக மேதை அண்ணா அவர்கள் தீட்டிய ஒவ்வொரு நாடகமும் மனித உள்ளங்களைத் திறக்கும் திறவுகோலாகும்.

நாட்டுப்பற்று, மொழிப்பற்று, சமூகப்பற்று போன்ற பல்வேறு துறைகளில் மக்களுக்குப் 'பற்று' வரும்படியாக நாடகத்துறையில் மறுமலர்ச்சியும், மக்கள் மனத்தில் புத்துணர்ச்சியும், பொதுவாகத் தமிழரங்கில் விழிப்புணர்ச்சியும்

ஏற்படத் செய்த ஏந்தல் டாக்டர் பேரறிஞர் அண்ணா அவர்களே யாவார்.

விழலுக்கு இறைக்கப்பட்ட நீரை வயலுக்குத் திருப்பி, மக்கள் வாழ்வுக்கு முதல் ஜீவனாக விளங்கியவர்.

நாடக இலக்கணப்படி யுக்திகளை மேற்கொண்டு, காட்சிக்குக் காட்சி நாடகத்தில் மட்டுமல்ல, நாட்டிலும் நல்ல திருப்பம் ஏற்பட வைத்த நாயகர் அவர்.

மொழி நமக்கு விழி என்றால், அவ்விழிக்குள் இருக்கும் ஒளி நாடகம்!

மக்களை வழிநடத்திச் செல்லும் மகத்தான சாதனம் இது.

இந்தச் சாதனத்தால் தமிழகத்தின் ஜாதகத்தை மாற்றி அமைத்த மார்டின் லூதர், அமரர் அண்ணா அவர்கள் சிருஷ்டித்த ஓரங்க நாடகங்கள் ஓராயிரம்; முழுமை நாடகம் ஒவ்வொன்றும் விலையில்லா மாணிக்கம்; இருளை அகற்றும் கைவிளக்கு. வருங்காலச் சந்ததிகள் கட்டாயம் நெஞ்சில் நிறுத்த வேண்டிய இமாலய சிகரம்!

ஆம்!

நாட்டுக்கென்று அவர் படைத்த அத்தனை நாடகங்களையும், கதை, கட்டுரைகளையும் புத்தக வடிவில் கொண்டு வர—உங்கள் கரங்களில், கண்களில் தவழவிட எங்களுக்கு

முழு உரிமை வழங்கி இருக்கும் திருமதி. இராணி அண்ணா துரை அவர்களுக்கு எங்கள் இதயபூர்வமான நன்றி.

இதோ, அமரர் அண்ணா அவர்கள் சிருஷ்டித்த சமூகப் புரட்சி நாடகம்.

இது கைவிளக்கு மட்டுமல்ல; கலங்கரை விளக்கும்கூட!

படியுங்கள்; பயனடையுங்கள்!

**பூம்புகார் பிரசுரத்தார்**

# வேலைக்காரி

**கதாபாத்திரங்கள் :**

வேதாசல முதலியார்—வட்டியூர் ஜமீன்தார்.

சரசா—வேதாசல முதலியாரின் மகள்.

மூர்த்தி—வேதாசல முதலியாரின் மகன்.

அமிர்தம்—வேலைக்காரி.

சொக்கன்—வேலைக்காரன்.

முருகேசன்—அமிர்தத்தின் தந்தை.

சுந்தரம் பிள்ளை—அவ்வூரில் வாழ்பவர்.

ஆனந்தன்—சுந்தரம் பிள்ளையின் மகன்.

மணி—ஆனந்தனின் நண்பன்.

காட்சி—1.

இடம்: வேதாசல முதலியார் வீடு

இருப்போர்: வேதாசல முதலியார், சொக்கன்.

வே: காளி, மகமாயி, லோகமாதா...டேய், சொக்கா! கொண்டு வாடா தாயுமானவரை. இது என்னடா பார்சல்?

சொ: இதுங்களா...நம்ம சரசம்மா மாதர் சங்கத்திலே டான்ஸ் ஆடப்போறாங்களில்ல...

வே: கதையை வளர்க்காதேடா...விஷயத்தைச் சொல்லு.

சொ: அதுதானுங்க...அந்த டான்ஸுக்கு வேண்டிய உடைகள் எல்லாம் தச்சு வந்திருக்குதுங்க...

வே: இவ்வளவுமா?

சொ: இன்னமும் ஒரு பார்சல் வரவேண்டியதிருக்குங்க...

வே: இவ்வளவுக்கும் பணம்?

சொ: அதெல்லாம் நேத்திக்கே கொடுத்தாச்சுங்க.

வே: அட பாவி!...அமிர்தம், சரசா இருக்கிறாளா? அவளைக் கூப்பிடு! காபி சாப்பிட்டாச்சுதா அவன்?

அமி: அவரையும் கூப்பிடட்டுங்களா?

வே: சீ! அதிகப் பிரசங்கி. ஒன்று சொன்னா ஒன்பது கேள்வியா? போ! போயி...சரசாவைக் கூப்பிட்டு வா.

காட்சி—2.

இடம்: வேதாசல முதலியார் வீடு.

இருப்: சரசா, அமிர்தம், மூர்த்தி.

[அமிர்தம் போகிறபோது, சரசா எதிரே வருகிறாள்.]

சர: என்னடி ஓட்டமும் ஓய்யாரமும்!

அமி: ஒன்றுமில்லேம்மா...எஜமான்...

சர: இப்படிப் புள்ளிமான்போல் துள்ளிக்கிட்டு வரச் சொன்னாரா?

அமி: இல்லை. உங்களைக் கூப்பிட்டு வரச் சொன்னாரு.

சர: இதுக்குத்தானா இவ்வளவு குமமலாட்டம்? அமிர்தம்! நானுந்தான் பார்த்துக்கிட்டே வர்ரேன். ஒரு வேலைக்காரிக்கு வேண்டிய அடக்கம், ஒடுக்கம், மட்டு மரியாதை ஒன்றுமே உன்கிட்டே கிடையாது.

[சரசா சகோதரன மூர்த்தி வருகிறான ]

மூா: சரசா! எப்போ பார்த்தாலும எரிஞ்சி எரிஞ்சி விழறியே! கொஞ்சம் சாந்தமாகத்தான் பேசேன்...

சர: ஆமா...நான எரிஞ்சி விழறேன். அதை அணைக் கிறதுக்கு இவர் வந்துட்டார், பயர் இனஜின் (Fire Engine) மூர்த்தி! சம்பந்தம் இல்லாத விஷயத்தில் தலையிடாதே.

[சரசா போகிறாள்.]

மூர்: அமிர்தம்! இதையெல்லாம் மனசிலே போட்டுக் கொள்ளாதே. போய் வேலையைக் கவனி. உம்...

காட்சி—3.

இடம்: வேதாசல முதலியார் வீடு.

இருப்: சரசா, வேதாசல முதலியார், சொக்கன்

சர: அப்பா...கூப்பிட்டிங்களாமே?

வே: ஆமாம், அம்மா! நீ தர்மத்துக்கும் பண்டுக்கும ஆடறது சரி...நம்ப பணம் பாழாகாமல் பார்த் துக்கோ. நீ ஏதோ மாதர் சங்கத்திலே என்னமோ டான்ஸாமே...

சர: ஆமாப்பா!

வே: இந்த டிரஸ்க்கெல்லாம் வேண்டிய பணம்?

சர: சங்கத்திலே வாங்கிப் போடுறேனப்பா!

வே: ஆமம்மா! சொக்கா, எவ்வளவு பில் ஆவுது பணம்..

சொ: அது இருக்குங்க...300 ரூபாய்க்கு மேலே...

வே: அதென்னடா...மேலேயும் கீழேயும்? கரைக்டா சொல்லுடா கழுதை!

சொ: 300 ரூபாயும், $3\frac{1}{4}$ அணாவும் ஆகுதுங்க!

வே: அதை வாங்கிக் கொடுத்துவிடம்மா சங்கத்திலே!

சர: ஆகட்டுமப்பா!

வே: சரசா! காப்பிச் செலவு, வண்டிச் செலவு, அது இதுன்னுகூட ஆகியிருக்கும். எல்லாம் சேர்த்து 400 ரூபாவா...வாங்கிக் கொடுத்துவிடு.

சர. சரியப்பா! அப்படியே...வாங்கிடறேன்பா!

சொ: அம்மா! இன்றைக்குக் கிடைக்கிறது சந்தேகம் என்று அந்த தையற்காரன் இழுத்தாற்போல சொன்னான். அதனாலே அவனுக்கு ஒரு பத்து ரூபாயைக் கொடுத்து தனியாகக் கவனிச்சேன்...அதையும்...

சர: பதினைந்தா வாங்கிக்கொள் சொக்கா!

[சரசா போகிறாள்.]

வே: சொக்கா! வந்துதாடா புத்தி?

சொ: என்னாங்க?

வே: வந்துதாடா புத்தி என்று கேட்டேன். இவ்வளவு கஷ்டப்பட்டு சேர்க்கிறேனே, அதைப்பற்றி உனக்குக் கொஞ்சமாவது அக்கரை இருக்காடா?

சொ: பண விஷயமுன்னா...நான் லேசிலே விடறதில்லீங்க.

வே: பேச்சுக்கு குறைச்சலில்லடா உன் கிட்டே. பணம் கொடுத்துப் பத்து மாசம் ஆகுதே, அந்த சுந்தரம் பிள்ளை தரவேண்டிய பாக்கி என்னாச்சு?

சொ: பணம் வர வழியைக் காணுமுங்க. அதனாலே அரஸ்ட்டுக்கு ஏற்பாடு பண்ணிவிட்டேனுங்க...

வே: அதைப் பற்றி அவனுக்கென்னடா! அங்கே போய் சொஸ்தமா உட்கார்ந்து தின்பான் ..சாப்பாட்டுக்குப் படி நானில்லடா கட்டணும்...

சொ: அப்படி இல்லீங்க...அவன் ரொம்பவும் மானஸ்தன். அரஸ்டு என்று சொன்னா...

வே: சரி, போதும்டா. அதற்கு வேண்டிய ஏற்பாடெல்லாம் செய். ஓட்டத்தில் ஓடு...முதல்லே அதைக் கவனி...

வே: (தனக்குள்) திருட்டுப் பசங்க. நம்ம பணத்தையும் வாங்கிட்டு பிராணனையும் வாங்கறானுங்க. டேய், சொக்கா! இருடா, நானும் வாரேன். இந்தப் பயலைப் பிடித்து ஜெயில்லே தள்ளினாத்தான் மற்ற கடன்காரப் பயல்களுக்குப் புத்தி வரும்.

காட்சி—4.

இடம்: சுந்தரம் பிள்ளையின் வீடு.

இருப்: சுந்தரம் பிள்ளை, வேதாசல முதலியார், சொக்கன்.

சுந்த: வேண்டாமுங்க. ஜெயிலிலே மட்டும் தள்ளாதீங்க. எவ்வளவோ வேதனையை அனுபவிச்சியிருக்கிறேன். இழிவான பெயர் மட்டும் ஏற்பட்டதில்லீங்க. ஜெயிலுக்குப் போனா.. ஆயுள் பூராவும் பழிப்பாங்க, ஐயா! ஏழை மீது கொஞ்சம் இரக்கம் காட்டுங்க...

வே: டேய், சொக்கா! இழுத்துப் பூட்டுடா கதவை! இந்த நாயை தெரு வழியாக இழுத்துக்கொண்டு போகச் சொல்லு ஜெயிலுக்கு.

சுந்த: ஐயா! வேண்டாமுங்க...இதை என்னாலே தாங்க முடியாதுங்க; நினைத்தாலே மனம் பதறுதுங்க.

வே: பதறுதாடா உன் மனசு! உன்னைப்போல திருட்டுப் பசங்க என் பணத்தை எடுத்து மோசம் செய்யும்போது மட்டும் என மனசு குளிருதோ? போடா, போக்கத்தவனே!.. வாங்கின கடனைக் கொடுக்க வழியில்லையினா, குளத்திலே—குட்டையிலே விழுந்து சாகிறதுதானே!

சுந்த: ஐயா! கொஞ்சம் பொறுங்க. உங்க கடனை இன்னும் கொஞ்சநேரத்தில் பைசல் செய்துவிடுகிறேன்.

[சுந்தரம் பிள்ளை உள்ளே போய் மரக்கிளையில் பிணமாகத் தொங்குகிருர்.]

காட்சி—5.

இடம்: காளி கோயிலின் பாதை.

இருப்: சுந்தரம் பிள்ளையின் மகன் ஆனந்தன், ஆனந்தனின் நண்பன் மணி.]

[சுந்தரம் பிள்ளை மகன் ஆனந்தன், அயலூரிலிருந்து வருகிறான்; வழியில் பழைய நண்பன் மணியைச் சந்திக்கிறான்.]

மணி: இடியட்! யாரப்பா நீ? கண்ணு தெரியலை? அடே, நீ சுந்தரம் பிளளை மகன் ஆனந்தனில்லே?

மணி: நான்தாம்பா மணி...

ஆனந்: அடடா, மணி! சௌக்கியமா?

மணி: சௌக்கியமாய் இருக்கிறேன்.

ஆனந்: மணி! என்னை யாருமே அடையாளம் கண்டு கொள்ள முடியாதென்றில்லே நினைச்சேன்!

மணி: ஆமாப்பா! நான்கூட முதல்லே உன்னைப் பார்த்ததும் எவனோ ஒருத்தன் சாமிக்குப் பிரார்த்தனை பண்ணப் போகிறவன்போல இருக்கு என்று நினைத்தேன்...பார்த்தால் நீ!

ஆனந்: ஆமாம், மணி! ஒரு வகையில் பிரார்த்தனை செலுத்துபவன் போலத்தான் வந்திருக்கிறேன். எங்கப்பாவைப் பார்த்து...மணி! எங்கப்பா... சௌக்கியமா இருக்கிறாரா?

மணி: சௌக்கியமா...இருக்கிறார். வா, போகலாம். ஆமாம்...எவ்வளவு பணம் கொண்டு வந்திருக்கிறே?

ஆனந்: மணி! 200 ரூபாய் கொண்டு வந்திருக்கிறேன்.

மணி: அடப்பாவி! அயலூருக்குப் போய் 200 ரூபாய் தான் கொண்டு வந்தாயா?

ஆனந்: உனக்குக் கேலியாக இருக்கு மணி. தேயிலைத் தோட்டத்திலே, இரவும் பகலும் கஷ்டப்பட்டு, ஒரு வேளை சாப்பிட்டு, மீத்தின பணமப்பா இது. இதைக் கொண்டு அப்பாவுக்கு ஒரு கடை கண்ணி வைத்துக் கொடுக்கவேண்டுமென்று ஆசையோடு வந்தேன். மணி! உனக்குத் தெரியுமே, அப்பாவுக்குத் தள்ளாத வயசு! அவர் எனக்காக எவ்வளவு கஷ்டப்பட்டவர்.

மணி: எப்படியாவது வந்து சேர்ந்தாயே, அதுவே போதும் உங்கப்பாவுக்கு உன்னைப் பார்த்தாலே போதும்; இந்த 200 ரூபாயும் இரண்டு லட்சம் என்று எண்ணிச் சந்தோஷப்படுவார்.

ஆனந்: தடையென்ன மணி? தெருக்கோடியிலே எங்கப்பா என்னைப் பார்த்ததும்...வாடா ஆனந்தா என்பார். அழைப்பதைக் கேட்டதும் நான் இந்தப் பத்து வருஷ காலம் கஷ்டப்பட்டதெல்லாம் பஞ்சாப் பறந்துவிடும். மணி! சரி, போகலாமா?

மணி: போகலாம்...

ஆனந்: (வரும் வழியில்) உனக்கென்னப்பா வேலை?

மணி: எங்கேயாவது வேலை கிடைக்கிறதா, இல்லையா என்று சுற்றிப் பார்ப்பதுதான் என் வேலை.

ஆனந்: எங்கோயோ படிக்கணுமென்று சொன்னியே?

மணி: ஓ, படிச்சாச்சே! படிச்சி டிகிரியும் வாங்கியாச்சே!

ஆனந்: எந்த காலேஜில்?

மணி: நான் படித்தது...இந்தப் பரந்த உலகத்திலே வாங்கின டிகிரி, போலீஸில் கேடி.

ஆனந்: ரொம்ப நல்லவனாச்சே நீ!

மணி: நல்லவன்தான். யார் இல்லையென்று சொன்னாங்க? நல்லவனுக்குத்தான் இந்தப் பொல்லாத உலகில் நாணயமாக பிழைக்க வழியில்லையே, வா!

[வழியில் காளி கோவிலைக் கண்டு வணங்குகிறான்.]

ஆனந்: காளி, மகமாயி, மகேஸ்வரி! இத்தனை வருஷத்துக்குப் பிறகு அப்பாவைப் பார்க்க முடிஞ்சுதே, அது உன் கிருபை...

பக்கத்தில் இருந்த ஒருவர்: மகா சக்தி வாய்ந்தவளப்பா, இந்த மாகாளி! இந்த மாகாளியை மனதிலே பக்தியோடு பூஜை செய்து, நம்பிக்கையாக கும்பிட்டு வந்தால் இந்த உலகத்தில் நடக்காதது ஒண்ணுமில்லே...

மற்றவர்: அவள் கண்கண்ட தெய்வமாச்சேயப்பா! எந்தக் காரியமா இருந்தாலும் சரி, கைமேல் பலன் கிடைக்கும்.

மணி. (ஆனந்தனைப் பார்த்து) இந்தாப்பா! அப்பாவைப் பார்க்க வேண்டுமென்று பறந்தாய்; இந்தப் பைத்தியக்காரன் பேச்சைக் கேட்டு அப்படியே நின்றுவிட்டாயே! வாப்பா, போகலாம்.

(இருவரும் போகிறார்கள்)

காட்சி—6.

இடம்: சுந்தரம் பிள்ளையின் வீடு.

இருப்: சொக்கன், அமீனா, வேதாசலம்.

சொ: எங்கே, உள்ளே போன ஆளைக் காணோம்! என்ன செய்துகொண்டிருக்கிறான்?

அமீனா. ஓய், சுந்தரம் பிள்ளை!...சுந்தரம் பிள்ளை!

சொ: எங்கே காணோம்? போய்த்தான் பார்ப்போம். ஹா...எஜமான்...

[தூக்கு போட்டுக் கிடப்பதைப் பார்க்கிறார் வேதாசலம்.]

வே: அடப் பாவி!

[எல்லோரும் போய்விடுகிறார்கள்.]

காட்சி—7.

இடம்: சுந்தரம் பிள்ளையின் வீடு.

இருப்: மணி, ஆனந்தன்.

[மணியுமம ஆனந்தனும் வருகிறார்கள். தந்தை மரக்கிளையில் பிணமாகத் தொங்குவதைக் காண்கிறான் ஆனந்தன்].

ஆனந்: அப்பா. .அய்யோ அப்பா! அப்பா...அய்யோ, மணி! என் கதியைப் பார்த்தாயா? அப்பா! வாயைத் திறந்து ஒரு வார்த்தை பேசமாட்டியா அப்பா! ஒருதரம், 'ஆனந்தா வாடா! மகனே வாடா' என்று அழைக்கமாட்டியா? அப்பா, நீ ஏன் தூக்கு போட்டுச் சாக வேண்டும்? நான் எதுக்கும் உதவாதவன், அவன முகத்திலே முழிக்கக் கூடா தென்று நினைத்தாயா? அப்பா! நாலு வீடு பிச்சை எடுத்தாகிலும் உன்னைக் காப்பாற்றமாட்டேனா!

கடவுளே! சண்டாளத் தெய்வமே! உனக்குக் கண்ணில்லையா? எனக்கிருந்த ஒரே ஆஸ்தி, ஒரே துணை, ஆதாரம் அவரை இக்கதிக்கு ஆளாக்கி விட்டாயே...

[சுந்தரம் பிள்ளை மடியிலிருந்த லெட்டரை எடுத்துப் படித்துப் பார்த்துவிட்டு ஆனந்தனிடம் கொடுக்கிறான் மணி. அதை வாங்கிப் பார்க்கிறான் ஆனந்தன்.]

ஆனந்: யாரைய்யா இங்கு வேதாசல முதலியார்?

மணி: அவர்தான் இப்பொழுது இந்த ஊருக்கே முதலாளி.

பக்கத்தில் இருந்தவர்: அவரா ..ரொம்ப நல்லவராச் சுங்களே...!

ஆனந்: அவனா நல்லவன்? என் குடும்பத்தைக் கெடுத்தவன். என் தந்தையைச் சாகடித்தவன். அவனா நல்லவன்? அய்யா! இவர் ஏன் பிணமானார் தெரியுமா? வேதாசலத்தினுடைய பணத்தாசையினால் தான். கடன் கொடுத்தாராம்; கஷ்டப்படுத்தினாராம்; வீடு—வாசல்களை ஏலத்தில் எடுத்தாராம்; பத்தாக் குறைக்கு, வாங்கிய கடனுக்காக ஏசினாராம்; மானத்துக்குப் பயந்து மரக்கிளையில் பிணமானார். அடப் பாவி! ஒரு வயோதிகன் பிணம் வழியில் கிடந்தாலும் சரி, உன் பெட்டியில் பணம் குவிந்தால் போதுமென்றுதானே இருந்தாய்! அட, பாதகா! இந்தப் பாவம் உன்னைச் சும்மா விடுமா? நீ நல்லாயிருப்பியா? உன் குடும்பம் நல்லாயிருக்குமா? உன் பிள்ளை குட்டிகள் நல்லா இருப்பார்களா?...

காட்சி—8.

இடம்: மாதர் சங்கம்.

இருப்: சரசா, மற்றும் பெண்கள்.

[மாதர் சங்கம். சரசாதேவி நடனம் நடக்கிறது. நடனம் முடிந்ததும் மேடையில் ஒரு பெண் பேசுகிறாள்.]

ஒரு பெண்: தோழியர்களே! தோழர்களே! எங்கள் மாதர் சங்கத்திற்குத் தேவையாய் இருந்த நிதிக்காக ஸ்ரீமதி சரசாதேவி நடத்திய நாடகம் மூலமாகக் கிடைத்த ரூபாய் 4,400-யும் அவர்கள் எங்களுக்குத் தந்தார்கள். இந்தப் பேருதவிக்காக சரசா அம்மையாரை வாழ்த்துகிறது இச் சங்கம்.

(கரகோஷம்)

சரசா: தாய்மார்களே! சகோதரிகளே! பெண்களின் விடுதலைக்காக நான் எப்பொழுதும் பாடுபடுவேன். நாம் எல்லோரும் சமம். எல்லோரும் ஒன்று என்ற முறைப்படி, தாழ்ந்த நிலையில் உள்ளவர்களைத் தகுந்த நிலையில் உயர்த்துவதற்கு நான் எப்பொழுதும் தொண்டு செய்வேன். வந்தனம்.

(போகிறாள்)

காட்சி—9.

இடம்: வேதாசலம் வீடு.

இருப்: சரசா, அமிர்தம், மூர்த்தி.

[வீட்டில் அமிர்தம் சரசாவின் சேலையை மடித்து அழகு பார்த்துக்கொண்டிருக்கிறாள். சரசா வருகிறாள்.]

சரசா: வேண்டியதானடி. இதுக்குத்தான் சேலையை மடித்து வைக்க இவ்வளவு நேரமா? அம்மாளுக்குப் பேஷனில்லே கேட்குது. ஏண்டி! உன் உடம்பில் இருக்கிற அழுக்குப்பட்டால் என்னத்துக்கடி ஆகும்—சேலை.

[மூர்த்தி வருகிறான்.]

மூர்த்தி: சரசா! எப்போது பார்த்தாலும் அமிர்தத்தை மிரட்டுவதே உனக்கு வேலையாய்ப் போய்விட்டது...

சரசா: இந்த வீட்டில் ஒரு வேலைக்காரியை மிரட்டுவதற்குக் கூட அதிகாரம் இல்லையா?

மூர்த்தி: அம்மா, பராசக்தி! நீ மிரட்டு, அதிகாரம் பண்ணு, வாய் வலிக்கத் திட்டு. நீ எஜமானியம்மா— பாவம், அவள் வேலைக்காரிதானே! அதிகாரம் பண்ணலின்னா உன் அந்தஸ்து குறைந்துவிடுமே! ஊம்...ஆரம்பி கூச்சலை.

சரசா: மூர்த்தி! நீ ஒரு வேலைக்காரிக்குப் பரிந்து பேசுவதைக் கேட்டால் ஊர் சிரிப்பா சிரிக்கும்.

மூர்த்தி: சரசா! போதும், நிறுத்து...

அமிர்: அய்யய்யோ! என்னாலே உங்க இரண்டு பேருக்குள்ளே சண்டையா?

சரசா: இந்நாடி, அமிர்தம்! இதைக் கண்ணாடிபோல் பாலீஷ் செய்யணும். (செருப்பைத் தூக்கி எறிகிறாள்)

மூர்த்தி: எப்படிப்பட்டவன் வந்து சரசாவை அடக்கப் போறானோ, தெரியலை! திமிர், பணத் திமிர்!

காட்சி—10.

இடம்: ஆனந்தன் வீடு, காளி கோயில்.

இருப்: ஆனந்தன், மணி.

[ஆனந்தன் கத்தியைத் தீட்டிக்கொண்டிருக்கிறான். அப்போது மணி வருகிறான்.]

ஆனந்: ஒரே வெட்டு...வேதாசலத்தினுடைய தலை கீழே உருள வேண்டும்.

மணி: ஆனந்தா! நீ சுத்தப் பைத்தியக்காரன். கோபம் கண்ணை மறைக்கும். ஆத்திரத்தில் எதையாவது செய்துவிடப் போகிறாய்!

ஆனந்: நீ யார், என்னைத் தடுக்க?

மணி: நானும் உன்னைப்போல் ஒரு நாடோடி. உன் இனம்...நீ உலகமறியாதவன். சூதும் சூழ்ச்சியும் நிறைந்த இந்த உலகத்திலே சிக்கிச் சிதைந்து, நான் கற்ற பாடங்களை நீயும் கற்றிருந்தால், இந்த மாதிரி கத்தியும் கையுமாகத் திரியமாட்டாய்.

ஆனந்: போதும்!...மூட்டை சுமப்பவனுக்கல்லவா தெரியும் கழுத்து வலி!

மணி: வலி இருக்கிறதென்று கருங்கல்லில் முட்டினால் வலி தீராது. மண்டைதான் உடையும்.

ஆனந்: போதும், உன் போதனை! எந்த வேதாசலத்தின் சதியால் என் தந்தை பிணமானாரோ, அந்த வேதாசலத்தின் தலை கீழே உருள வேண்டும். இரத்தம் தரையில் ஆறாக ஓடினாலன்றி என் ஆத்திரம் தீராது. கொண்டுவந்த பணத்தை வக்கீலுக்கு இறைத தேன். கேஸே போடமுடியாதென்று சொல்லிவிட்டான். இந்த வாளே வழக்கு மன்றம்; இனி, இந்தக் கையே சட்டம்...

மணி: அட, நில்லப்பா! நீ வேதாசலத்தை வஞ்சம் தீர்க்க நினைக்கின்றாய்! ஆனால் அது கத்தியால் சாதிக்க முடியாது.

ஆனந்: முடியாதா? பார்! ஒரு மணி நேரம் தீட்டினேன்; கூர்முனை எப்படி இருக்கிறது பார்!

மணி: கத்தியைத்தான் தீட்டினாயே ஒழிய உன் புத்தியைத தீட்டவில்லை நீ. வேதாசலத்தைக் கொன்று விடுகிறாய் என்று வைத்துக்கொள். ஆனால் இறந்து போன உன் தந்தை பிழைத்து விடுவாரா? ஊரார் உன்னைச் சும்மா விடுவார்களா? அல்லது நீ ஒரு நல்ல காரியத்தைச் செய்துவிட்டாய் என்று போலீஸ்காரர்கள் உனக்கு மெடல் கொடுப்பார்களா? ஆனந்தா! வேண்டாம், இந்த விபரீத புத்தி.

ஆனந்: மணி, தர்ம உபதேசம் செய்கிறாயா?

மணி. தர்மம், கர்மம் என்று தலை முழுகி நெடுநாளாகி விட்டது. நான் சொல்வது யூகம். ஆனந்தா! உன் தகப்பனாரை அவன் எப்படிக் கொன்றான்? தடியால் அடித்தானா? கத்தியால் குத்தினானா? தற்கொலையைத் தவிர வேறு வழியில்லாமல் செய்தான்...

ஆனந்: மணி! நீ என்னதான் சொல்கிறாய்?

மணி: என்ன சொல்கிறேனா! பழி வாங்கும் திட்டத்தை விட்டுவிடு. இதைக்கொண்டு அவனைக் கொஞ்சம் கொஞ்சமாக வாட்டி வாட்டி வதைக்க வேண்டும். ஊரார் இப்பொழுது அவனைப்பற்றி எவ்வளவு மதிப்பாகப் பேசுகிறார்களோ, அதே ஊரார் அவன் யோக்கியதை வெளிப்பட்டு அவனை ஏச வேண்டும். அதற்கான வழிகள் நாம செய்ய வேண்டும்.

ஆனந்: மணி, நீ சொல்வது அவ்வளவும் உண்மை. வேதாசலத்தைப் பழி தீர்ப்பதற்கு இந்தக் கத்தி தீட்டிப் பயனில்லை.

[கத்தியைத் தூககி எறிகிறான்.]

மணி: சந்தோஷம்...குழியில் விழ இருந்தாய்; தப்பித்துக் கொண்டாய். நான் வருகிறேன்.

ஆனந் மணி! வேதாசலத்தின வேஷத்தைக் கலைக்க வேண்டுமென்று சொன்னாய். அதற்கான வழி சொல்லவில்லையே!

மணி: பாடு படாமல் பலன் கிடைக்குமா? பார், யோசித்து!

[போகிறான். ஆனந்தன் கோவில் சென்று காளியை வேண்டுகிறான்.]

பக்தர் (சொன்ன ஞாபகம) மகா சக்தி வாய்ந்தவளப்பா இந்த மாகாளி! இந்த மாகாளியை மனதிலே பக்தியோடு பூஜை செய்து நம்பிக்கையாகக் கும்பிட்டு வந்தால் இந்த உலகத்தில் நடக்காதது ஒன்றுமில்லை.

மற்றவர்: கண்கண்ட தெய்வமாச்சேயப்பா இது. எந்தக் காரியமாயிருந்தாலும் சரி, கைமேலே பலன் கிடைக்கும்!

காட்சி—11.

இடம்: காளி கோயில்.

இருப்: மணி, ஆனந்தன்.

[ஆனந்தன் பரவசத்தால் பாடுகிறான். மணி வருகிறான்.]

மணி: என்ன, ஆனந்தா! ஒரே பக்திப் பரவசம்?

ஆனந்: மணி! காளியைக் கும்பிட்டுப் போகலாமென்று வந்தேன்...இந்தா பிரசாதம்...

மணி: பணம், கிணம் ரொம்ப தாராளமாக கிடைக்கிறதோ?

[பிச்சைக்காரன் வருகிறான்.]

பிச்சை: ஐயா! இந்த ஏழைக்கு ஒரு பிச்சை போடுங்க சாமி.

மணி: இந்தாப்பா (போடுதல்).

பிச்சை: சாமி! இது ஒரு ரூபாயிங்க...

மணி: தெரியுமப்பா! இதை வச்சுக்க—இன்னும் நூறு பேர் கிட்ட போய் பிச்சையினு கேட்காமே இன்னிக்கு பொழுதை நிம்மதியாக கழிச்சுக்கோ...

ஆனந்: மணி! உனக்குத் தங்கமான மனசு!

மணி: சரி, வா! கூல்ட்டிரிங் சாப்பிட்டுப் போகலாம்...

ஆனந்: ஐயோ! நான் இன்றைக்கு விரதமாச்சேப்பா...

(போகிறான்.)

மணி: பைத்தியக்காரன். உழைக்கிறான், மாடுபோல; சம்பாதிக்கிற காசையெல்லாம் கற்பூரமாக வாங்கிக் கொளுத்துகிறான். (சிகரெட் பிடித்தல்) தூப தீப நைவேத்திய சமர்ப்பியாமி.

காட்சி—12.

இடம்: வேதாசல முதலியார் வீடு.

இருப்: வேதாசலம், முருகன், சொக்கன்.

வேத: என்னப்பா விசேஷம், இன்றைக்குக் கோவிலிலே.

முரு: ஒன்னுமில்லீங்க... அந்தக் குளத்தங்கரை பாசனம் இருக்குதில்லீங்க...

வே: எது? கார்மேகம் தரவேண்டிய கடனுக்கு விட்டுப் போனதுதானே...

முரு: ஆமாங்க...அது நம்ப கையிலே வந்ததும், விளைச்சல் அதிகமாக இருந்துதுங்க, இந்த வருஷம்! அதனாலே தான் காளிக்கு ஒரு அபிஷேகம செய்துவைச்சேனுங்க..

வே: அவசியம் செய்ய வேண்டியதுதான். முருகா! முனி யாண்டி தரவேண்டிய பாக்கிக்கு என்ன சொன்னான்?

முரு: அவன் பெண்ஜாதி மலேரியாவில் படுத்து மூன்று மாசம் ரொம்ப கஷ்டப்படுகிறாளுங்க, பாவம்!

வே: யாருக்குத்தான் கஷ்டமில்லை? எனக்குந்தான கஷ்டம இருக்குது. இன்கம்டாக்ஸுக்குப் பணம் கட்ட படி யேறி இறங்குகிறேனே, அது ஒன்றே போதும்! இந்தப் பயல் அங்கே காட்டவேண்டிய கணக்கை இங்கே வைத்து விட்டுவந்துவிடுவான்;இங்கே வைக்கவேண்டியகணக்கை அங்கே கொண்டுவந்து விடுவான்! இவனைக் கட்டிக் கொண்டு நான் படுகிற கஷ்டம் காளியாயிதான் கேட் கணும். சொக்கா! முனியாண்டி கடன் எவ்வள வுடா ஆகும்?

சொ: அது ஆகுதுங்க 50 ரூபாயும் சொச்சம்...

வே: பெரிய கோடீஸ்வரரு இவரு. சரியா...பார்த்துச் சொல்லுடா கழுதை!

சொ: 50 ரூபாயும், ஐந்தே முக்காலணாவும் ஆகுதுங்க!

வே: முருகா! அவனாலே கடன் கொடுக்க முடியலை யின்னா, அவன் குடியிருக்கும் வீட்டையாவது என் மேலே எழுதி வெச்சிடச் சொல்லு.

முரு: சரிங்க...நான் வர்றேனுங்க...

வே: முருகா! உன் மகள் கல்யாண விஷயத்தைப் பற்றி என்ன முடிவு செய்தே? வேறெங்கேயோ— மாப்பிள்ளை பார்த்திருப்பதாகச் சொக்கன் சொன் னானே?

முரு: எனக்கு கொடுக்கிறதுக்கு இஷ்டம்தானுங்க. ஆனா, பொண்ணுதான் மாப்பிள்ளைக்கு வயசாயிடுத்து என்று சொல்கிறாள்.

வே: இதென்னடா, ஊரிலே இல்லாத வழக்கம்? வய சானா... என்னவாம்! என்ன தெரியும் அதுக்கு? மாட்டேன்னுதான் சொல்லும். நீயல்லவா சரிப் படுத்தணும்?

முரு: மாப்பிள்ளைக்கு வயசு ஆயிட்டுதுன்னு கொழந்தை யோசிக்குதுங்க...

வே: வயசு ஆயிட்டதாமா? யாருக்குத்தான் வயசு ஆகாம இருக்காம்? ஏன், இவ மட்டும் என்னிக்கும் இப்ப டியே இருக்கப் போறாளாமா? முருகா! செங் கோட்டன் மகளுக்குக் கல்யாணம் ஆனதே, மாப் பிள்ளைக்கு என்ன வயசிருக்கும்? 60க்கு மேலிருக்கு மில்லே?

முரு: அந்தக் கிழவன் அடுத்த வருஷமே செத்துப்போயிட் டானுங்களே!

வே: அவன்தானே செத்தான். அவன் எழுதி வச்ச மூணு காணி நிலம் அப்படியே இருக்குதில்லே. அதுவுமா... போயிடுச்சு. (அமிர்தத்தைப் பார்த்து) அமிர்தம்! என்ன நீ, தகப்பனுக்கு மிஞ்சின பிள்ளையாகிட்டை யாமே?

அமிர்: அப்படி ஒன்றுமில்லிங்களே...

வே: நாலு பெரிய மனிதர்கள் பார்த்து, நல்ல காரியத்தை முடிக்கும்போது நீ யார், அதைத் தடுக்கிறதுக்கு? இந்தா அமிர்தம்! கல்யாணங் காட்சியை முடித்து வைப்பது பெரியவங்க காரியம். வயிசாயிடுதது, அது இது என்று என்னென்னமோ சொல்றியாமே!... சரி, போ! போய் வேலையைப் பாரு. முருகா! இதுகளெல்லாம் இப்படியேதான் சொல்லிக்கிட்டே இருக்குங்க. நாமும் சரி, சரியென்று மேளத்தை வச்சி கழுத்திலே தாலியைக் கட்டியாச்சுன்னா... எல்லாம் சரியாப் போயிடும். இதுக்கென்னமோ, எனக்கு இஷ்டம்தான், பொண்ணுக்குத்தான இஷ்டமில்லே என்று பாடறே. சரி, சரி! எல்லாம் ஒழுங்கா நடக்கட்டும். நீ போ...

முரு: வாரேனுங்க...

காட்சி—13.

இடம்: வேதாசலம் வீடு.

இருப் சரசா, அமிர்தம், மூர்த்தி.

சரசா: என்னடி இது? காலா காலத்தில் வருவதில்லை? ஏண்டி இப்படிக் கண்ணைக் கசக்கிட்டு வந்து நிற்கிறே?

அமிர்: நான் என்னத்தையம்மா சொல்றது! எஜமான் நீதியும் நியாயமுமா பேசவார்னு பார்த்தேன். அவர் எங்கப்பாவுக்குப் பக்க மேளமடிக்கிறார்.

சரசா: என்னடி சொன்னார் அப்பா?

விமிர்: நான் கிழவனைத்தான் கட்டிக்கினமாம்!

சரசா: ஹூம், அப்புறம்?

அமிர்: வயசானா என்னடி! நீ மட்டும் இப்படியே இருக்கப் போகிறாயா என்று கேட்கிறார்.

சரசா: (ஏளனமாக) அப்புறம்...

அமிர்: இன்றைக்கு வருகிறார்களாம் பெண் பார்க்க. தலை சீவிக்கிடணுமாம்; புதுச் சேலையாம்! கூத் தாம! வயிறு எரியுதம்மா...

சரசா: வயிறு எரியுதாம்மா! ஐயோ...இவ. பெரிய ராஜகுமாரி! போடி, போய் வேலையைப் பார். பெரிய ராணி இவள். இவளைக் கட்டிக்கிடறதுக்கு ராஜா வரப்போகிறான். அந்தஸ்துக்கு தகுந்த மாதிரி தானடி இடம் அமையும். உங்க அப்பன், எங்க அப்பா கிட்டே விவசாயம் பார்த்து உன்னை வளர்க்கிறான். நீ எங்க வீட்டு வேலைக்காரி. இந்தப் டவிசுக்கு தலை நரைச்சுப் போச்சே என்று பார்த்தா முடியுமாடி! தலை நரைச்சா என்னடி? காசு பணம் இருந்தா போதாது?

அமிர்: இஷ்டமில்லாத இடத்திலே வாழ்க்கைப்பட்டா வேதனையாக இருக்காதாம்மா?

சரசா: ஏண்டி, இஷ்டமில்லை? எவனாவது பெரிய இடத் துப் பயல் அப்படி வலை கிலை வீசினானா?

[மூர்த்தி வருகிறான்.]

மூர்த்தி: சரசா! அந்தப் பொண்ணு என்னமோ தன் வயிற்றெரிச்சலைச் சொன்னா, எரிகிற நெருப்பிலே எண்ணெய் வார்க்கிற மாதிரி பேசுகிறாயே! உனக்கு நியாயமா?

சரசா: எல்லா நியாயமும் எனக்குத் தெரியும். இதில் நீ தலையிடாதே!

[சரசா போகிறாள்.]

மூர்த்தி: அமிர்தம்! இந்தக் கலயாணத்தில் துளிகூட உனக்கு இஷ்டமில்லையே?

அமிர்: துளிகூட இஷ்டமில்லீங்க...

மூர்த்தி: அப்படின்னா...நான் சொல்கிறபடி செய்கிறாயா?

[மாறுவேடச் சாமான்களைக் கையில் கொடுக்கிறான்.]

காட்சி—14.

இடம்: முருகன் வீடு.

இருப்: முருகேசன், அவன் மனைவி முத்தாயி, மாப்பிள்ளை, மற்றும் பெண் பார்க்க வந்தவர்கள் ஆகியோர்

தலைமைக் குடியானவன்: முருகேசா! இந்தாப்பா... இரத்தின ஜமுக்காளம்.

முரு: எதுக்குங்க?

த.குடி: வர்ர மனுசாளை மரியாதை செய்து அனுப்பணும் பாரு. முருகேசா! வர்ரவுங்க யாரு?

முரு: மாப்பிள்ளையோட தம்பியும் தங்கச்சியும் வர்ராங்க...

த.குடி: இன்னும் வேற ஏதாவது வேணுமா?

முரு: வேண்டாமுங்க.

த.குடி: செலவுக்கு ஏதாவது வேணுமா?

முரு: இருக்குதுங்க...பத்து ரூபாய் இருக்குது...

த.குடி: அப்போ நான் வரட்டுமா?

முரு: சரிங்க...ஏ புள்ளே முத்தாயி! குழந்தையைக் கூப்பிடு. தலை கிலை சீவி, பொட்டு கிட்டு வச்சி... அடடே, அவுங்களே வந்துட்டாங்க புள்ளே!...வாங்க, வாங்க! நம்ப வீட்டிலே எல்லோருமா சௌக்கியம்தானுங்களே?

மாப்பிள்ளை தம்பி: சௌக்கியந்தானுங்க!

முத்: விருந்தாளிங்க வந்துட்டாலே கால் ஓடமாட்டேங்குது; கை ஓடமாட்டேங்குது...

முரு: உட்காருங்க...பரவாயில்லை. உட்காருங்க... இது உங்க வீடு மாதிரி நினைச்சுக்கங்க...

மா.தம்பி: நம்ம வீட்டிலேயும் எல்லோரும் சௌக்கியம் தானுங்களே...

முரு: சௌக்கியந்தான்...வெத்திலை போடுங்க.

மா.தம்பி: அதுக்கென்ன, போட்டாப் போகுது. தட்டை காணோமுங்களே.

முரு: ஏ புள்ளே முத்தாயி! அந்த வெத்திலைத் தட்டை கொண்டு வாடி.

மா.தம்பி: உங்க எஜமான் கல்யாண விஷயத்தைப் பத்தி என்ன சொன்னாரு?

முரு: அவர் சொன்னாரு. சரி, வெத்திலை போடுங்க.

மா.தம்பி: பாக்கு இல்லீங்களே.

முரு: இல்லீங்களா! ஏ புள்ளே முத்தாயி...

முத்தாயி: என்னாங்க?

முரு: பாக்கு கொண்டுவாடி!

முத்: பாக்கா... விருந்தாளி என்றாலே... தலை கிர்ருனு சுத்துதப்பா!

முரு. ஏ, பிள்ளை முத்தாயி...

முத்: என்னங்க?

முரு: அந்தக் காப்பித் தண்ணியைக் கொண்டுவாடி.

மா.தம்பி: எஜமான் என்ன சொன்னாரு?

முரு: அவரு சொன்னாரு...மாப்பிள்ளைக்கு கொஞ்சம் வயசாயிடுச்சி என்றார்.

மா.தம்பி: அப்படி ஒண்ணும் வயசாயிடலீங்க.

மா.தங்: ஐம்பதுக்கு மேலே ஐந்தோ பத்தோதான் அதிகம் இருக்கும் ...

முரு: சரிதான்! போகிற வயசு...

முத்தாயி. இந்தாங்க காப்பி...

முரு: சாப்பிடுங்க...

மா. தம்பி அதுக்கென்ன, சாப்பிட்டாப் போகுது (காப்பி கொட்டி விடுது)

முரு: ஏ, புள்ளே! இப்படித்தான் காப்பியை கொதிக் கக் கொதிக்க கொண்டு வர்ரதோ? (கோபமாக)

மா. தம்பி: பரவாயில்லை; விடுங்க...கொஞ்சம் பெண்ணைக் கூப்பிடுங்க...பார்க்கலாம்...

முரு: அமிர்தம்...அமிர்தம்...

முத்தாயி: அது ரொம்ப கூச்சப்படுதுங்க. மூலையை விட்டுக் கிளம்பமாட்டேங்குது...

முரு: சிறுசுதானே! எல்லாம் போகப் போக சரியாப் போய்விடும். முத்தாயி! நீ சாப்பாட்டுக்கு வேண்டியதெல் லாம் கவனி. நான் கொஞ்சம் வெளியே போயிட்டு வர்ரேன்

மா. தம்பி: பாக்கியம்! நானும் வெளியே போயிட்டு வர்ராப்போல வர்ரேன்; நீயும் பெண்ணைக் கூப்பிட்டு, பார்க்கிறாப்போல பாரு. அது நல்ல லட்சணமா? குணமா? மணமா?...

மா. த: ஆகட்டும் அண்ணேன்...அமிர்தம்! கண்ணு அமிர்தம் வாம்மா. அவுங்க வேறு யாருமில்லே...கூச்சப் படாதே! வாம்மா வா. அடேயப்பா! இவ்வளவு கூச்சமா? என்னிக்கு இருந்தாலும் நீ நம்ப வீட்டிலே வாழப் போகிற வள்தானே...வாம்மா (முகத்தில் மூடியிருந்த துணியை எடுத்துக் கொண்டு) அடப்பாவி, இதைக் காட்டத்தானா இந்த மனுசன் பறந்து வந்தான்! கண்ணைப் பாரு, கோழி முட்டைக் கண்ணு; கோடாலி பல்லு. இதைக் காட்டத் தானா இவ்வளவு பசப்பு?

முத்தாயி: என்னம்மா இங்கே சத்தம்? எங்கே புறப் பட்டுட்டே?

மா.த: வந்த வேலை ஒரு வகையாய் முடிஞ்சிருச்சு. போறேன். பொண்ணு காட்ட வந்துட்டாங்களாம் பொண்ணு. உன் விடியா மூஞ்சி பொண்ணை நீயே வெச்சிக்கோ.

முத்தாயி: என்னடி உளர்ரே உன் பாட்டுக்கு!

மா.த: நானாடி உளர்ரேன்; நீதாண்டி உளர்ரே ..

முத்தாயி: போகுது போகுது என்று விட்டா மேலே மேலே போறியே...நாக்கை உள்ளே வச்சு பேசு...

மா.த: நாக்கு உள்ளேதான் இருக்கு; உன் மகள் மாதிரி நீண்டுக்கிட்டா இருக்கு?

முத்தாயி: என்னடி சொன்ன? என் மகளுக்கு பல் நீண்டுக்கிட்டு இருக்கா? உனக்குத்தாண்டி நீண்டுக்கிட்டு இருக்குது. இவ பவுசுக்கொரு கொண்டை; காலுக்கு வேறே தண்டை; பெண் பார்க்க வந்துட்டாளாம் பெண்ணை... போடி. .

[மாப்பிள்ளை தம்பி வருகிறார்]

மா.தம்பி: என்னடிஇது!அவளைஎன்னவென்று நினைச்சுக்கிட்டே! இல்லை, என்னைத்தான் என்னவென்று நினைச்சுக்கிட்டே?

முத்தாயி: அட, அறிவு கெட்டவனே!அவளைப்போலத் தான் இவனும் பேசுறான். வீட்டிலே என்ன நடந்தது, ஏது நடந்தது என்று கேட்டா ..இவள் என்ன சொல்றது!

மா. தம்பி: இந்தா ..மரியாதையாகப் பேசு.

மா. த: நீ சும்மா இரு அண்ணே; இந்த வீட்டிலே பெண் பார்க்க வந்ததுக்கு நம்ம புத்தியைச் செருப்பாலே அடிச்சிக்கிடணும்...

[முத்தாயி செருப்பைத் தூக்கி எறிகிறாள்.]

முத்தாயி: இந்தாடி... அடிச்சுக்கோ...

மா. தம்பி: இன்னும் ஏதாவது தூக்கிப்போட்டே....

[போகிறார்கள்]

[முருகேசன் வருகிறான்]

முத்தாயி: இது கெட்ட கேட்டுக்கு இரவல் ஜமுக்காளம் வேறு

முரு: ஏ புள்ளே முத்தாயி! என்னடி இது?

முத்தாயி: கேட்டிங்களா... சமாச்சாரத்தை? அந்தக் குச்சுக்காரி வந்தாளே... அவ...

முரு: விருந்தாளிகள் எங்கேடி புள்ளே?

முத்தாயி: அவங்க எழுவெடுத்து நாசமாப் போக...

முரு: என்னடி புள்ளே, சபிக்க ஆரம்பிச்சுட்டே!

முத்தாயி: அந்தக் கொண்டைக்காரி வந்தாளே, அவ, 'உன் விடியா மூஞ்சி பிள்ளை எனக்கு வேண்டாம். 'அப்படி—இப்படி' என்று சொல்லி, என்னை வாயில் வந்தபடி பேசி, என் பவுசை வாங்கிட்டா.

*[முத்தாயி அழ ஆரம்பித்துவிட்டாள்.]*

முரு: அமிர்தம்! என்னம்மா இது? உங்கம்மா கதற கதறல் என் காதைக் குடையிது. என்னம்மா நடந்தது?

அமிர்: ஒன்றுமில்லேப்பா.. அந்தம்மா என்னைக் கூப்பிட்டாங்க. போனேன். உடனே, 'அடி ஏண்டி, உன் கண்ணு இப்படிப் போயிருக்குது? பல்லு ஏண்டி இப்படி நீண்டுக்கிட்டு இருக்கு?' என்று என்னென்னமோ சொன்னாளப்பா...

முரு: அப்படியா சொன்னா... அடிப்பாவி! கண்ணு இருக்கு, அரிக்கன்லைட் மாதிரி; பல் இருக்குது பச்சரிசி மாதிரி! விட்டேனா பார் அவளை?

முத்தாயி: ஏ, எங்கே போறே?

காட்சி—15

இடம்: நந்தவனம்

இருப்: மூர்த்தி, அமிர்தம், சரசா.

*[நந்தவனத்தில் மூர்த்தியும் அமிர்தமும் சந்திப்பு]*

மூர்த்தி: அமிர்தம்! பலித்ததா நான் சொன்ன யோசனை?

அமிர்: ஓ! ஒரே நிமிஷத்தில் ஏச்சிப்பிட்டேன் அவர் களை...

மூர்த்தி: அமிர்தம்! நான் உனக்கு இவ்வளவு உதவி செய்தேனே; நீ எனக்கென்ன தரப்போறே?

அமிர்: நீங்க பெரிய இடத்துப் பிள்ளை; நான் உங்க வீட்டு வேலைக்காரி; என்னாலே உங்களுக்கு என்ன தர முடியும்?

மூர்த்தி: அமிர்தம்! நான் ஒன்று கேட்கிறேன்...கோவி சுக்கிடாமே பதில் சொல்றியா? உனக்கு இங்கே யாரு மேலாவது ஆசை இருக்கா?

அமிர் எல்லோர் மேலேயுந்தான ஆசையிருக்கு.

மூர்த்தி அதைக் கேட்கல்லே அமிர்தம். உன் மனதிலே யார் மேலாவது ஆசையிருக்கா என்று கேட்டேன்.

அமிர் மனதிலே கூத்தாடும பதினாயிரம் எண்ணங்கள்.

மூர்த்தி அமிர்தம்! நீ குடத்தைத் தூக்கிக்கிட்டு வளைந்து வளைந்து நடப்பாயே, அது மாதிரி வளைந்து வளைந்து பேசுறே!

அமிர். பாரத்தைச் சுமக்க முடியாமல்தான் அப்படி நடக்கிறேன். அதேபோல, நெஞ்சிலேயும் பாரம் இருந்தா நாக்கு வளையத்தானே செய்யும்?

மூர்த்தி: என்னை ஒரு சுமைதாங்கியெனறு நினைச் சுக்கிட்டாவது உன் மனதிலே இருக்கிற பாரத்தை என்னி டம் சொல்லப்படாதோ?

[சரசா வருகிறுள்]

சரசா: ஏண்டி, அமிர்தம்! இன்னிக்குக் காலையிலிருந்து என்ன வேலையைத்தான் செய்திருக்கிறாய்?...மூர்த்தி!

ஒரு வேலைக்காரி கிட்டே கொஞ்சுவதும், குலாவுவதும் வேலையாய் போய்விட்டது உனக்கு! (அமிர்தம் குடத்தைக் கீழே போட்டுவிடுகிறாள்.) ஏண்டி! குடத்தை இப்படிக் கீழே போட்டிருக்கியே, யார் வீட்டுச் சொத்தடி இது?

அமிர்: ஏன் அக்கா, இப்படியெல்லாம் பேசுறீங்க?

சரசா: அக்காவாம், அக்கா! இந்தாடி...இனிமே... என்னை இந்த மாதிரிக் கூப்பிடாதே; இதே பழக்கந்தானே நாளைக்கு நாலு பெரிய மனுசங்க வந்திருக்கும்போதுகூட வரும்? போடி, போய் வேலையைப் பார்!

மூர்த்தி: பஞ்சவர்ணக் கிளியைப் பிடித்துக் கொஞ்சி விளையாடலாம் என்று எண்ணிப் பனைமரம் ஏறும்போது பறந்தோடிவிட்டது, ஜாதிபேதமென்கிற கூண்டுக்கு; தரித்திரக் கம்பிகள் வேறு; என்ன உலகம் இது?

காட்சி—16

இடம் கோவில்

இருப்: ஆனந்தன், மணி, காளி, மற்றும மணிக்கு கடன் கொடுத்தவர்.

க. கொ: டேய்! நீ என்கிட்டே பணம் வாங்கலையின்னு காளி முன்னாலே கற்பூரத்தை அணைத்திடு பார்க்கலாம்...

மணி: இப்ப சொன்ன பாரு, அது சரி! வா, போக லாம்.

க. கொ: (சூடத்தைக் கொளுத்தி) டேய்! எங்கே அணை பார்க்கலாம்.... லேசிலே உன்னை விடமாட்டேன். ஆமா...

மணி: இந்தக் காளி அறிய சொல்லுகிறேன். உன்கிட் டேயிருந்து கால் காசு வாங்கலே (சூடத்தை அணைக்கிறான்) போதுமா?

க. கொ: அடப்பாவி! அணைச்சுட்டியா? காளி எதிரிலே பொய் சத்தியம் பண்றியே, நீ உருப்படுவியா?

மணி: இந்தாப்பா...அதிகமாய்ப் பேசாதே! கற்பூ ரத்தை அணைக்கச் சொன்னே...அணைச்சுட்டேன்...தீர்ந்து போச்சு...போ!

க. கொ: காளியாயி! இதை நீதான் கேட்கணும்!

ஆனந்: மணி...!

மணி: ஆனந்தா! நீயா?

ஆனந்: மணி! காளி முன்னாலே கற்பூரத்தை அணைச் சியே, உண்மையைச் சொல்! நீ அவன் கிட்டேயிருந்து பணம் வாங்கலையா?

அணி: அவன் ஒரு முட்டாள்; அவன் தம்பி நீ! நான் என்ன சொல்லிக் கற்பூரத்தை அணைச்சேன்? கால்காசு வாங்கலை என்று சொன்னேன. ஆனால் வாங்கினது எவ் வளவு? முள்ளங்கி பத்தை மாதிரி ஐந்து ரூபாய் வாங்கினேன். அதை இப்போதே கேட்டான். இப்போதில்லை; பிறகு ஆகட் டும் என்று சொன்னேன். கேட்கலை; மென்னிப்பிடி பிடிச் சான். இப்போ பார்..வாயை மூடிக்கொண்டு போகிறான்...

ஆனந்: மணி! இது பாவம்; காளி உன்னை சும்மா விடு வாளா?

மணி: சும்மா...விடாம பின்னாலயா சுத்திக்கிட்டே யிருப்பா.

ஆனந்: மணி! அப்படியெல்லாம் சொல்லாதே; நான் வாரேன்.

மணி: பைத்தியக்காரன்

காட்சி—17

இடம்: வேதாசல முதலியார் வீடு

இருப்: சொக்கன், வேதாசலம், ஊரார் கூட்டம்.

வே: காளி! மகமாயி! லோகமாதா!

சொக்: நீங்க ஜமீன்தார் ஆனதுக்கு மரியாதை செய்ய வந்திருக்காங்க...

வே: தெரியுது...உங்க ஜமீன என மேலே விழுமென்று நினைக்கவே இல்லை. அந்தப் பாவி, உங்க பழைய எஜமான் வாங்கின கடனைத் திருப்பிக் கொடுக்க முடியாம இதைக் கட்டிவிட்டுப் போனான் என் தலையிலே...

கும்பலில் ஒருவன்: இந்த ஜமீன் அவர் கைவிட்டுப் போனது காளியாத்தா புண்ணியம் என்று ஊராரெல்லாம் ஒரே சந்தோஷப்படுறாங்க.

வே: நானும் அதற்காகத்தான் கோவிலுக்கு அபிஷேகம் செய்ய ஏற்பாடு செய்திருக்கிறேன்...ஆனால் ஒன்று. நீங்க அவன் தலையில் மிளகாய் அரைச்ச மாதிரி என்கிட்டே நடந்துக்கிடாதிங்க. .

சொ: ஆமா! அப்படி ஏதாவது நடந்தீங்க...அப்புறம் எஜமான் ஆளே மாறிப் போய்விடுவார். ஜாக்கிரதை

வே: சீ, கழுதை! வாயை மூடு! நான் கொஞ்சம் கண்டிப்பான பேர்வழிதான் ஏன்னா, கஷ்டப்பட்டு சம்பாதிச்ச பணம்...

ஒருவன்: நாங்க அப்படி தப்பு தண்டாக்களுக்குப் போக மாட்டோமுங்க எஜமான் அப்படி கொஞ்சம் ஜமீன பக்கம் வரணும என்று எங்களுக்கெல்லாம் ஒரே ஆசையா.. இருக்குங்க!

வே: அதுக்கென்ன, போகாம இருக்க முடியுமா? எல்லோருமா சேர்ந்து கோவிலுக்குப் போய் அபிஷேகததை முடிச்சுகிட்டு, அப்புறம் ஜமீனுக்குப் போகலாம்.

ஜனங்கள்: சரிங்க.

காட்சி—18.

இடம்: பாதை

இருப்: ஆனந்தன், ஆனந்தனுக்குக் கடன் கொடுத்தவன்.

ஆனந் இன்றைக்குக் காலையில்தானுங்க வச்சிருந்த காசையெல்லாம் காளிக்கு சுண்டல் செய்யக் கொடுத்துட்டேனுங்க.

க. கொ: என்னடா... நான் தந்த கடனைக் கேட்டுக்கிட்டே இருக்கேன். நீ என்ன, கிண்டலா பண்றே? நடடா, நீ வேலை செய்கிற இடத்துக்கு! உன் முதலாளிகிட்டே சொல்லி, உன் சமபளத்திலே யிருந்து கொடுக்கிறதாக இதிலே கையெழுத்துப் போடச் சொல்லுடா. .

ஆனந்: இன்னிக்குக் காலையில்தானுங்க என்னை வேலைக்கு வேண்டாம்னு துரத்திட்டாங்க...

க கொ: அடப்பாவி! என தலைமேலே வேறே கல்லைத் தூக்கிப் போட்டிட்டையடா. ஏண்டா! நீ கடையிலே இருக்கிறே என்று நம்பித்தானடா உனக்குக் கடன் கொடுத்தேன்.

ஆனந்: நானும் எனனமோ கடையிலே வேலை பார்க்கிறேம்! கொடுத்திடலாம் எனறுதானுங்க தைரியமா வாங்கினேன்...

க. கொ: நீ பேச்சு மட்டுமாடா பேசுவே! காளி—கீளி என்று வேஷம் போடறே.. மனுஷனாடா நீ? மானமில்லை? வாங்கின கடனைக் கொடுக்க வழியில்லேன்னா...எங்கேயாவது திருடப் போகிறதுதானேடா...அட, அதுதான் இல்லேன்னா...எங்கேயாவது தூக்குப் போட்டு உங்க அப்பனை மாதிரி சாகிறதுதானேடா.

[அடிக்கிறார் ஆனந்தனை]

காட்சி—19

இடம்: பொது வழியில் ஒரு மரம்.
இருப்: ஆனந்தன், மணி.

[ஆனந்தன் விரைவாக தூக்குப் போட்டுக் கொள்வதற்காக ஒரு மரத்தினடியில் போகிறான்]

மனச்சாட்சி: மரக்கிளையில் பிணம. உன் தந்தையின் பிணம். அவர் செத்தார், அக்கிரமக்காரர்களின் பணத் தாசையினால். அவன் வாழ்கிறான். நீ சாவதா? இல்லை. நீ வாழவேண்டும்; உன் தந்தைக்காக நீ வாழத்தான் வேண்டும். நயவஞ்சகர்களுக்கு நல்ல பாடம் கற்பிக்க நீ வாழத் தான வேண்டும்.

[மணி சைக்கிளில் வருகிறான். வழியில் மரம் கிடக்கிறது]

மணி: நான்சன்ஸ்! போகிற பாதையில் மரமும் மண்ணாங்கட்டியும். ஆனந்தா! ஏய், ஆனந்தா! என்ன இது?

ஆனந்: மணி! இந்த உலகத்தில் ஏழைக்கு வாழ இடமில்லையா? உழைப்பவனுக்கு இங்கு வாழ உரிமையில்லையா?

மணி: என்னப்பா நடந்தது? எழுந்திரு!

ஆனந்: எல்லாம் நடந்துவிட்டது. வேலை போயிற்று. மானம் போய்விட்டது. கடன் கொடுத்தவன் நாயைப்போல ஏசினான். உனக்கு மானமில்லையா என்று கேட்டான்...

மணி: பாவம். அனுபவமில்லாதவன்! உன்னை யாரோ கோட்டா பண்ணிவிட்டிருக்கிறார்கள்.

ஆனந்: மணி! அவன் சொன்னது அவ்வளவும் உண்மை. இனி நான் எங்கேயாவது திருட வேண்டும் அல்லது பிச்சை எடுக்க வேண்டும் அல்லது எங்கேயாவது விழுந்து சாகவேண்டும். மாகாளி! உன் மகனை இக் கோலத்தில் வைக்கலாமா? மார்கழி மாத பூஜைக்காக மார்பு உடைய சம்பாதிச்சேனே! என்னை இக்கதிக்கு ஆளாக்கலாமா?

மணி: காளியின் வரப்பிரசாதம் கிடைக்குமென்று தவம் கிடந்தாய். ஆனால் உனக்குத் தெரியுமா ஆனந்த்; காளியின் அருள் யாருக்குக் கிடைத்ததென்று?

ஆனந்· எந்தப் புண்ணிவானுக்குக் கிடைத்ததோ, அந்தப் பாக்கியம்?

மணி: சாதாரணமானதல்ல அந்தப் பாக்கியம்! ஒரு ஜமீன்! பெரிய கிராமம்! காளியை அவன் கும்பிடுவதில் அர்த்தமிருக்கிறது அனனக் காவடி நீ! அவளை விழுந்து விழுந்து கும்பிட்டாய்...கால் வலிக்குமே தவிர, வழி ஒன்றும் கிடைக்காது...

ஆனந்: யாருக்கு மணி கிடைத்தது, காளியின் அருள்?

மணி: உயர்திரு வட்டியூர் ஜமீன்தார் வேதாசல முதலியாருக்கு...

ஆனந்: ஹா! அந்தப் பாதகனுக்கா கிடைத்தது? அவன் செய்த பாவங்களுக்கு அவன் கண்களைக் குருடாக்க வேண்டும்; அவன் கால்களை நொண்டியாக்கி இருக்க வேண்டுமே! அவனுக்கா... காளியின் அருள் கிடைத்தது?

மணி: ஆமாம்பா ஆமா... காளியின் அருள் கிடைத்த சந்தோஷத்தினால்தான் இன்று காளி கோவிலில் அமர்க்களமாய் பூஜை நடக்கிறது. இன்று மாலை தேவிக்கு! பணியாரம்—பாயாசத்தோடு விருந்து பக்தர்களுக்கு! போய்ப் பாரப்பா, அந்த வைபவத்தை! போய்ப் பார்!

[மணி போகிறான்.]

ஆனந்: காளியின் அருள்? மோசக்காரனுக்கா அருள்? அதற்குப் பூஜை? பாவி நடத்தும் பூஜை! பஞ்சமா பாதகன் நடத்தும் பூஜை! வஞ்சகன் நடத்தும் பூஜை...

[கோபமாகப் போகிறான் கோவிலுக்கு]

காட்சி—20.

இடம்: காளி கோவில்
இருப்: வேதாசலம், சொக்கன்

[காளி கோவிலில் பூஜை நடக்கிறது]

வே: டேய், சொக்கா! பார்த்தியாடா...

சொ: பஸ்டுங்க..

வே: சீ, கழுதை! அதையாடா கேட்டேன? வாசிப் பதைக் கேட்டு மெய்மறந்து நிற்கிறானே பக்கிரிசாமி—அவன் கொடுக்க வேண்டிய போன மாதத்து வட்டிப் பணம் இன்னும் வந்து சேரல்லையடா.

சொ: ஆமாங்க ..கேட்கல்லங்க. சமயம் கிடைக்கிற போது கேட்டு வாங்கிடணுங்க..

வே: இந்த மாதிரியெல்லாம் இருந்தா உருப்படாதுடா! இன்னிக்கு மட்டும் ஆயிரம் ரூபாய்க்கு மேலே செலவழிஞ்சு போச்சுடா கழுதை...

[பூஜை முடிந்து வேதாசல முதலியார் உட்பட எல்லோரும் போகிறார்கள். அவர்கள் போன வுடன் ஆனந்தன் வருகிறான்.]

காட்சி—21.

இடம்: காளி கோயில்
இருப்: ஆனந்தன், மணி.

ஆனந்: பக்தன் வந்திருக்கிறானே, பூஜை வேளை தவறி, ஏன் என்று பார்க்கிறாயா? ஏ, காளி! உன்னையே நம்பித் தவம் கிடந்த என்னை, நீ கைவிடலாமா? மனிதர் கைவிட்டாலும் மாதா காப்பாற்றுவாள் என்று நம்பி இருந்த என்னை இக்கதிக்கு ஆளாக்கலாமா நீ? எவனுடைய சதியால், வஞ்சனையால் என் குடும்பம் நாசமாயிற்றோ அவனுக்காம்மா நீ அருள் புரிவது? இது முறையா? வேதாசல முதலி செய்துள்ள பாவங்களை நீ அறியமாட்டாயா? எத்தனை குடும்

பங்களைக் கெடுத்தான்? ஒரு பாவமும் அறியாத என் தகப்பனைக் கொன்றான் பாவி. அவனுக்கு நீ எப்படி அருள் புரிந்தாய்? அதற்கு எப்படி உன் மனம் இடம் கொடுத்தது?

தாயே! இதோ, பார் என்னை? ஏழையைப் பார்! உழைத்து உழைத்து உருக்குலைந்துபோன என்னைப் பார்! உன்னையன்றி வேறு கதியில்லை என்று நம்பி மோசம் போன என்னைப்பார்! நான் என்ன செய்தேன் உனக்குக் கேடு? ஆயிரம் கண்ணுடையாள் என்று அர்ச்சிக்கிறார்களே உன்னை, அதில் ஒரு கண்ணால் பார்க்கக்கூடாதா இந்த ஏழை படும் அவதியை! உன்னை பக்தியோடு பூஜித்தால் பலன உண்டு என்று சொன்னார்களே. நான் பூஜித்து கண்ட பலன் என்ன? எவன் என் குடும்பத்தைக் கெடுத்தானோ, அவனை ரக்ஷித்தாய் நீ. என் கால் வலிக்க உன் கோயிலைச் சுற்றினேன். என் வாய் வலிக்க உன் நாமத்தை பூஜித்தேன். மாதாவே, மாகாளி, மகேஸ்வரி, லோகநாயகி என்று உன்னை பக்தியோடு வேண்டினேன். வாழ வகையின்றி திகைத்தேன். கடன்பட்டேன். கல்லுடைத்தேன். மூட்டை சுமந்தேன். வண்டி இழுத்தேன். நான் பாடுபட்ட பணத்தை என் சுக வாழ்விற்கா செலவிட்டேன்? இல்லே! சூடம வாங்கினேன்; மாலையிட்டேன்; உனக்குப் படையல் படைத்தேன். என் பக்தியில் என்ன தவறு கண்டாய் சொல்! சகலருக்கும் தாய்தானே? ஏன் உனக்கு இந்த ஓர வஞ்சனை! என்னைப் போன்ற ஏழைகளை ஏன் இப்படித் துடிக்கச் செய்கிறாய்? ஏன் பலகோடி மக்களை பதைபதைக்கச் செய்து சிலரை மட்டும் சீராக்கி வைக்கிறாய்? கள்ளங் கபடமற்றவர்களை அனலில் புழுபோல் துடிக்கவைத்து சூது, வஞ்சனை, சதி செய்யும் சண்டாளர்களை ஏன விட்டு வைக்கிறாய்? (கால் தடுமாற்றம்)

மாலை! உனக்கு மலர்மாலை! பாதகன் அளித்த பல வகையான பழங்கள்! அக்கிரமக்காரன் அளித்த பரிசு. வகை வகையான படைப்பு, வஞ்சகன் கொடுத்த நெருப்பு, என்னைப் போன்ற ஏழைகள் உன் பக்கத்தில் வருவதைத் தடுக்கும் பரம சத்ருக்கள். இதோ பார்! ஏழை அழுத கண்ணீர்! ஏரி

யோர்களின் துயர்வு! ஏமாந்தவர்களின் ரத்தம். பக்தா! நீயா இப்படிப் பேசுகிறாய் என்று கேட்கிறாயா நீ? கேள், தைரிய மிருந்தால்! இருதய சுத்தியோடு பதில் கூறுகிறேன். கேள்! ஊரைக் கெடுப்பவன் உன்னை பூஜித்தால் அவனை ரக்ஷிப்பதா? உனக்கு நீதியின் லக்ஷணமே தெரியாதா? நீதிக்கும் நேர்மைக்கும் உனக்கும் நெடுநாள் பகையா? உனக்கு தர்ம தேவதை என்ற பெயர் தகுமா? என் பூஜையை ஏன் ஏற்றுக் கொண்டாய்? ஏற்றபின் திக்கற்ற எனை ஏன் தவிக்கச் செய்தாய்? என் உழைப்பை உண்டு கொழுத்தவன் என்னை வஞ்சித்தால், உனக்கு அடிமையாக இருந்து உழைத்ததற்குப் பலன்தான் என்ன? என் உழைப்பை உண்டு கொழுத்தாயே, உனக்குக் கருணை இல்லையா? நெஞ்சிலே ஈரமில்லையா என்று கேட்பேனல்லவா! அதுபோலவே உன்னைக் கேட்கிறேன். நீ செய்தது நியாயமா? ஏன் பேசாமல் இருக்கிறாய்! எங்கே என் கேள்விக்குப் பதில்? ஏழையைப் பணக்காரன் அடிக்கும்போது எப்படி ஏழை வாய் திறவாமல் இருக்கிறானோ அப்படித்தான் இருக்கிறாயோ நீயும்? ஏ காளி! ஏழையின் மனம் ஓர் எரிமலை! அதிலிருந்து கிளம்பும் ஜுவாலையைப் பார்! ஹ...ஹ...ஹ...ஹ...பார், ஜுவாலையை ஹ...ஹ...ஹ...ஹ...! (வெறிச்சிரிப்பு)

பாவம்! நீ என்ன செய்வாய்! நான்தான் பித்தன். உன்னையே நம்பிக்கிடந்தேன். அது என் பைத்தியக்காரத்தனம். நயவஞ்சகத்தால் வேதாசல முதலி கொழுத்தான். அது உன் அருளால் வந்தது என்று எண்ணினேன். அதுவும் என் பைத்தியக்காரத்தனம். ஆனால் எனக்கு இருந்த போதை தெளிந்தது.

[ஆட்கள் வந்து ஆனந்தனை விரட்டுகிறார்கள். ஆனந்தன் ஓடுகிறான்...அங்கு மணி சைக்கிளில் வருகிறான். ஆனந்தன் மணி மீது மோதுகிறான்]

மணி: யாரடா நீ? நில்லுடா! அடே, நீயா? ஆனந்தன்... என்ன இது?

ஆனந்: மணி, மணி! என்னைக் காப்பாற்று. ஆட்கள் துரத்திக்கொண்டு வருகிறார்கள். நான் எங்கேயாவது போய் ஒழியணும்.

மணி: என்ன, என்ன?

ஆனந்: அவசரத்தில் என்ன என்னமோ செஞ்சிட்டேன்!

மணி: ஏன், யாரையாவது கொலை செய்துவிட்டாயா?

ஆனந்: இல்லை...அவமானப் படுத்திவிட்டேன்.

மணி: யாரை! வேதாசல முதலியாரையா?

ஆனந்: இல்லை...காளியை!

மணி: ப்பூ! இவ்வளவுதானு...

ஆனந்: மணி! அதோ...ஆட்கள் வருவதுபோல் சத்தம் கேட்குது. நான் எங்கேயாவது சீக்கிரம் ஒளியணும்.

மணி: பயப்படாதே. அதோ தெரியும் கொல்லையைத் தாண்டிப் போனால் அதற்குப் பக்கத்தில் ஒரு பாழுங்கிணறு இருக்கிறது. அதிலே போய்ப் பதுங்கிக் கொள். வர்ர ஆட்களை நான் பார்த்துக் கொள்கிறேன். நீ போப்பா...

ஜனங்கள்: ஏம்பா! இந்தப் பக்கம் யாராவது ஒரு ஆள் வந்தானா?

மணி: ஓ, நில்லுங்கள்! சைக்கிளைத் தூக்கிக் கொள் கிறேன்...ஆளா? கட்டையும் நெட்டையும் இல்லாம நடுத் தரமா...

ஜனங்கள்: ஆமா, ஆமா! கருப்பும் சிகப்பும் இல்லாமே சாம்பல் நிறமாய் ஒரு ஆளு...

மணி: (வழியை மாற்றிக் கூறி) அடடே! இப்பத்தான் இந்தப் பக்கம்தான் போறான். ஓடுங்க, ஓடுங்க! நானும் வரேன்..

[மணி, ஆனந்தன் மறைவிடத்திற்கு வருகிறான்.]

ஆனந்: மணி, மணி! சீக்கிரமா வா! இங்கே ஒரு மூட்டை இருக்குது...

மணி: புதையலா?

இருவரும்: பிடி, தூக்கு, தூக்கு! (அவிழ்த்தால் பிணம்)

மணி: அடடே! எங்கப்பா ஓடறே! நில்லு ஆனந்தா! உன் அதிர்ஷ்டம் இருக்கிறதே, அது வேறே யாருக்கும் வராது. மூட்டையைத் தூக்கினால் பிணம். அசல் உன் மாதிரியே இருக்குது. எவன் இவனை இப்படிச் செய்திருப்பான்?

ஆனந்: எந்த வேதாசலம் இவனைப் பழி தீர்த்தானோ...

[அவன் பையிலிருந்ததை எடுக்கிறார்கள்.]

மணி: சட், கத்தை கத்தையாக காகிதம்; டைரி; செம்பால் அடிச்ச காசுகூட இல்லை. ஆனந்தா! டைரியில் என்ன எழுதியிருக்கு என்று பார்!

ஆனந்: மணி, இவன் சரித்திரம் எழுதியிருக்கு .

மணி: சரித்திரமா? எந்த ஊர் ராஜா? எத்தனை ராணிமார்? பாரப்பா பார்.

ஆனந்: கேலி இருக்கட்டும் மணி! இவன் பெரிய சீமான் வீட்டுப் பிள்ளை பெயர் பரமானந்தன்! மேவார் விலாசம்; இந்தப் பக்கம்தான்...

மணி: மேவார் விலாசமா? அப்படி ஒன்றும் இல்லையே! அங்கே ஒரு கிழம் அல்லவோ நடமாடிக் கொண்டிருக்கிறது;

ஆனந்: அது இவன் தாயார் ..படித்துப் பார்!

மணி: ஆனந்தா, ஒரு பிணம் உன்னை நடைப்பிணமாக்கிவிட்டது; இந்தப் பிணம் உன்னை லட்சாதிபதி ஆக்கப் போகிறது.

ஆனந் ஆ...உனக்கென்ன மூளை...

மணி: சுறுசுறுப்பாக வேலை செய்கிறது. கிணற்றுக்கு உள்ளே போனது பராரி ஆனந்தன்; வெளியே வந்தது பணக்கார பரமானந்தன்!

ஆனந்: என்ன, மணி! உனக்கென்ன, பைத்தியமா? நான் பரமானந்தனா?

மணி: ஆம்! பரமானந்தன் கொலை செய்யப்பட்டது நமக்குத்தானே தெரியும்?

ஆனந்: அதனாலே ..

மணி: நீ பரமானந்தனாக ஊரில் உலவ வேண்டும். இனி அவனுக்குப் பதிலாக நீ நேராக மேவார் விலாசத்தில் நுழையவேண்டும், பரமானந்தனாக. நான் உனக்குப் பிரைவேட் செக்ரட்டரி...

ஆனந்: மணி! உனக்கென்ன, உடம்பு ஊறுகிறதா?

மணி: இல்லை. உன் வாழ்க்கை மாறுகிறது. பொருள் இல்லாமல் புலம்பினாய். இனி போக போகத்தில் புரளப் போகிறாய். முன்பு வேதாசலத்தால் வேதனை அடைந்தாய். இனி அவனை நீ வெல்லலாம்...

ஆனந்: எப்படி மணி?

மணி· என் அப்பன் பிணநாதன் அருளால்!

ஆனந். மணி! உனக்குப் பைத்தியம்! வேஷம் ஊரை ஏமாற்றும். அவன் தாயார். .

மணி: நமக்கு அந்தக் கஷ்டததை வைக்கவில்லை. அந்த அம்மாளுக்கு இரண்டு கண்களும் குருடு.

ஆனந்: உனக்கு எப்படித் தெரியும்?

மணி: மற்றதெல்லாம தெரிந்ததுபோல! அந்த அம்மாளுக்குக் கண் சௌக்கியமில்லாமலிருந்து ஆப்ரேஷன் செய்து கண் குருடானது எல்லாம் டைரியில் இருக்கிறது.

ஆனந்: மணி, அப்படியானல் நான் பரமானந்தனாக நடித்தால் நம் சூது வெளியாகாதே?

மணி: ஆகாது, ஆகாது. பக்கத்துணை நான் இருக்கிறேன். நீ எதற்கும் கவலைப்படாதே. நான் போய் உடைகளெல்லாம் வாங்கி வருகிறேன். அதுவரைக்கும் யார் கண்ணிலேயும் தென்படாதே. இதைப் பற்றி மூச்சுகூட விடாதே. அதிர்ஷ்டம் வந்து அணைத்துக் கொள்ளும்போது அடிமுட்டாளாக இருக்காதே. நான் சொன்னது ஞாபகமிருக்கட்டும். போகுமுன்பு இதற்குப் போடப்பா (பிணத்திற்கு) நாலு கும்பிடு.

காட்சி—22

இடம்: பாழுங் கிணறு அருகில்

இருப்: மணி, ஆனந்தன்

[ஆனந்தன் மணி புதிய உடைகள் வாங்கிப் போட்டுக் கொண்டு வருகிறார்கள்.]

மணி: இடியட்! ஓ, நீயா? ஆனந்தா கவனி. டைரியில் உள்ள விஷயங்கள் நனறாக ஞாபகமிருக்கட்டும். கிழவியின் ஒரே மகன் நீ. 10 வருஷ காலமாக சொந்த வீட்டை விட்டுப் புறப்பட்டு லண்டன், பாரீஸ் முதலிய இடங்களைச் சுற்றி இருக்கிறாய், தாயாருக்கு கண் ஆப்ரேஷன் என்று தெரிந்ததும், சொந்த ஊருக்குத் திரும்பி இருக்கிறாய். ஹூம்...ஞாபகத்தில் வைத்துக் கொள்...

ஆனந்: மணி! பரமானந்தன் கொலையின் காரணம் என்ன என்று பார்த்தோம் டைரியிலே?

[மணி பார்க்கிறான்]

மணி: விலை உயர்ந்த வைரங்கள் அவனிடம் இருந்தன. அதை உளவு தெரிந்தவன் எவனோ அவனைக் குளோஸ் பண்ணி முடியிருக்க வேண்டும். அதைப்பற்றி உனக்கென்ன கவலை! மனுஷன் உனக்காகத்தான் 'அவுட்' (out) ஆகியிருக்கிறான். வா, போகலாம்...

[ஆனந்தன், மணி இருவரும் மேவார் விலாசத்தில்.]

காட்சி—23

இடம்: பரமானந்தன் இல்லம்

இருப்: பரமானந்தன், தாயார், ஆனந்தன், மணி.

பர: பரமானந்தா! இத்தனை வருஷம் கழித்தாகிலும் வந்து சேர்ந்தாயே, அதுவே போதும். பரமானந்தா! இந்தப் பத்து வருஷம் நான் கஷ்டப்பட்டது போதும்! இனிமே இந்தப் பாரத்தை என்னாலே தாங்க முடியாது.

மணி: அம்மா! இனிமேலுமா உங்களுக்கு அந்தக் கஷ்டத்தை வைப்போம்? இனிமே வீட்டை விட்டுப் போறதில்லை என்று உங்க பிள்ளைகிட்டே சத்தியம் வாங்கிக்கிட்டேன்.

ப.தா: தம்பி, நீ யாரப்பா? நல்ல பிள்ளையாண்டானாக இருக்கிறாயே! உன் பெயரென்ன தம்பி?

பர: அம்மா! அவன் என் நண்பன். பெயர் மணி.

மணி: ஆமாம்மா! சிநேகிதனுக்குச் சிநேகிதன். செக்ரட்டரிக்கு செகரட்டரி.

ப.தா: என்னமோப்பா... உங்களையெல்லாம் பார்க்கிறதுக்கு எனக்குக் கொடுத்து வைக்கவில்லே. பரமு! நீ நல்லபடியாக வந்து சேர்ந்ததுக்கு, காளி கோவிலுக்கு ஒரு அபிஷேகம் செய்யலாம்னு இருக்கேன்.

பர: (கோபமாக) காளி கோவிலுக்கு அபிஷேகமா?

மணி: அம்மா! அபிஷேகம் எதற்கு? ஒரு பஸ்ட் கிளாஸ் டீ பார்ட்டி வைப்போம். நாலு பெரிய மனுஷங்க வந்து நம்ப பரமானந்தனைப் பார்க்கட்டுமே!

ப. தா: மணி, அதுவும் நல்ல யோசனைதான். அப்படியே செய்துடுங்க. அப்பா, மணி! எனக்கு ஒரு ஆசை...

மணி: என்னம்மா அது?

ப.தா: என் காலத்திலேயே பரமானந்தனுக்கு ஒரு கல்யாணம் செய்துவிடுவோம்..

மணி: ஓ...அப்படியே செய்துடுவோம்!

ப.தா: பரமானந்தனுக்குப் பொருத்தமான இடத்தை யும் மனசிலே நினைச்சுக்கிட்டு இருக்கேன்...

பர: யாரம்மா அது?

ப. தா: அவள்தான் நம்ம சரசா...

பர: சரசாவா...எந்த சரசா?

ப.தா: வட்டியூர் வேதாசலத்தின் மகள்...

பர: (கோபமாக) என்ன, என்ன! வேதாசலத்தின மகளா?

மணி: அட, ஏம்பா கோபப்படுறே? அம்மா! பரமா னந்தன் சில சமயங்களில் சந்தோஷப்படுறதும் கோபப்படு றதும் ஒன்று மாதிரியே இருக்கும். பல ஊர் சுற்றினதே கோளாறு. அவன் கிடக்கிறான்; கல்யாணத்தை நாம் நடத்திடுவோம்.

ப.தா: ஆமாப்பா மணி! பரமானந்தா! வா, போக லாம்...

மணி: அம்மா...டீ பார்ட்டி?

ப.தா: பேஷா ..நடத்துங்கப்பா. .

மணி: பரமு . இன்விட்டேஷன்...

பர: செக்ரட்டரி சார்! எல்லாம் நீங்க பார்த்துக்குங்க..

[மணி அழைப்பிதழ் எழுதுகிறான். வேலைக்காரி பாக்கியம் வருகிறாள் ]

பாக்கியம்: ஸார் ..

மணி: ஓ, நீயா...?

பாக்: இந்தாங்க காப்பி

மணி: ரொம்ப தாங்க்ஸ்..நீ யாரம்மா?

பாக்: இந்த வீட்டிலேதான் மூணு வருஷமா வேலை பார்த்துக்கிட்டு வர்ரேனுங்க...

மணி: ஓ...ஐ.சி! உன் பெயர் என்ன?

பாக்: பாக்கியம்...

மணி: பியூட்டிபுல் நேம்...

பாக்: என்னங்க! டீ பார்ட்டியிலே ஒரு டான்ஸ்...

மணி: பேஷா வைப்போம்...

பாக்: அதிலே ஜமீன்தாரின் மகள் சரசாவே வந்து ஆடினால் ரொம்ப நல்லாயிருக்கும்.

மணி அதுக்கென்ன, பிரமாதம! அப்படியே செய்து விடுவோம.

பாக்: அப்ப நான் போயிட்டு வரட்டுங்களா?

மணி. போறியா .ஹூம்...போறியா.. ?

காட்சி—24.

இடம்: வேதாசல முதலியார் வீடு

இருப்: வேதாசலம், சொக்கன்.

[வேதாசல முதலியார் அழைப்பிதழைப் படிக்கிறார்.]

வே:'ஐயா, நான் அயல்நாடு சென்று, சுகமாக திரும்பியதை முன்னிட்டு, நிகழும கார்த்திகை மாதம் 2ஆம் தேதி சனிக்கிழமையன்று என இல்லத்தில் நடக்கும் தேனீர் விருந்துக்குத் தாங்கள் தங்கள் குடும்ப சகிதமாய் வந்து என்னை ஆசீர்வதிக்க வேணுமாய்க் கேட்டுக் கொள்கிறேன். இப்படிக்கு, பரமானந்தன், மேவார் விலாசம்.'

சொ: போக வேண்டியதுதானுங்களே டீ பார்ட்டிக்கு

வே: சீ, கழுதை! உன்னை ஆருடமா கேட்டேன்...

சொ: என்னமோங்க...ஊரு பூரா பேசிக்கிறாங்க... ஒரு சந்தோஷகரமான செய்தின்னு...

வே: அது என்னடா சந்தோஷகரமான செய்தி?

சொ: சூட்சமமா..சொன்னா கோபிச்சுக்கிறீங்களே!

வே: பெரிய அரசியல்வாதி இவரு...சூட்சமமா சொல்றாராம்! விளக்கமா சொல்லுடா கழுதை!

சொ: பரமானந்த முதலியாரு இந்த ஊருக்கே பெரிய பணக்காரர்றாங்க?

வே: ஆமா...பணக்காரங்கதான். யார் இல்லையென்று சொன்னாங்க? நல்ல சொத்து; பூர்வீக குடும்பம்; ஒரே மகன்; நல்ல கீர்த்தி...

சொ: அவர்தான் உங்களுக்கு மருமகப்பிள்ளை ஆகப் போறாருன்னு ஊரெல்லாம் ஒரே பேச்சா இருக்குது.

வே: சொக்கா! நீ சொன்னபடி நடந்துட்டா, இந்தப் பக்கத்திற்கே...பக்கம் என்ன, இந்த ஜில்லாவிற்கே நம் குடும்பத்திற்கு ஒரு தனி கீர்த்தி அது நடக்கணுமே...

சொக்: நடத்திடலாமுங்க...என்ன பிரமாதம்?

வே: இதென்னடா, இப்பவே நீ மாப்பிள்ளை வீட்டுக் காரன் மாதிரி பேசுகிருய்?

சொ: பின்னே என்னாங்க, புரிந்து கொள்ளாமலே பேசுறீங்களே! நம்ம சரசா அம்மாவை டீ பார்ட்டியிலே நாட்டியம் ஆடணும்னு கேட்டிருக்காங்களே, அதிலே தெரியலீங்களா...?

வே: டேய் சொக்கா! இருக்குடா உனக்கும் கொஞ்சம் மூளை...

காட்சி—25

இடம். பரமானந்தன் வீடு

இருப்: மணி, பரமானந்தன, வேதாசலம், சரசா, மற்றும் விருந்துக்கு வந்திருப்பவர்கள்.

மணி: பரமானந்தா! ஆடம்பரமாய் இரு டீ பார்ட்டிக்கு. வருகிற ஆட்கள் உன்னைக் கண்டு அப்படியே சொக்கி விடவேண்டும்.

பர: பார்ப்போம். எவனெவன் வருவானோ, என்னென்ன கேட்பானோ?

மணி: சட்! கோழையைப்போல் பேசாதே! இப்பொழுது நீ ஏழையல்ல; 'க்கமான்' என்று கூப்பிட்டவுடனே ஓடி வர பணியாட்கள். இரும்புப் பெட்டியில் இருக்கிறது இரண்டு லட்சம் ரூபாய். பூமி இருக்கிறது; கார்—பங்களா இருக்கின்றன; நகை; வேலை செய்ய வேண்டிய ஆட்கள் இருக்கின்றனர்.

பர: மணி! இதையெல்லாம் பிறர் சொத்தென்று நினைக்கும்போது திகிலாக இல்லையா?

மணி· கோழைபோல் பேசாதே. எந்தப் பொருளும் ஒருவனிடம் இருக்கும்போது அது அவனுடையது. அதற்கு முன்பு அது வேறொருவனுடையது. ஆதலால் நீ எதை எதையோ எண்ணி ஏமாளியாகாதே! ஆடம்பரமாக இரு. யாராவது வந்து ஏதாவது கேட்பார்கள். (உதாரணமாக) ஒருவன் வந்து 'மிஸ்டர், பரமானந்தன்! நீங்கள் எததனை நாட்கள் பாரீஸிலே வாசம் செய்தீர்கள்?' என்று கேட்பான். நீ புருவத்தை நெளித்துக் கொள். சுருள் சுருளாகப் புகை விடு. அலட்சியமாக அவனைப் பார். 'பாரீஸ்! மிஸ்டர் அது தானே எங்களுக்கு, 'ரெஸ்டிங் பிளேஸ்' என்று நீ சொல்ல வேண்டும். உடனே நான் ஆரம்பித்து விடுகிறேன். பாரீஸ் பியூட்டிபுல் சிட்டி— பாரீஸ் ஸென்ட்—அது இது, அப்படி இப்படி என்று திணற அடித்துவிடுவேன். பிறகு தண்ணீர் தெளித்தல்லவா எழுப்பவேண்டும்.

பர: பதில் கூற முடியாத சில கேள்விகள் வருமே. எவனாவது பாரிஸுக்கும் லண்டனுக்கும் கப்பல் கட்டணம் எவ்வளவு என்று கேட்டால்...

மணி: ஹூம்! பயப்படாதே' அலட்சியமாக, 'வீ டிரா வல் ஒன்லி பை பிளேன்' தெட் இஸ் இன்னாவ்! (We travel by Plane. That is enough.)

பர: மணி! இவ்வளவு கூத்து ஆட வேண்டியதிருக்கிறதே!

மணி: அது, இந்த இடத்துக்குத் தேவை ஆனந்த். நீ இப்போது குடியேறி இருக்கிற உலகம் இருக்கிறதே, அது பணக்கார உலகம்; மிகவும் விசித்திரமானது.

பர: ஆம்! முட்டாள் புத்திசாலியாகப் போற்றப்படுவான். வீரன் கோழைப் பட்டம் பெறுவான்; கோழை வீரன் பட்டம் பெறுவான். அவலட்சணமாக இருந்தாலும அழகனாகக் கருதப்படுவான். ஆனால் இது முறையா? சரியா? நாமும் இதை ஏற்றுக் கொள்ளத்தான் வேண்டுமா?

மணி. ஏற்றுக் கொள்ள வேண்டியதில்லை ஆனந்த்! இந்த உலகத்திலிருநது நம்மை அடிமை கொண்டுள்ளவர்களை நாம ஆட்டிவைக்க வேண்டுமென்றல்லவா சொல்லுகிறேன். ஆனந்தா! அகில உலகத்தை ஆட்டி வைக்கும் பணம் இருக்கிறதே, அதை நீ இப்பொழுது ஏராளமாய்ப் பெற்றிருக்கிறாய். ஆகையால் நீ எதைச் செய்தாலும் தகும்; என்ன சொன்னாலும் நடக்கும வா, போகலாம்.

[தேநீர் விருந்துக்கு இருவரும் வருகின்றனர்.]

மணி: இவர்தான் வட்டியூர் ஜமீன்தார். உயர்திரு வேதாசல முதலியார்! பெரிய மனிதர்.

பர: (முதலியாரைப் பார்த்து) நிறைய தெரியும், உங்களைப் பற்றி. .ஆனால் பார்க்கத்தான் இல்லை.

பர: சீமாட்டிகளே! சீமான்களே! நான் பல வருஷ காலமாய் ஐரோப்பா தேசத்திலே சுற்றிக் கொண்டிருந்துவிட்டேன். அதனால் உங்களில் பலரைக் காணும் பாக்கியம் இல்லாமல் போய்விட்டது. எங்கள் பூர்வீக ஜமீனை விட்டுவிட்டு இந்தப் பக்கம் வந்தவுடனே அதே சோகத்தால்

மெலிந்து போனேன். டாக்டர்கள் நான் ஐரோப்பா செல்ல வேண்டும் என்று சொன்னார்கள். தாயாரை அப்போது விட்டுவிட்டுச் சென்றவன், இப்போதுதான் திரும்பி இருக்கிறேன். ஆதலால் இனி என தாயாரையும்; வீட்டையும் விட்டுப் போகிறதில்லையென்று தீர்மானித்துவிட்டேன். உங்களையெல்லாம் சந்திப்பதற்காகவே இந்த டீ பார்ட்டி ஏற்பாடு செய்தேன். ' அழைப்பை ஏற்று என்னை கௌரவப் படுத்தியதற்காக—வந்தனம்.

[கை தட்டல்]

மணி: லேடீஸ்! ஓ எக்ஸ்யூஸ் மீ! தோழர்களே, ஸ்ரீமதி சரசாதேவியின் நடனத்தை நீங்கள் கண்டு களித்தீர்கள்; பார்த்து ரசித்தீர்கள் அவர்கள் இந்த டீ பார்ட்டியிலே நடன விருந்து அளிக்க வேண்டுமென்று நான் ஆசித்தேன்; என் நண்பர் மிஸ்டர் பரமானந்தன் அவர்களும் அதை ஆமோதித்தார்கள். அழைப்பை ஏற்றுக் கொண்டு அம்மையாரும் தன்னுடைய பொறுப்பைச் செய்து முடித்தார். ஏற்றுக் கொண்டது மட்டுமல்ல, இங்கு உள்ள அனைவரும் கண்டு மகிழும்படி நடத்தியும் தந்தார். அதற்காக, அவருக்கும அவரது தோழியருக்கும் உங்கள சார்பாகவும், மிஸ்டர் பரமானந்தன சார்பாகவும் என் நன்றி. வந்தனம்...

[கை தட்டல்]

வே அ ஏபுமிக்க நண்பர்களே, பரமானந்தன் நமக்கு அளித்துள்ள டீ பார்ட்டி உண்மையிலே நமக்குப் பரமானந்தமாக இருந்தது. அது அவருக்குத் தெரியுமோ, தெரியாதோ —நான் அவருக்கு ஒரு விதத்திலே உறவினன். சில வருஷங்களுக்கு முன் அவர் இங்கு வந்து குடியேறினார்களே தவிர, அப்பொழுது அவர் யார் கிட்டேயும் நெருங்கிப் பழகியதில்லை. திடீரென்று ஒருநாள கப்பலேறிவிட்டார். அதற்குப் பிறகு நான் அவருடைய தாயாரை அடிக்கடி போய்ப் பார்த்ததுண்டு அந்த அம்மா ஒருநாள் வேடிக்கையாக என்னிடம், உங்கள் மகள் சரசாவை என் மகனுக்கு கல்யாணம் செய்துவிட வேண்டும் என்று சொன்னார்கள். நானும் எல்

லாம் நம்ம கையிலா இருக்கிறது; கடவுள் செயல் என்று சொன்னேன் பரமானந்தனுடைய தயாள குணமும், அடக்கமும், நன்னடத்தையும், ஒழுக்கமும் நம் குலத்திற்கே பெருமைதரக் கூடியது. ஆதலால் நான் பரமானந்தனுக்கு என் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

*[கைதட்டல்]*

வேதா: தம்பி பரமானந்தம், நான் வரட்டுமா?

பர: சரி, செய்யுங்கள் மா...மா...

மணி: அடே! மாமா என்றுதான் சொல்லேன்

வேதா: அதற்கென்ன, தம்பி இஷ்டப்பட்டால்...

மணி: இஷ்டம் என்னாங்க...கல்யாணத்தை நடத்திடுவோம்!

வே: அப்ப...சரி.

*[பரமானந்தனுக்கும் சரசாவுக்கும் கல்யாணம் நடக்கிறது. கல்யாணம் நடந்த பிறகு பரமானந்தன்.]*

காட்சி—26

இடம்: வேதாசலம் வீடு

இருப்: பரமானந்தன், மணி.

பர: ஆடம்பரம், ஆடல், பாடல், விருந்து, வேடிக்கை இவைகளுக்கு நான் ஒரு பதுமை. என் லட்சியம், சபதம் எல்லாம் எங்கே? எனக்கு இது ஒன்றுமே பிடிக்கவில்லை மணி. நான் பஞ்சை சுந்தரம் பிள்ளை மகன். அவர் ஏழை; ஆனால் யோக்கியர். மானத்திற்காக மரக்கிளையில் பிணமானார். அவருடைய மகனா நான்! சே, சே! இதை என்னால் சகிக்கவே முடியாது.

மணி: என்னப்பா அது? என்ன செய்ய வேண்டுமென்கிறாய்?

பர: என் தகப்பனைக் கொன்ற பாதகனை ஒரே வெட்டில் கொலை செய்து வஞ்சம் தீர்த்துக் கொள்ள வேண்டுமென்று நினைத்தபொழுது...

மணி: அடாது. அவனை ஒரே அடியாக வெட்டிப் போட்டால் பயனில்லை. அவனை கொஞ்சம் கொஞ்சமாக வாட்டி வதைக்க வேண்டுமென்று சொன்னேன். நன்றாக ஞாபகமிருக்கிறது.

பர: இந்த ஞாபகம் உள்ளவன இப்பொழுது அவனுடைய மருமகனாக்கிவிட்டாயே, இது என்ன நியாயம்?

மணி: ஆம்! பரமானந்தன் அவனுடைய மருமகன்; ஆனந்தன் அவனுடைய பரம விரோதி.

பர: போதும் இந்தப் புதிர்கள்!

மணி: அவசரக்காரன் ஆனந்தா நீ! கோட்டைக்குள் புகுந்து விட்டோம். இனி எதிரிகளின் மார்புக்கு நேரே செல்லும் நம்முடைய வாள்! இதோ, படித்துப் பார்! பழி தீர்க்கும் வழி. நான் வகுத்துள்ள திட்டம். படி, முதல் பக்கத்தை!

பர: அடுத்துக் கெடுக்கும் படலம்.

மணி: அதுதான் இப்பொழுது நடந்தது. வெறும் ஆனந்தன் வேதாசல முதலியாரை நெருங்க முடியாது. ஆனால் பரம விரோதியான பரமானந்தனை மேளதாளங்களோடு, விருந்து வைபவத்தோடு நாள் நட்சத்திரம் பார்த்து, தன்ஒரே மகளான சரசாவைக் காணிக்கையாகக் கொடுத்துத் தன் மாளிகைக்கு அழைத்துக் கொண்டார். இதற்குப் பெயர்தான் அடுத்துக் கெடுக்கும் படலம்.

பர: அருமையான ஏற்பாடு! எங்கே பணத்தின் மீது பாசங்கொண்டு நம் திட்டங்களையெல்லாம் மறந்து விடுவாயோ என்று எண்ணினேன்.

மணி. பைத்தியம்...அடுத்ததைப் படி!

பர: பணம் பாழாகும் படலம்.

மணி இது என்ன தெரியுமா? வேதாசல முதலியாருக்கு அந்தஸ்து, புகழ், செல்வாக்கு எதனால் வந்தது? பணத்தினால் அல்லவா? பல ஏழைகளைக் கசக்கிப் பிழிந்து, அக்கிரமங்கள் பல புரிந்து, அநியாயமாக உன் தகப்பனை மரக்கிளையில் தொங்க வைத்து, அவன் குவித்துள்ள பணம் இருக்கிறதே, அது, பாழாக வேண்டும் அதைப் பார்த்து, 'ஏ, வேதாசலமே! எங்கே உன் பணத்திமிர்?' என்று நாம கேட்க வேண்டும்

பர: மணி, அவன் பணத்தை பூதம்போல காப்பவனாச்சே!

மணி: அதற்கு வழி இருக்கிறது. 'மானம் பறிக்கும் படலம்'—இது என்ன தெரியுமா? ஜெகம்புகழ் மேவார் விலாச மைனரைத் தன் மருமகனாக அடைந்திருக்கிறார். அதனால் இப்பொழுது அவர் புதுத் தனிக் கௌரவம பெற்றிருக்கிறார் அல்லவா?

பர: ஆம், ஊர் மக்கள் அப்படித்தான் பேசிக் கொள்கிறார்கள்.

மணி: அதே ஊா மக்கள அந்த மருமகனை குடிகாரன், சூதாடி, கூத்திக்கள்ளன், என்று உன்னை ஏச வேண்டும.

பர: என்னையா?

மணி: ஆம; அதறகான நடிப்புகள நாம் செய்ய வேண்டும். உன்னை நிந்தித்துப் பேசும் எதிரொலியால் அவன் மானம் போகும்; மனோ வேதனை அதிகமாகும். துடி துடித்துப் போவான்.

பர: 'கண் குத்தும் படலம'—இதென்ன மணி?

மணி: அதுவா கேள்! என் அருமை மகளே, கண்ணே, அருமைக் கண்மணியே, உன் அதிர்ஷ்டமே அதிர்ஷ்டம். பணக்கார இடத்தில் சம்பந்தம் கிடைத்தது என்றெல்லாம்

பெருமை பேசிக் கொள்கிறாரே ஸ்ரீமான் ஸ்ரீமதி சரசாவைப் பார்த்து, அதே சரசாவை, நீ சதா நேரமும் கொடுமைப் படுத்த வேண்டும். அவள் கண்கலங்கி நிற்பதைப் பார்த்து, 'கண்ணைப்போல் வளர்த்தேன். இன்று கண்கலங்கி நிற்கிறாளே' என்று அவன் கதற வேண்டும்.

பர: மணி! இப்பொழுதுதானப்பா என் மனம் நிம்மதி அடைந்தது.

மணி: 'பணம் பாழாகும் படலம்'—இதை ஆரம்பிக்க வேண்டும் இப்பொழுது. அதற்கு சரசா ஒரு கருவி. அவளை ஒரு தடவை முறைததால் ஓராயிரம்; ஒரு அடி அடித்தால் ஐயாயிரம்; 'ஐயோ' என்று அலறினால் பத்தாயிரம்—இப்படிப் பறக்க வேண்டும் பணம்.

பர: பாவம், பெண்ணாயிற்றே! நயமாகக் கேட்டால் கூட வாங்கிக் கொடுத்துவிடுவாளே சரசா!

மணி: இரக்கம் காட்டுகிறாயா? ஆனந்த்! அன்று உன தந்தை மரக்கிளையில் தொங்கும்போது அவன் இரக்கம காட்டினானா? அந்த அரக்கனின் மகள் இவள். ஆதலால் ஒரே கல்லில் இரண்டு பழம விழவேண்டும்; அதே சமயத்தில் பணமும் கறந்தாக வேண்டும். என்ன சொல்கிறாய்?

பர: நான் தயார்! இப்பொழுதே ஆரம்பிக்கலாமா?

மணி: கொஞ்சம் பொறு. இனிமேல்தான் முக்கியமான கட்டங்கள் இருக்கின்றன. அதனால்...

பர: அதனால்?

மணி. இது இப்பொழுது தேவை...நீயே படித்துப் பார்!

பர: இடைவேளை.

காட்சி—27.

இடம்: பாதை

இருப்: மணி, பரமானந்தன்

[மணியும் பரமானந்தனும் காரில் வருகின்றனர்.]

மணி: எப்படி நம்ம ட்ரைவிங்?

பர: ரொம்ப ஸ்டடி...

மணி: ஆம்! இந்த ஸ்டடி வேணும் உனக்கு. இன்று, சகலவித அலங்காரத்துடன் வரவேற்கப் போகிறாள் சரசா. சொக்கிவிடக் கூடாது. நமது திட்டங்கள் எல்லாம் தவிடு பொடியாகிவிடும்.

பர: கவலைப்படாதே! இந்த உள்ளம் அனல் போன்றது.

மணி. அவளுடைய கனி மொழிகளில் மயங்கி குளிர்ந்து விடாதே.

பர: பயப்படாதே! பாதையினின்று தவறமாட்டேன்.

மணி: கலக்கம் ஏற்பட்டால் உன் தகப்பனார் மரக் கிளையில் தொங்கியதை நினை!

காட்சி—28.

இடம்: வேதாசலம் வீடு

இருப்: அமிர்தம், சரசா.

அமிர்: இந்தாங்க அம்மா, பூ கேட்டிங்களே, கொண்டு வந்திருக்கிறேன்.

சர: ஏண்டி! இதற்குத்தான் இவ்வளவு நேரமா? யாரோட வாயாடிக்கிட்டு இருந்தே? பெரிய இடத்துப் பிள்ளை; பாரீஸ், லண்டன் போனவரு, அவருக்கு இதுதான் பூவோ?

அமிர்: இதுதாம்மா...நம்ம தோட்டத்திலே...இது தானுங்களே இருக்குது?

சர: சீ, கழுதை! வாயை மூடு! வரவர பேச்சு அதிக மாயில்ல வருது. இந்தா...இதைச் சாப்பிடு (தின்று மீச்ச ஆப்பிள் பழத்தை எறிகிறாள்; அமிர்தம் விழிக்கிறாள்)

ஏண்டி விழிக்கிறே! எச்சிலா இருக்கிறது என்று பார்க்கிறாயா? ஒன்றுமில்லேடி...நான் சாப்பிட்ட மிச்சம் அது. இந்தச் சமயத்தில் இதாவது கிடைத்தது என்று சந்தோஷப் படாமே...

[மணியும், பரமானந்தனும் வரும் காரின் ஹார்ன் சத்தம் கேட்கிறது.]

வே: வாங்க மாப்பிள்ளை..செக்ரட்டரி சார்...நீங்க...

மணி: பரவாயில்லை...பரவாயில்லை!

சர: இதோ பார்த்தீங்களா! எங்க நாடகத்துக்காக வாங்கினது.

பர: சகிக்கலை ஒன்றாவது...கர்மம்!

சர: இதைப் பாருங்க! நாடகத்திலே எனக்குக் கிடைத்த பரிசுகள்...

பர: பார்க்கச் சொல்லடி உங்க அப்பனை...

அமிர்: அம்மா, பழங்கள் கொண்டுவரச் சொன்னீங்களே...

சர: ஏண்டி நிற்கிறே, சிலை மாதிரி! வைச்சுட்டுப்போ வெளியே.

பர: சரசா! யார் இந்தப் பொண்ணு?

சர: அவ நம்ம வீட்டு வேலைக்காரி.

பர: ரொம்ப நல்லாயிருக்குது; ரொம்ப நல்லாயிருக்கு, லட்டு.

சர: அப்படியா! சந்தோஷம்.

பர: பெயரென்ன?

சர: ரவா லட்டு.

பர: அந்தப் பொண்ணோட பெயரு...

சர: குப்பி. (அலட்சியமாக)

[அப்பொழுது உள்ளே இருந்து ஒரு குரல்: அமிர்தம்..]

பர: குப்பி. அமிர்தம் என்கிற பெயர் நல்லாயிருக்கிறது என்றுதானே 'குப்பி' என்று சொன்னே! வேதாசல முதலியார் மகள்தானே, வேறே எப்படி இருக்கும் புத்தி...

சர: ஆருயிரே! என்மேல் உங்களுக்கு என்ன கோபம்? ஏன் இந்தக் கடுகடுப்பு? நான் செய்த பிழை என்ன? நான் தாயிழந்தவள்; எங்கப்பா என்னை அவர் கண்களைப்போல பாதுகாத்து உங்களிடம் ஒப்படைத்தார். இனிமேல் உங்களிடம்தான் இருக்கிறது எந்தன் வாழ்வு...

*[சரசா அவன் கால்களைப் பிடித்துக் கொள்கிறாள். ஆனந்தனுக்கு இரக்கம் வரும் சமயம், தன் தகப்பனாரின் ஞாபகம் வரவே காலால் உதைத்துத் தள்ளுகிறான்.]*

பர: என் சிநேகிதர்களுக்கு டீ பார்ட்டி வைக்க வேண்டும். அதற்காக ஐயாயிரம் ரூபாய் செலவாகும் உங்க அப்பாகிட்ட சொல்லி வாங்கிக் கொடு

சர: நாளை வாங்கித் தருகின்றேன். கண்ணாளா இன்று...

பர: இன்று நான் சொல்வதைப் போல் நீ செய் பணம் வாங்கிக் கொடுத்ததும் நாளை இருவரும் சந்திக்கலாம...

*[பரமானந்தன் போகிறான்; அமிர்தம் வருகிறாள்]*

அமிர்: அம்மா, பால்!

சர: (கோபத்தோடு) போடி.

காட்சி—29

இடம்: பரமானந்தன் வீடு

இருப்: மணி, வேதாசல முதலியார்.

*[வேதாசல முதலியார் மணியைச் சந்திக்கிறார்.]*

மணி: நேற்று ராத்திரி உங்ககிட்டேயிருந்து வந்தாரில்லே, அப்போ படுத்தவர்தான்...

வே: ஏன், ரொம்ப ஜுரமோ?

மணி: பின்ன, கோபம் இல்ல வந்திருக்கு!

வே: கோபம் வந்தாலே...

மணி· ஜுரமும் சேர்ந்துதான வரும். ஆனால் இப்பொழுது வந்திருக்கிற ஜுரமும் கோபமும் இருக்கிறதே, அப்பாட...

வே: அப்படி என்னாங்க ஸார் நடந்தது?

மணி· பின்னே என்னங்க முதலியார்வாள்! அவர் லண்டன்—பாரீஸ் போய் வந்தவராச்சே; காலேஜில் படித்த சிநேகிதர்களுக்கெல்லாம் டீ பார்ட்டி வைக்க வேண்டியவராச்சே, அதற்கெல்லாம் பணம் நிறையத் தேவையா இருக்குதே; இதையெல்லாம் ஒரு மாமனார் கொஞ்சமாவது கவனிக்கிறாரா என்று ஒரே கோபம் போங்க ..

வே: ஆமா சார்! சரசாகூட சொன்னாள், மாப்பிள்ளை ஏதோ ஐயாயிரம் ரூபாய் கேட்டார் என்று இப்போ எந்த அளவிலே கோபம் இருக்கு?

மணி: ஒழுங்கா...மரியாதையாகப் பணம் வரலையின்னா, இனி உங்க வீட்டுப் பக்கமே காலையெடுத்து வைக்கிறதில்லை என்று சொல்லிவிட்டாரு.

வே: அய்யய்யோ, இந்தாங்க சார் ரூபாய் அப்படியெல்லாம் இருந்துவிட வேண்டாமென்று நீங்கதான அவருக்குச் சொல்லணும்.

மணி: என்னாங்க சார்! இது கூடவா உங்களுக்குச் செய்யக்கூடாது. உங்களைப் பற்றித்தானே என் மனசிலே சதா வேலை செய்துகிட்டே இருக்கிறேன். நான வாரேன...

காட்சி—30

இடம்: பாதை.

இருப்: மணி, பரமானந்தன்

[பரமானந்தனும், மணியும் குடிகாரர்களைப் போல் நடிக்கிறார்கள்.]

பர: எப்படி நம்ம வேலை? ஒரே நாளில் ஐயாயிரம் ரூபாய்...

மணி: ஒரே நாளில் பறக்குது பார்...

[பணங்களைப் பல வழிகளில் நாசம் செய்கின்றனர்.]

ஒருவர்: (மற்றொருவரிடம்) பார்த்தாயா! பரமானந்த முதலியார் போகிற போக்கை!

மற்றொருவர்: வேதாசலத்தின் மருமகனா! வெறிபிடித்தல்ல திரிகிறான்?

இன்னொருவர்: பெரிய இடத்துப் பிள்ளை என்றுபேர்; இந்தப் பரமானந்தனுடைய யோக்கியதை கொஞ்சங்கூட நல்லாயில்லை. சதா குடி. கண்ட கூத்திக்காரிகளுடன் சுற்றுவதே வேலையாய்ப் போய்விட்டது...கருமம், கருமம்!

பர: மணி! இன்று எப்படி நம்ம நடிப்பு?

மணி: சபாஷ்! (கிராண்ட் சக்ஸஸ்) குடிகாரன், சூதாடி, கூத்திக்கள்ளன்,' வேதாசல முதலியாரின் மருமகனுக்கு வெற்றிகரமான பட்டமளிப்பு!

காட்சி—31.

இடம்: வேதாசலம் வீடு

இருப்· பரமானந்தன், சரசா, வேதாசல முதலியார்.

['ஆடவருவாயோ கண்ணா' என்று சரசா பாடிக் கொண்டிருக்கிறாள். பரமானந்தன் வருகிறான்.]

பர: என்னடி இங்கே சளசளன்னு சத்தம்?

சர: ஒன்றுமில்லே...பாட்டு பாடறேன்.

பர: பாட்டு பாடறாளாம் பாட்டு. இவ பாட்டை நான் கேட்கணுமாம்!

சர: உங்களை ஒன்றும் கேட்கச் சொல்லவில்லையே!

பர: பின்னே...யாருக்காகடி நீ பாடறே?

சர: சிவ, சிவா!

பர: அதென்னடி அத்தனை அவசரமா சிவனை அழைக்கிறே. 'சிவ, சிவ' எனறு அகோர தவம் செய்தாலும், அவன் வர்றது கஷ்டம் என்று சொல்லுவாங்க. நீ என்னடான்னா.. டெலிபோன பண்ற கைலாசத்துக்கு, சனியனே...

சர: ஆமா...இப்போ நான் சனியனாகிவிட்டேன். அப்போது அப்சரசா இருந்தேன்...

பர: அப்போது கழுதை கூடத்தாண்டி அழகாயிருக்கும், குட்டியாயிருக்கும்போது.

சர: பூங்கொடியே என்று புகழ்ந்தீர்கள் ஒருமுறை...

பர: புது மோகத்தில்...

சர: கொஞ்சினீர்கள், என்னிடத்தில்...

பர: உன் அழகைக் கண்டல்ல; உன் அந்தஸ்தைக் கண்டு.

சர: சத்தியங்கள் செய்தீரே!

பர: சரச நேரங்களில்...

சர: ஒருதரம் உயிரே என்றீர்கள்...

பர: ஆம்; உயிரே, கண்ணே, கண்மணியே, கட்டிக் கரும்பே, கற்பகமே, கனிரசமே என்றுகூடத்தான் சொன்னேன். சிருங்கார சாஸ்திரத்தில் நான் கற்ற பாடங்களடி அவைகள்.

சர: அப்படி நான் செய்த குற்றம்தான் என்ன?

பர: முட்டாளே! உலகத்தில் குற்றம் செய்தவர்கள் மட்டும்தானா தண்டிக்கப்படுகிறார்கள்? அப்படியென்ன, நீ ஒரு குற்றமும் செய்யாதவளா? இப்பொழுது பாடிக் கொண்டிருந்தாயே, ஓடவருவாயா, ஆடவருவாயா என்று, அது, எவனைப் பற்றியடி? யாரடி அவன்?

சர: பெரிய குற்றத்தைக் கண்டு பிடித்து விட்டீர்கள். சாமிமேல் பாட்டு படிச்சேன்.

பர: சாமிமேல் பாடும் பாட்டா இது! இப்படித்தான் ஆசை நாயகனைக் கூப்பிடுவதுபோல்தான் ஆண்டவனைக் கூப்பிடுகிறதோ? பேஷ், அதெல்லாம ஒன்றுமில்லே; நீ யாரையோ மனதிலே நினைச்சுக்கிட்டு அதைச் சாமி மேலே சாக்காகப் போட்டு பாடியிருக்கிறே. உண்மையைச் சொல்லி விடு.

சர: கடவுளே! ஒரு புருஷன் தன் மனைவியிடம் பேசும் பேச்சா இது? என்னை ஏன் இப்படிச் சித்திரவதை செய்ய வேண்டும்? கல்யாணம் செய்துகொண்டு நான் கண்ட பலன் என்ன?

பர: என்னடி, மயான காண்டம் நடத்திக் காண்பிக் கறே, எவனைப் பற்றி பாடிக்கிட்டு இருந்தே ..

[பரமானந்தன் சரசாவை அடிக்கிறான். சரசா அலறுகிறாள். வேதாசல முதலியார் வருகிறார்]

சர. ஐயோ! அப்பா ...அப்பா...

பர: அங்கே ஏண்டி போறே? இங்கே வாடி

வே: என்ன அக்கிரமம் மாப்பிள்ளை இது?

பர: என்ன மாமா சொல்றீங்க!

வே: டேய், பரமானந்தா! உத்தமிகள் வயிறெரிஞ்சா வாழமாட்டான் எவனும். ஐயோ...என் பொண்ணு திரெளபதி மாதிரி கதறுதப்பா ..

பர: திரெளபதியா இவ? ஏம்மா திரெளபதை...?

வே: அட பாவி!

பர: இடியட்...இவங்களோடு மாரடிச்சி நமக்குப் போகுது உயிர். .

காட்சி—32.

இடம்: தோட்டம்

இருப்: மூர்த்தி, அமிர்தம், பரமானந்தன், சரசா...

மூர்த்தி: அமிர்தம்! நான் உனக்கு; நீ எனக்கு. இதை நிச்சயிக்க வேண்டும் இப்போது.

அமிர்: வேளாளர் வீட்டுப் பிள்ளைக்கும் வேலைக் காரிக்கும் கல்யாணம் நடக்க முடியுமா? பெற்றோர்கள் சம் மதிப்பார்களா?

மூர்த்தி: உன் அன்பைப் பெறாவிட்டால்...

அமிர்: நீங்கள் என்னைக் கல்யாணம் செய்து கொள்ள விரும்புவது, வெள்ளாடு ஓநாயை விரும்புவது போலத்தான். பாலும் பழமும், தேனும் தினைமாவும் என்பதுபோல் ராஜா போன்ற உங்களுக்கு ராணிபோல் அல்லவா ஒருத்தி மனைவி யாக வேண்டும்?

மூர்த்தி: அமிர்தம்! உன்னை அடையவில்லை என் றால் என் ஆவி நிலைத்திருக்காதடி கண்ணே!

அமிர். எனக்கு மட்டும் உங்க மேலே ஆசையில்லேன்னா சொன்னேன்? உங்க துணிகளைத் துவைக்கும்போது ஒரு ஆனந்தம்; உங்களுக்காக கடைக்குச் செல்லும்போது ஒரு சந்தோஷம். உங்களைக் கூப்பிடச் சொன்னால் கூத்தாடு வேன். உங்களுக்காக நான் எவ்வளவு வேலை செய்தாலும், அலுப்பே தோன்றாது. ஆனால் நீங்க என்னைக் கல்யாணம் செய்து கொள்வது இந்தப் பூமி ஏற்குமா? பெற்றோர்கள் சம்மதிப்பார்களா?

மூர்த்தி: இதெல்லாம் என்ன பேச்சு அமிர்தம்?

அமிர்: எனக்கு இஷ்டம் இல்லேன்னா சொன்னேன்?

மூர்த்தி: பூமி ஏற்றால், பெற்றோர்கள் சம்மதித்தால், மாளிகையில் வாழலாம் அல்லது எங்கேயாவது மண் குடிசையில் வாழலாம்...

அமிர்: இனி ஒன்றும் சொல்லப் போவதில்லை. ஏதாவது தடைகள் ஏற்பட்டால், உங்கள் பாடு; அவர்கள் பாடு. இனி, நான் உங்கள் அடிமை.

மூர்த்தி: சரி, நான் வருகிறேன் அமிர்தம்.

[மூர்த்தி போகிறான். பரமானந்தன் அமிர்தத்தின் தோளைப் பிடிக்கிறான்.]

பர: கண்ணே அமிர்தம்!

அமிர்: ஐயா! இதென்ன அக்கிரமம்?

பர: அக்கிரமம் இல்லையடி கண்ணே...இது ஆசையின் விளைவு?

அமிர்: கேவலம்...நானொரு வேலைக்காரி... என்னிடம்...

பர: வேலைக்காரியா நீ? பூ விற்றால் பூக்காரி, பிச்சை எடுத்தால் பிச்சைக்காரி; சிங்காரித்துக் கொண்டால் சிங்காரி. நீ வேலை செய்கிறாய். அதனால் வேலைக்காரி.

அமிர்: என்னையா இது! பைத்தியக்காரப் பேச்சு...

பர: அமிர்தம்! இந்தப் பைத்தியம் தேவர் மூவர்களுக்கும் இருந்ததாம். நான் எம்மாத்திரம்?...அமிர்தம்...

அமிர்: போதுமையா பேச்சு! இந்த வீட்டில் வேலை செய்ய வந்தேன். விபச்சாரத்துக்கு வரவில்லை.

பர: அட, பைத்தியமே! உன்னை இப்பொழுது விபச்சாரத்துக்கு யார் அழைத்தார்கள்? என் தர்ம பத்தினியாகவல்லவா இருக்கச் சொல்கிறேன்...

அமிர்: அமாவாசையில் நிலவேது? காமவெறி பிடித்தவனுக்குத் தர்மம் ஏது?

பர: என்றெல்லாம் எவனோ எழுதி வைத்திருந்த கதையில் படித்திருப்பாய்...

அமிர்: ஐயா, அதிகம் பேச வேண்டாம்...

[சரசா வருகிறாள்.]

சர: வீட்டு எஜமானனோடு உனக்கென்னடி பேச்சு?

பர: அதை நீ யார் கேட்கிறது? அமிர்தம், என்னசெய்ய லாம்? கிரகச்சாரம்! நான் போய் வரட்டுமா?

சர: இங்கே என்னடி நடந்தது? சொல்லு...

அமிர்: ஏம்மா என் வயிற்றெரிச்சலைக் கிளப்புகிறீங்க! அந்தப் பாவி, என் மானத்தை வாங்கப் பார்த்தான்; நீங்க என் பிராணனை வாங்கறீங்க.

சர: எந்தப் பாவிடீ, என்னடி செய்தான்? சொல் லேண்டி?

அமிர்: உங்க புருஷன்தான். இங்கே வந்தார். ஏழை தானே, எது வேண்டுமானாலும் செய்யலாம், கேட்கறதுக்கு யார் இருக்கா, அப்படி என்கிற தைரியம்...

சர: அடிப்பாவி...! அப்படியா?

அமிர்: அவர் செய்த அக்கிரமங்களுக்கு, பாவிப் பட்டம் எனக்கா?

சர: மூடடி வாயை. தடியாட்டமா..இருந்துக்கிட்டு தளுக்கும், மினுக்கும் செய்தா...ஆம்பளைக்கும் கெட்ட எண்ணம் வராதாடி? சனியனே! இந்த வீடு உருப்பட ணும்னா...நீ தொலையனும் மொதல்லே. போடி, போ! போய்...வேலையைப் பாரு...

பர: சரசா! ஒரு மரக்கட்டை அவள். மனச்சாந்தி யைக் கலைப்பதற்காக அமிர்தத்துடன் ஒரு மாதிரியாக நடந்துகொண்டேன். வேதனைப்பட்டதில் வெறிபிடித்து விட்டது அவளுக்கு. நல்ல பிள்ளைகள் வேதாசலத்திற்கு. மகள் ஒரு அகம்பாவி; மகன் ஒரு அப்பாவி.

காட்சி—33.

இடம்: நந்தவனம்

இருப்: மூர்த்தி, பரமானந்தன், மணி

பர: மூர்த்தி! உனக்கு ஏன் திடீரென்று என் மீது இவ்வளவு ஆசை. என்றுமில்லாதபடி என்னையும் அழைத்தாய் உலவ. ஆனால் பேசாமல் இருக்கிறாயே?

மூர்த்தி: பரமு! பெண்களிடம் இளித்துக் கிடப்பவனே, பெருமை பேசுபவனே, மிரட்டுபவனே! நான் உன்னை ஒரு பேயனென்று மதிக்கின்றேன்.

பர: குடியன், வெறியன், தடியன், பித்தன், பேடி, காமுகன், கபோதி என்று பல பதங்களுண்டு, அகராதியிலே. ஓய்வு நேரத்தில் பார்த்து வைக்கவும்.

மூர்த்தி: நேரடியாகவே கேட்கிறேன். அமிர்தத்தை நீ என்னவென்று நினைக்கிறாய்?

பர: என்னடா இது, வேடிக்கையான கேள்வி! அவளைப் பற்றி என்ன நினைப்பது? அவள் ஒரு வேலைக்காரி...

மூர்த்தி: வேலைக்காரியாயிருப்பதால் என்ன வேண்டுமானாலும் செய்யலாமென்பது உன் எண்ணமா?

பர: மூர்த்தி! அமிர்தம் ஒரு வேலைக்காரிதான். ஆனால் அற்புதமான ஜாலக்காரி, சிரித்து சித்திரவதை செய்யும் சொகுசுக்காரி; வெறும் அலங்காரி மட்டுமல்ல, பலே கைக்காரி!

மூர்த்தி: பரமு! கேலி செய்ய வேண்டாம். கேள், இதை. அவள் உன்னை ஒரு துரும்பென மதிக்கிறாள்.

பர: சிறு துரும்பும் பல் குத்த உதவும் என்று நீ அவளுக்குச் சொல்வதுதானே...?

மூர்த்தி: அமிர்தம் உண்மையில் உத்தமி.

பர: மூர்த்தி! நீ சுத்தப் பைத்தியக்காரனாக இருக்கிறாயே. வீட்டு வேலைக்காரிகள் மூன்று விதம். சிலது தானாகவே மேலே வந்து விழும். சிலது தொட்டால் துவண்டுவிடும்; சிலதுகள் பத்தினி வேஷம் போடும் கொஞ்ச நாளைக்கு! இதில் உன் அமிர்தம் மூன்றாவது ரகம்'

மூர்த்தி: உனக்குக் கிடைக்கமாட்டாள் அவள், 'கிட்டா தாயின் வெட்டென மற!' என்ற பழமொழி தெரியுமா உனக்கு?

பர: 'அடிமேல் அடி அடித்தால் அம்மியும் நகரும், என்று மற்றொரு பழமொழி இருக்கின்றதே, அது தெரியுமா உனக்கு?

மூர்த்தி: இனி அந்தப் பழமொழிப்படிதான் நடக்க உத்தேசம்.

பர: கொஞ்சம் விளக்கமாகச் சொல்லப்பா!

மூர்த்தி: நீ அமிர்தத்திடம் வாலாட்டினால் இனி இக்கரங்கள் சும்மா இருக்கப் போவதில்லை. வீட்டில் வளர்க்கும் நாய், தானாகவே மேலே வந்து விழுந்தால் தடியால் அடிக்கத் தயங்கமாட்டார்கள்.

பர: சீ, நாயே...

மூர்த்தி: யாரடா நாய்?

[இருவரும் சண்டை போடுகின்றனர். மூர்த்தி பரமானந்தனை உருட்டிவிட்டுப் போய் விடுகிறான்.]

பர: உருட்டித் தள்ளி விட்டானப்பா...

மணி: மீசையில் மண் ஒட்டவில்லையே!

பர: திருப்பி அடிக்க முடியாதென்று நினைத்திருப்பான் உழைத்து உழைத்து மெருகேறிய கரங்கள் அவனைப் பொடிப் பொடியாக்கியிருக்கக் கூடும். ஆனால் சூட்சமம் கிடைத்திருக்கும்போது ஏன் கைவலிக்க அடிக்க வேண்டும்?

மணி: அது என்னப்பா சூட்சமம்?

பர: மூர்த்தி அமிர்தத்திடம் காதல் கொண்டிருக்கும் விஷயம் தெரிந்துவிட்டது. இனி மூர்த்திக்கு வெறி கிளப்பி, அந்தக் கிழவனையும் தூண்டிவிட வேண்டும். மரத்திலிருந்து ஒரு கிளை ஒடியும். மகன் தந்தைக்கு விரோதியாவான்.

மணி: அவ்வளவு தூரம் புத்திசாலியாயிட்டியா? பரம சந்தோஷம்.

காட்சி—34

இடம்: வேதாசலம் இல்லம்

இருப்: வேதாசலம், மூர்த்தி, அமிர்தம், பரமானந்தன்.

[சிலர் பரமானந்தனுடைய நடத்தையைப் பற்றி வேதாசலத்தினிடம் குறை சொல்லிக் கொண்டிருக்கின்றனர். அப்போது பரமானந்தன் அங்கு வருகிறான்.]

ஒருவர்: என்னங்க! உங்க மருமகப்பிள்ளை போடற ஆட்டம் சகிக்கத்தான் முடியவில்லை. அவரைப் பற்றி ஊர் பூரா...பேசிக்கிறத கேட்டா...

வே: நாக்கைப் பிடுங்கிக்கினு சாகலாம்னு தோணும்...

இன்னொருவர்: இதை உங்க காதிலே போட்டு வைச்சிட்டுப் போகலாம்னுதான் வந்தோம்.

மற்றொருவர்: பயப்படாதீங்க...உங்களைக் காளியாத்தா...கைவிடமாட்டா. நாங்க வாரோம்.

வே: சொக்கா! நல்ல மருமகன் வந்து சேர்ந்தான். பணமும் போகுது; மானமும் போகுது; நாம வாழ்ந்த வாழ்வும் போகுது.

பர: சொக்கா! மாமாவுக்கு இப்படியெல்லாம் மனசு புண்ணாகும்படி பேசக்கூடாதுன்னு சொல்லி வைப்பா, சொல்லி வை...

வே: என்ன, என்ன! உன் மனசா புண்ணாகுது? குடியன், வெறியன், சூதாடி, கூத்திக்கள்ளன் அப்படி—இப்படின்னு ஊரார் பேசிக்கிறதைக் கேட்டு என் மனசில்லப்பா புண்ணாகுது?

பர: என்ன மாமா சொல்றீங்க?

வே: பணத்தைப் பாழாக்கு!

பர: உம்...

வே: குடிச்சி, கூத்தாடி...

பர: உம்...உம்!

வே: கண்ட காவாலி பசங்களோடக் கூடி...

பர: உம்...உம்...உம்...!

வே: என் மானத்தை வாங்கற. உன்னைப் பார்த்து ஊரு சிரிப்பா சிரிக்குது...

பர: ஏன் மாமா! ஊர் என்னைப் பார்த்துச் சிரிக்குதா? அல்லது உங்க மகனைப் பார்த்துச் சிரிக்குதா?

வே: அதென்னடா...புதுசா...அவனை இழுத்து நடுவ போடற? அப்பாவியாச்சே அவன்! நீ இருக்கிற நிழலில்கூட நிற்கமாட்டானே அவன்.

பர: நிக்கறதுக்கு யோக்கியதை வேணுமே மாமா...

வே: ஏன்?

பர: அது இருந்தா...ஜாதி—குலம் பாக்காமே ஒரு வேலைக்காரப் பொண்ணைக் கையைப் பிடிச்சி இழுப்பானா?

வே: என்ன, என் மகன் வேலைக்காரி பொண்ணை கைப்பிடிச்சு இழுத்தானா? ஏம்பா அவன் மேலே அபாண்டமா சொல்றே? அந்த ஜோலிக்கெல்லாம் போக மாட்டானே அவன்...

பர: ஏன் மாமா! நேர்லே காமிச்சா...நம்புவீங்கல்ல... காண்பிக்கிறேன், அந்தக் காட்சியை ஒரு நாளைக்கு!

காட்சி—35.

இடம்: நந்தவனம்

இருப்: வேதாசலம், மூர்த்தி, அமிர்தம், பரமானந்தன்.

*[அமிர்தம்—மூர்த்தி நந்தவனத்தில் காதல் கீதம் பாடிக்கொண்டிருக்கிறார்கள்.]*

அமிர்: நம் காதல் வெறும் விளையாட்டாகி விடும் என்று எனக்கு எப்போதும் ஒரு பயம்.

மூர்த்தி: இதெல்லாம் வீண் பயம் அமிர்தம்! உன்னை இழக்க நான் என்ன அவ்வளவு முட்டாளா? அமிர்தம், அப்பாவிடம் சொல்லி கூடிய சீக்கிரமே கல்யாணத்துக்கு ஏற்பாடு செய்கிறேன். அப்புறம் பாரேன்...நம்முடைய மாளிகையில் வசந்த மண்டபம் ஒன்று கட்டி, ஜலக்கிரீடைகளுக்கு ஒரு தடாகம் கட்டி, அதைச் சுற்றிலும் வெற்றி வேராலே வேலி போட்டு, அதைச் சுற்றிலும் மல்லிகை மலர்களால் அலங்கரித்து, அந்த மணம் கம்மென்று வீச, உன்னை என் மடிமேல் சாய வைத்து, இல்லை, இல்லை...உன் மடிமேலே நான் சாய்ந்து கொண்டு...

*[வேதாசலமும் பரமானந்தனும் வருகிறார்கள்.]*

வே: பாடுவாடா பாடுவா! டேய், மூர்த்தி! நீ பாட்டு தானா பாடுவ...

பர: மாமா! பாட்டு எங்கே? அதைக் கவனிச்சிங்களா? வசந்த மண்டபத்திலே...

வே: ஹூம்! வசந்த மண்டபந்தானா இருக்கும், இவரு கட்ற மாளிகையிலே...

பர: அங்கே ஜலக் கிரீடைக்கு ஒரு தடாகம்கூட இருக்கும்.

வே: இருக்கும், இருக்கும்!! இந்தாடீ, அமிர்தம்! என்ன துணிச்சலடி உனக்கு? போய், வரச் சொல்லடி ஒங் கப்பனை! அவன் கிட்டே பேசுகிறேன் நான். டேய், மூர்த்தி! வேலைக்கு ஆள் வச்சா அவ சேலையையாடா பிடிச்சு இழுக் கிறது?

பர: அட, சேலையைப் பிடிச்சு இழுத்தாக்கூட, என்னமோ விளையாட்டுத்தனமா செஞ்சிட்டான்னு விட்டுட லாமே மாமா! அவளுக்கு மாலையில்லே போடப்போறாராம் மாலை?

வே: போடுவாரு, போடுவாரு! ஏன் போடமாட்டாரு ...போடா போக்கத்தவனே! நடடா வீட்டுக்கு! மடையா...

[வேதாசலம் வீட்டில்]

மூர்த்தி: நான் எதையும் மறைக்கவில்லையே அப்பா! காமசேஷ்டை இல்லையே, நீங்க கண்டது?

பர: இல்லை...சகுந்தலை—துஷ்யந்தன் நாடகம்—வேதாசல முதலியார் தலைமையிலே! ஏம்பா, அப்படித் தானே? மூர்த்தி! நீ இவ்வளவு சீக்கிரம் கெட்டுடுவேன்னு நான் நினைக்கவே யில்லை. நம்ப ஜாதி..குலம்...ஆசாரம்...

மூர்த்தி: ஜாதி—குலத்திலே எனக்கு நம்பிக்கை இல்லை.

பர: உனக்கில்லை...எனக்கிருக்கிறது; எங்க மாமாவுக் கிருக்கிறது...ஏன் மாமா?

வே: ஆமாம் மாப்பிள்ளை! டேய், அந்தப் பொண்ணை டச்சி கிச்சி பண்ணியிருந்தா சொல்லுடா. இப்பவே காசு பணம் கொடுத்துக் கழுதைங்களை ஊரைவிட்டு ஓட்டிவிட லாம்.

மூர்த்தி: பணத்தை 'பாபக்கடை' என்று எண்ணுபவள் அமிர்தம்...

வே: அட, நிறுத்தடா! ஒரே வார்த்தை சொல்றேன். ஜாதி ஆசாரத்தைக் கெடுக்காதே.

மூர்த்தி: நான் அமிர்தத்துக்குத் துரோகம் செய்ய முடியாதப்பா. இதோ, நான் போகிறேன். அமிர்தத்தோடு கூலி வேலை செய்தாவது பிழைப்பேன். உங்கள் குலப்பெருமை குன்றாமலிருக்கட்டும்...

வே: டேய், மூர்த்தி! உன் மனசு என்ன இரும்பா?

பர: ஹூம்! இரும்புமில்லை, பித்தளையுமில்லை... சும்மா பையன் மிரட்டுகிறான்! வீட்டை விட்டு வெளியே போனா...காரியம் பலிக்கும்ங்கற தந்திரம்...

வே: அதுதான் நடக்காது மாப்பிள்ளை. அதுதான் இவரு கிட்டே நடக்காதுன்றேன்...

பர: ஏம்பா, மூர்த்தி! நீ போயிட்டா...என்னாப்பா! போயிட்டான் பிள்ளைனனு மாமா தலை முழுகிட்டுப் போறாரு! இது என்ன பிரமாதம்! ஏன் மாமா?

வே: பின்னே என்ன மாப்பிள்ளை! டேய், ஒரே வார்த்தை! அமிர்தம் என்ற பேரை மறந்திட்றியா? அல்லது வீட்டைவிட்டு வெளியே போயிடறியா? என்ன சொல்றே?

மூர்த்தி: அப்பா, நான் வெளியே போயிட்டா...உங்களுக்குத்தானே தலையிறக்கம்?

வே: நீ என் பிள்ளேன்னும் நெனைச்சாதானேடா தலையிறக்கம்?

பர: அப்படிச் சொல்லுங்க மாமா...

மூர்த்தி: அப்பா! அமிர்தத்திற்கு நான் எந்த விதத்திலும் துரோகம் செய்யமாட்டேன்.

வே: அப்படியா...இன்னையிலிருந்து நீ என் மகனல்ல; நடடா வெளியே...

பர: ஆமா...வேதாசல முதலியார் மூர்த்தியோட அப்பனுமில்லே...

மூர்த்தி: அப்பா! இதோ நான் போகிறேன்.

[மூர்த்தி வீட்டைவிட்டு வெளியேறுகிறான்.]

பர: ஆரம்பித்துவிட்டது சுந்தர காண்டம்.

வே: நீ வேற...வெந்த புண்ணிலே வேல் கொண்டு குத்து.

பர: வெந்த புண்ணிலே வேல்; மரக்கிளையிலே பிணம்.

காட்சி—36.

இடம்: அமிர்தத்தின் வீடு

இருப்: மூர்த்தி, அமிர்தம்

[மூர்த்தி, நேராக அமிர்தத்தின் வீட்டுக்கு வருகிறான்.]

மூர்த்தி: அமிர்தம்!

அமிர்: ஆ, நீங்களா...!

மூர்த்தி: ஏன் அமிர்தம், ஒரு மாதிரியா...இருக்கிறே?

அமிர்: வீட்டிலே என்னமோ பேசினாங்க...பயம் இன்னும் அடங்கலீங்க...

மூர்த்தி: வா, போகலாம் அமிர்தம்! ஒரு நல்ல சேதி. நம்ப கல்யாணத்திற்கு அப்பாவின் சம்மதமே இல்லாமல் போய்விட்டது.

அமிர்: அப்படீன்னா...

மூர்த்தி: அவருக்கு மகனைவிட ஜாதிதான் உயர்வாக இருக்கிறது. 'நீ என் பிள்ளை இல்லை; வீட்டை விட்டுப் போடா, வெளியே' என்று துரத்திவிட்டார், கண்ணே!

அமிர்: அய்யய்யோ!

மூர்த்தி: ஜாதி பேத அடிமையிலிருந்து விடுதலை பெற்றுவிட்டேன். இனி நாம் சந்தோஷமாக வாழலாம்.

அமிர்: என் பொருட்டு தாங்கள் சொத்து—சுகங்களை இழப்பதா?

மூர்த்தி: சுகத்தை இழந்ததாக எந்த முட்டாள் சொன்னான்? அமிர்தம்! சுகம் எங்கிருக்கிறது என்று தேடித் தானே இங்கு வந்து சேர்ந்தேன்...

அமிர்: இங்கிருப்பது மண்குடிசை!

மூர்த்தி ஆம்; அதுவே நமக்கு மாளிகை அமிர்தம்! மண்ணிலே மாணிக்கம் கண்ணே! பெற்றோர் சம்மதித்தால் மாட மாளிகையில் வாழலாம்; இல்லையேல் இந்த மண் குடிசையே மாளிகை. அமிர்தம்! அழாதே. உலகத்தைப் பார்த்துச் சிரிக்க வேண்டிய நேரத்தில் ஏழ்மையை நினைத்து ஏன் அழுகிறாய்? குயிலே! இனி என் உழைப்பே செல்வம்; உன் முகமே இன்ப ஒளி!

காட்சி—37.

இடம்: வேதாசல முதலியார் வீடு

இருப். வேதாசல முதலியார், முருகேசன்.

வே: கோவம் வருதே பிரமாதமாய்! இந்தக் கோவத்தை உன் வீட்டிலே காட்டி, உன் பொண்ணெ அடக்க ஒடுக்கமா...வச்சிருந்தா இந்தத் தீம்பு வருமா என் தலைக்கு! ஒரே பொண்ணுன்னு செல்லங் கொடுத்தே. நானும் ஒரே மகன்னு பார்த்தேன். இப்போ, மானம் போகுது...

முரு: ஏங்க, என மகளா தப்பு தண்டா செஞ்சிது? பத்தரை மாத்து தங்கமாச்சிங்களே அது! ஏங்க, ஏழை மேலே அபாண்டமா பழி சொல்றீங்க? விலையாகிற பண்டங்க அது.

வே: நல்ல விலைக்கு வித்துப் பூட்டேனுதான் நானும் சொல்றேன். அந்த தடிக்கழுதை மூர்த்தி, 'வீடு வேணாம், வாசலும் வேணாம், அந்தப் பொண்ணுதான் வேணும்'னு போயிட்டான். அவ்வளவு தூரம் ஏறிப் போயிடுச்சி, உன் மக போட்ட சொக்குப் பொடி!

முரு: என்னாங்க சின்ன எசமானா? உங்க மகனா?

வே: எனக்கு ஏண்டா அவன் மகனாகிறான்? உன் மருமகன்டா அவன்...

முரு: நல்லாயிருக்குங்க சேதி! என்ன தைரியங்க, சின்ன எசமானுக்கு?

வே: அவன் கிடக்கிறாண்டா மடையன். உன் மகளுக்கெங்கடா அறிவு போச்சு? உன் மக சம்மதிச்சாளாமே, அதுக்குச் சொல்லு! எங்கிருந்து வந்தது அந்த நெஞ்சழுத்தம்? எங்க வீட்டுச் சோறுடா, எங்க வீட்டுச் சோறு! தின்னு கொழுத்துப் போயி...என் மகனை வேற கையைப் பிடிச்சு இழுக்க வந்துட்டா...

முரு: எசமான்! வார்த்தையை அளந்து பேசுங்க... நாங்க தலைமுறை தலைமுறையா மானத்தோடு வாழ்ந்தவங்க. தெரிஞ்சிக்கங்க...இப்பவே போறேன். ஒரே வெட்டா வெட்டிப் போட்டுட்டு வர்றேன்.

வே: யாரைடா?

முரு: என் குலத்தைக் கெடுக்க வந்த குட்டிச் சாத்தானை!

காட்சி—38.

இடம்: நந்தவனம்
இருப்: அமிர்தம், மூர்த்தி

அமிர்: குடும்பத்தைக் கெடுத்தவளென்று சொல்லுவாங்களே...

மூர்த்தி: உண்மையைக் கூறமுடியாத ஊமைகள்!

அமிர்: தந்தைக்கும் தனயனுக்கும் சண்டை மூட்டினவளென்று தூற்றுவார்களே...

மூர்த்தி: இதயஜோதியைக் காணாத குருடர்கள்!

அமிர்: தகப்பனையும் மகனையும் வேறுபடுத்தினவள் என்று ஏசுவார்களே...

மூர்த்தி: காதல் கீதம் கேட்டறியாத செவிடர்கள்.

அமிர்: என்னதான் காதலென்றாலும் கட்டுப்பாட்டை யும் காவலையும் மீறலாமான்னு கேட்பாங்களே...

மூர்த்தி: அமிர்தம்! சொல் வேறு; செயல் வேறாக உள்ள சோம்பேறிகளிடம் உலகம் சிக்கிச் சீரழிகிறது. நாம் அந்தக் கொடிய சிறையிலிருந்து வெளியேறுகிறோம் சிரித் துக் கொண்டு. அமிர்தம்! நான் இன்றே சென்னை போகி றேன். அங்கு என் நண்பர்களின் உதவியைப் பெற்று உடனே கல்யாணத்துக்கு ஏற்பாடு செய்கிறேன். அதுவரையிலும் ஜாக்கிரதையாக இருக்க வேண்டும்.

அமிர்: என் பொருட்டு உங்களுக்கு இவ்வளவு கஷ்டம்?

மூர்த்தி: ரோஜாவைப் பறிக்கும்போது கூடத்தான் முள் தைக்கிறது கையிலே. இதெல்லாம் ஒரு கஷ்டமா?

காட்சி—39.

இடம்: அமிர்தம் வீடு

இருப்: முருகேசன், முத்தாயி, நண்பர்.

[அமிர்தம் வீட்டுக்கு வருகிறாள். அப்போது அவள் தகப்பனார் கோபத்துடன் நண்பர்களிடம் பேசிக் கொண்டிருக்கிறார்.]

முரு: ஜாதி குலம் பார்க்காமே, இப்படிப் போற பொண்ணுங்களெ வெட்டி வெட்டி வீச வேண்டாமா?

நண்: இந்தாப்பா, முருகேசா! வெள்ளரிக்காயா, வெட்டி வெட்டி வீசறதுக்கு?

முரு: பின்னே என்னாங்க, மனுஷனுக்கு மானந்தாங்க பெரிசு. அதைப் போக்க எப்போ இந்தப் பொண்ணு துணிஞ் சிடிச்சோ, அப்புறம் எதுக்குங்க இருக்குது இந்த மீசை?

முத்: என்னங்க! வந்த மனுஷன் கையைக்கூட நனைக் காமே, சும்மா வளவளன்னு பேசிக்கிட்டே இருக்கிறியே...

முரு: போடி உள்ளே! இந்த விஷயத்தில் நீ தலையி டாதே! இரண்டிலே ஒண்ணு தீத்துக்கிட்ட பிறகுதாண்டி இந்த வீட்டிலே கையை நனைப்பேன்...

நண்: இந்தாப்பா, முருகேசா! வா, வெளியிலே போயி சாவதானமா பேசலாம். நான் சொல்றபடி கேளு. விடியற துக்குள்ள பொண்ணெக் கூட்டிக்கிட்டு புதுப்பாளையத்துக் குப் போயிடு. அங்க நம்ப ஜாதியானா பார்த்து ஒருத்தனைக் கட்டிப் போட்டுட்டா தன்னாலே அடங்கிடும் அமிர்தம்!

முரு: இதுவும் நல்ல யோசனைதானுங்க; நீங்க சொல்ற படியே வெடியிறதுக்குள்ளே பொண்ணை கூட்டிக்கிட்டுப் புதுப்பாளையத்துக்குப் போயிடுறேன்.

நண்: அப்படித்தான் செய். நான் வரட்டுமா? கோவத் திலே ஏதாச்சும் அது இதுன்னு செய்துடப் போற...

முரு: ஹூம்...பெத்த பொண்ணு சீரில்லாததினாலே இந்த மாதிரி எல்லாம் வந்திருக்கு...

[முருகேசன் பற்றவைத்த சுருட்டை வீசி எறிகிறான். வீடு தீப்பற்றி எரிகிறது.]

காட்சி—40

இடம்: சென்னை, நண்பர்களின் அறையில் மூர்த்தி.

இருப்: மூர்த்தி, மற்றும் அவன் நண்பர்கள்.

1வது நண்: மூர்த்தி! ஜாதிவிட்டு ஜாதி கல்யாணம் பண்ணிக்கணும் என்கிறே..பாதரை வேறே கோவிச்சிக்கிட்டு வந்திருக்கிறே...இதெல்லாம் என்கிரேஜ் பண்ண முடியாது.

2வது நண்: மூர்த்தி! என்னமோ விபரீத காரியம் செய் யிறே...முடியாதுன்னா முடியாதுதான்.

3வது நண்: என்னைத் தொந்தரவு படுத்தாதே மூர்த்தி! இல்லைன்னா இல்லைதான்...

இல்லை...இல்லை...இல்லை...இல்லை...!

*[இல்லையென்ற பதிலுடன் திரும்பிய மூர்த்தி, அவன் கழுத்திலிருக்கும் பொன் செயின் ஞாபகத்திற்கு வரவே, அதை மார்வாடிக் கடையில் விற்று ரூபாய் 30 பெற்றுக் கொண்டு எங்கேயாவது அமிர்தத்துடன் காதல் வாழ்க்கை நடத்தலாம் என்ற எண்ணத்துடன் சொந்த ஊருக்குத் திரும்பி வருகிறான்.]*

மூர்த்தி: ஐயா! இங்கிருந்த முருகேச நாயக்கர் வீடு என்னவாயிற்று?

ஒருவன்: அதெல்லாம் எரிஞ்சி சாம்பலா...போயிடுச்சிங்க...

மூர்த்தி: அவர் மகள் அமிர்தம்...?

ஒருவர்: அந்த அம்மாளும் எரிஞ்சி சாம்பலா...போயிட்டாங்க!

காட்சி—41

இடம்: ஹரிஹரதாஸ் ஆஸ்ரமம்

இருப்: மூர்த்தி, ஹரிஹரதாஸ், சுந்தரகோஷ்

*[அமிர்தத்தின் முடிவையறிந்த மூர்த்திக்குத் தன் ஆவியின் துடிப்பை அடக்கமுடியாதவனாகி, சாந்தி வேண்டி ஒரு ஆஸ்ரமத்தில் சேருகிறான். அந்த ஆஸ்ரமத்துக்குக் குரு ஹரிஹரதாஸ்]*

ஹரி: குழந்தாய்! வா, என் அருகில்.

மூர்த்தி: சுவாமி நமஸ்கரிக்கிறேன்.

ஹரி: ஓ..தொடாதே யப்பா! தொடாதே!! பாழும் பணத்தைத் தொட்டுத் தொட்டு பாபக்கறை ஏறியுள்ள உன் கரங்களால், பரமனின் கோயில் படிகட்டுக்களில் ஏறி இறங்கும் இப்புனித பாதங்களைத் தொடாதே குழந்தாய்! ஆஸ்ரமத்தின் விதிகளை அறிவாயா?

மூர்த்தி: அறிவிக்கப்பட்டேன் தேவா!

ஹரி: உன் சொத்துக்கள் யாவும் ஆஸ்ரமத்துக்குச் சேரவேண்டுமென்று பத்திரத்தில் கையொப்பமிடச் சித்தமா.

மூர்த்தி: உத்தரவை எதிர்பார்க்கின்றேன் தேவா!

ஹரி: (ஆஸ்ரம ஆட்களைப் பார்த்து) அழைத்துப் போய், அனுமதிச் சடங்குகளைச் செய்யுங்கள். சுந்தரகோஷ்! இனி நாம் செல்வோமா, மந்திராலோசனை சபைக்கு?

சுந்தர: உம்...

காட்சி—42

இடம்: வேதாசல முதலியார் வீடு

இருப்: பரமானந்தன், மணி, வேதாசல முதலியார், சரசா.

பர: கேட்டாயா மணி! குடியன், வெறியன், கூத்திக் கள்ளனென்று ஊரார் பேசிக்கிறதைக் கேட்டு மானம் போகுதாம் மாமாவுக்கு!

மணி: நல்ல மாமனாருண்ணா கோவமில்லே வந்திருக்கணும்?

வே· கோவம் வராமலா இருக்கு?

மணி: எங்கேய்யா வந்தது கோபம்? இல்லை, தெரியாமத்தான் கேக்கறேன். எங்க வந்தது கோவம்? கோவம் வந்திருந்தா...அப்பவே கன்னத்திலே ரெண்டு அறை கொடுத்துக் கேட்டிருக்கமாட்டேளா?

வே: இவ்வளவு பெரிய பிள்ளையை நான் அடிச்சித் திருத்தணுமா?

மணி: என்னது, பரமுவையா அடிக்கச் சொன்னேன்? ஆளப்பாரு! குடியன், வெறியன் அப்படி இப்படின்னு திட்றானே, அவனையல்லவா கன்னத்திலே ஒரு அறை

கொடுத்துக் கேட்டிருக்கணும்? ஏண்டாப்பா! ஊர்லே, உலகத்திலே நடக்காதது என்னடா நடந்து போச்சுது புதுசா. குடிக்கிறான், குடிக்கிறான்னு சொல்றியே, யார் வீட்டுக் காசு? உம்...அறைஞ்சன்னா...

வே: டேய்...டேய்...யாரைடா...?

மணி: ஊகூம்...உங்களையல்ல. அந்த மாதிரி நீங்க அவன்களைக் கேட்டிருந்தீங்கன்னா...சரியான மாமனாரு தான்...

பர: அப்படிக் கேள் மணி, அந்த மரமண்டையிலே ஏற்ற வரைக்கும் கேள்...

வே: உங்க ஞாயம் இருக்கே!...நான் ஒரு மடையன்!

மணி: இப்ப சொன்னீங்களே, அது சரியான... வார்த்தை!

பர: மணி! அங்கென்னப்பா பேச்சு? நான் குடிகாரன், சூதாடி, கூத்திக்கள்ளன்—இவ்வளவுதானே? இதைப் பற்றி இந்த ஆசாமி இன்னும் பேசினா...நான் கொலைகாரனாக வேண்டியதுதான்! தீர்மானமாய்ச் சொல்லிடு அதை...

வே: அட பாவி! இவ்வளவு தூரத்துக்கு வந்துட்டதா? குடியைக் கெடுத்து, சொத்தைப் பாழாக்கி, என் மானத் தையும் வாங்கிட்டே? இனிமே அது ஒன்றுதானே பாக்கி? அதையும் நடத்திடு! நாயைக் குளிப்பாட்டி நடுவீட்டில் வைத்தா...

மணி: அது லொள் லொள்ளுனு கொலைக்கும்!

வே: அப்பா, பரமு! உனக்குக் கோடி நமஸ்காரம். நீ என் வீட்டில் குடித்தனம் பண்ணது போதும். உன் பெண் டாட்டியை அழைச்சிக்கிட்டுப் போயிடப்பா, வீட்டைவிட்டு! உன் முகத்திலே விழிக்க இஷ்டமில்லை.

பர: எனக்கும் அதே தீர்மானம்தான்!

மணி: அப்போ...புறப்படு!

பர: இரு மணி! என் பொண்டாட்டியை இவன் வீட்டிலே விட்டுட்டுப் போறதுக்கு நான் என்ன அவ்வளவு மானங் கெட்டவனா? ஏய், சரசா! என்னடி இளிக்கிறே? பார்த்தியா மணி! பத்தினி ஆக்ட் தத்ரூபமாய் இல்லே? இந்தாடி சரசா! உன் நகையெல்லாம் கழட்டி உங்கப்பன் முகறையிலே எறிஞ் சிட்டு என் பின்னாலே புறப்படு!

சரசா: எங்கே?

பர: வா என் பின்னாலே. அப்புறம் தெரியும்...

சர: அப்பா! என்ன இது? என்னை எங்கே போகச் சொல்றீங்க?

வே: போம்மா, உன் புருஷனோடு! ஒருவேளை, புரு ஷன் பெண்டாட்டி தனிக்குடித்தனம் பண்ணினா புத்தி வருமுன்னு சொல்லுவாங்க...

சர: அப்பா! என்னை இப்படி நிற்கதியாய் விடலாமா?

வே: நான் என்னம்மா செய்றது? எல்லாம் விதிப்படி நடக்கட்டும்! என்னால் ஆனவரைக்கும் சொல்லிப் பார்த் தேன். துளியாவது கேக்கறானா என் பேச்சை? ஒரே மகன்! ஒரு சொல் தாங்காமல் வீட்டை விட்டே போயிட்டான்...

மணி: அடாடா! என்ன கருணை மகன் மேலே; இவரு தாம்பா அந்தக் காலத்திலே தசரதராசாவாக இருந்தாரு...

வே: அட, சும்மா இர்ரா அனுமாரே. அம்மா! இனி மேல் இவன் இந்த வீட்டிலே இருந்தா நான் தூக்குப் போட் டுக் கொண்டுதான் சாகணும்.

பர: பார்த்தியா மணி! மகாகனம் பொருந்திய மாம னார் அவர்கள் மரக்கிளையில் தொங்கப் போகிறார்களாம்!

மணி: மங்களகரமான ஆரம்ப தேதியை எதிர்பாருங் கள்!

வே: டேய்! இனிமே ஏதாவது பேசினீங்க உதைதான் விழும். வீட்டைவிட்டுப் போங்கடா...கழுதைகளா...!

பர: மணி...பைத்தியம்....கழுதையாம்!

மணி: யாருயா கழுதை?

[வேதாசலத்தை அடிக்கிறான்.]

வே: டேய்...டேய்...

சர: அப்பா!...அப்பா...!!

பர: என்னடி வேஷம் போடறே? மானம் போகுதோ? நடடி வெளியே...

காட்சி—43

இடம்: ஹரிஹரதாஸ் ஆஸ்ரமம்

இருப்: ஹரிஹரதாஸ், சுந்தரகோஷ், மூர்த்தி.

ஹரி: இன்று மந்திராலோசனை சபைக்கு வர ஏன் இவ்வளவு தாமதம்?

சுந்தர: உமது சீட கோடிகள் நித்ரா தேவியுடன் விளையாட இவ்வளவு நேரமாயிற்று. இந்தத் தொல்லைக்சாக வேறே எங்கேயாவது போய்விடலாமென்றால் கேட்டால் தானே...

ஹரி: கரும்புத் தோட்டத்தை விட்டுக் காடுமேடு சுற்றுவதா? பேதமை சுந்தரி, பேதமை! நமக்கு இங்கு என்ன குறை? பரலோக உபதேசம் செய்ய பூ; தர்ப்பணத்துக்குப் பக்தர்கள்; சிருங்கார கனிரசம் தர நீ; ஆஸ்ரமம் அமைத்துக் கொள்ளாவிட்டால் இந்த ஆனந்தம் ஏதடி, இந்த ஆனந்தம்? கிளியே! மோகனாங்கியே! துள்ளும் மதவேள் கணையாலே, தொல்லை மிக அடைந்தேன் பகலாலே! வா, நாம் இன்ப மாளிகைக்குச் செல்வோம்...

[இக் காட்சியை மூர்த்தி கண்டுவிடுகிறான்.]

மூர்த்தி: ஹா! கபட வேஷதாரியே! காமுகா...பகலிலே யோகியாகவும், பாதி ராத்திரியிலே போகியாகவுச காட்சியளிக்கும் பேடிப் பயலே! ஆசிரமமா இது? மோட்ம்

சாம்ராஜ்யத்திற்குப் பயிற்சி கூடமா? பரமனின் பாதார விந்தத்துக்குப் பாதை காட்டும் சன்மார்க்க ஸ்தாபனமா? அடே, ஊரை ஏய்க்கும் உன்மத்தா! உனக்கு கையிலே ஜெபமாலை; வெள்ளியிலே யோகத்தண்டு; புலித்தோல் ஆசனம்; பொற்பாதக் குறடு! நாட்டின் நன்மதிப்பைக் கெடுக்கும் நயவஞ்சகப் பதரே! ஏன் நடுங்குகிறாய்? கொலைக்குத் துணிந்த துஷ்டனா நீ? பஞ்சமா பாதகத்தைப் பயமின்றி செய்யத்தான் இந்தப் பண்டார வேஷமா? பாவி! பகல் வேஷக்காரா! பாமரரை ஏய்த்துப் பிழைக்கும் பரம சண்டாளா! நீ இருந்தால் என்ன; இறந்தால் என்ன?...

[மூர்த்தி ஹரிஹரதாசை கொலை செய்துவிடுகிறான்.]

சுந்தர: கொலை!...கொலை...!!கொலை...!!!

[மூர்த்தி பிடிபடுகிறான்.]

காட்சி—44

இடம்: பழக்கடை

இருப்: டிரைவர், அமிர்தம், பழக் கடைக்காரர்.

[எரியும் வீட்டிலிருந்து தப்பி வந்த அமிர்தம். ஒரு லாரியில் யாருக்கும் தெரியாமல் ஏறிக் கொண்டு வரும்போது லாரி டிரைவர் பார்த்து விடுகிறான.]

டிரை: ஏய், யாரடி? திருட்டுக் கழுதை! இறங்கடி கழுதை...

அமிர்: ஐயா! நான் ஒரு அனாதை! எங்க வீடு எரிஞ்சி, என் தாய்—தகப்பனார் அதிலே எரிஞ்சி போயிட்டாங்க...

பழக்க: ஐயோ, பாவம்! ஏம்மா, எங்க கடைப் பழங்களை எடுத்துக்கிட்டுப் போய் தெருவிலே வித்துகிட்டு வர்றியா? ஏதாவது சம்பளம் போட்டுத் தர்றேன். .

அமிர்: ஆகட்டும் ஐயா...

காட்சி—45.

இடம்: குடிசை

இருப்: சரசா, பரமானந்தன், மணி.

[பரமானந்தனும் சரசாவும் மணியும் ஒரு குடிசைக்குச் செல்கின்றனர்.]

பர: சரசா! இனிமே இதுதான் நம்ப வீடு. பங்களா இல்லை; மாடி இல்லை; வராண்டா இல்லை; தோட்டமில்லை.

மணி: அட, தோட்டமிருக்குப்பா! அதிலே புஷ்பச்செடிகள் கிடையாது; பாம்புப் புற்று இருக்கும்...

பர: சரசா! இந்தத் தோண்டியில் ஒண்ணு எடுத்துக்க.. ஹூம்...இந்தக் கிணத்திலிருந்து மடமடவென்று தண்ணீர் இறைச்சி கொட்டு.

மணி: பரமானந்தா...ஹூம்...

பர: இந்த பூட்சை கண்ணாடிபோல பாலீஷ் பண்ணு. வேலை எல்லாம் முடிந்த பிறகு இதைச் சாப்பிடு. நடக்கட்டும், நான் சொன்ன வேலைகள்!

[சரசா போகிறாள்]

பர: மணி! தகப்பன் செய்த குற்றத்திற்கு இவள்...

மணி: தந்தை செய்த தவறுக்காக இவளை ஏன் வதைக்கவேண்டும் என்கிறாய். ஆனந்தா! நமது திட்டத்தை மறந்து விட்டாயா? தடுமாற்றம் ஏற்பட்டால் மரக் கிளையில் தொங்கிய உன் தந்தையை நினை!

[சரசா மண் பானையைத் தவறிக் கீழே போட்டு விடுகிறாள்.]

பர: இதே குற்றத்தை அமிர்தம் செய்திருந்தால்...

மணி: சாக்ஷாத் பத்ரகாளியாகிவிடுவாள் தர்மபத்தினி சரசாதேவி...

பர: சரசா! இந்தா...மார்க்கட்டுக்குப்போய், சமையலுக்கு வேண்டிய காய் கறிகளை வாங்கி வா.

சர: நானா?

பர: ஏன், உன் தாதியை அனுப்புகிறாயா? நீ அன்னக்காவடி ஆனந்தனின் மனைவி; அல்லி ராணியல்ல...

மணி: உனக்கு வேலை கிடைக்கும்வரை உன் மனைவி பக்கத்து மார்க்கட்டில் காய்—கறிகள் விற்றுவர வேண்டும்.

சர: என்னை ஏன் இவ்விதம் சித்ரவதை செய்கிறீர்கள்? என்னை இக்கிணற்றிலே பிடித்துத் தள்ளிவிடுங்களேன்.

மணி: ஆனந்தா! இந்தா...

பர: என்ன அது?

மணி: காய்கறி...

பர: (சரசாவை நோக்கி) இந்தா தூக்கு கூடையை! ஊம்...நட.

[சரசா காய்கறிக் கூடையைத் தூக்கிக் கொண்டு செல்கிறாள்.]

காட்சி—46.

இடம்: வீதி

இருப்: அமிர்தம், பாலு முதலியார், தண்டபாணி

[அமிர்தம் பழக் கடையிலிருந்து ஒரு கூடையில் பழம் எடுத்துக்கொண்டு வீதி வழியே வருகிறாள்.]

அமிர்: பழம்...மாம்பழம்...மாம்பழம்!

தண்ட: எஜமான், போதும் தெரிசனம்; வாங்க போகலாம்...

பாலு: போதுமா! தண்டச்சோறு (பாட்டு)' ஆற்றுவார் இல்லையே; இந்தக் கட்டையைத் தேற்றுவார் இல்லையே!

தண்ட: அட, கர்மமே! நல்ல உத்தியோகம் நமக்குக் கிடைத்தது. எஜமான்! போதும்; வாங்க போகலாம்.

பாலு: போவோமா? போகிறேன். போகிறேன். இதோ! போதுமா?

தண்: போதும், வாங்க!

அமிர்: பழம்...மாம்பழம்...

தண்ட: எஜமான் கொஞ்சம் இருங்க. ஏய், மாம்பழம்!

அமிர்: ஏய்யா, பழம் வேணுமா? எடுத்துக்குங்க, நாரு இருக்காது, நல்லாயிருக்கும்.

தண்ட: நாட்டுச் சரக்குதான்; நல்லாத்தான் இருக்கும்; பார்க்கும்போதே தெரியுதே!

பாலு: தண்டச்சோறு! அங்கே என்ன பேச்சு? அடே இவதான். (பாட்டு) 'கண்டு கொண்டேனே, என் மகளை— கண்டு கொண்டேனே!' வா கண்ணு, வீட்டுக்கு.

அமிர்: என்னய்யா அக்கிரமம்!

பாலு: அதை உன் வாயால் சொல்லாதேம்மா! வாம்மா வீட்டுக்கு! டேய், தூக்குடா கூடையை!

[அமிர்தத்தை பாலு முதலியார் அழைத்துச் செல்கிறார்.]

காட்சி—47

இடம்: ஆஸ்பத்திரி

இருப்: அமிர்தம், பாலு, டாக்டர்.

[ஆஸ்பத்திரியில் பாலு முதலியாரும் அமிர்தமும்]

பாலு: டாக்டர்! நான் இந்த ஊருக்குப் புதுசு. என்னை பர்மா பாலு முதலி என்று சொல்வார்கள். பர்மாவிலிருந்து கஷ்டப்பட்டு மணிப்பூர் வழியாக இங்கு வந்து சேர்ந்தேன். வரும் வழியிலே என் மகள் சுகிர்தம் காணாமல் போயிட்டா டாக்டர்! திடீர்னு அகப்பட்டுட்டா டாக்டர். அவள் இருக்கிற கோலத்தைப் பாருங்கள் டாக்டர்! நல்லா பாருங்கள், டாக்டர்...

[டாக்டர் கையைப் பிடித்துப் பார்க்கிறார்.]

பாலு: என்னையா கையைப் பிடிச்சு பார்க்கிறே? ஓய்! என் மகள் சுகிர்தம் கொஞ்ச நாளா என்னைப் பார்க்காததினாலே புத்தி கொஞ்சம் மாறிப் போச்சு. அவ்வளவு தான்!

அமிர்: டாக்டர்! எனக்குப் புத்தியும் மாறல்ல; மறதியுமல்ல. தெரு வழியா...போய்க்கிட்டு இருந்தேன்...என்னைக் கூப்பிட்டுக்கிட்டு வந்து தன் மகளென்று சொல்றாரு..

பாலு: பின்னே...என்னவாம்னே?

அமிர்: டாக்டர்! அவருக்குத்தான் ஏதாவது பைத்தியமா இருக்கும்.

பாலு: உம்...கிடையாது.

அமிர்: ஐயா! என்னை தயவுசெய்து வெளியே அனுப்பி விட்டால் போதும்.

பாலு: பார்த்தீங்களா! 'வெளியே போகணும்... வெளியேபோகணும்'-சதா இதே பொலம்பல்தான் டாக்டர்! இதனால் ஆயிரம் வந்தாலும் சரி, போனாலும் சரி, என் மகள் பைத்தியத்தை...

டாக்: தீர்த்துடுறேன்...

பாலு: தீத்துடுங்கோ...

டாக்: இதென்னடா, வம்பா இருக்கு! பெண்ணுக்குப் பைத்தியம்னு அவர் சொல்றாரு; அவருக்குப் பைத்தியம் என்று அவர் பொண்ணு சொல்லுது...உம்...!

தண்ட: டாக்டர்! அப்ப...உங்களுக்குத்தான் பைத்தியம்!

டாக்: என்ன, என்ன! எனக்கா?

தண்ட: பின்னே என்னங்க! நீங்க டாக்டரா இருந்துக்கிட்டே இவங்க ரெண்டு பேரிலே யாருக்குத்தான் பைத்தியம் என்று உங்களுக்கே தெரியலை என்கிறிங்களே...

டாக்: சீ, பைத்தியம்! வாயை மூடு...

தண்ட: என்னங்க! நான் பைத்தியமா? அப்ப, இங்க இருக்கிற நாலு பேருக்கும் பைத்தியம்தான்...

பாலு: பைத்தியம்! போடா உள்ளே...டாக்டர்! என் மகள் பைத்தியத்தை எப்படியாவது தீர்த்துப்பிடுங்க. ஆயிரம் போனாலும் சரி, ஆயிரம் வந்தாலும் சரி! அதைத் தீர்த்துப்பிடுங்க.

டாக்: முதலியார்வாள்! உங்க மக பைத்தியத்தை தீர்த்துப்பிடுறேன். நீங்க கொஞ்சம் உள்ளே போய் இருங்க.

பாலு: அதுக்கு வேறே ஆளைப் பாருமய்யா...

டாக்: முதலியார்வாள்! நீங்க உள்ளே போய் இருங்க. நான் கூப்பிடுகிறேன்.

பாலு: கூப்பிடுவீங்கல்ல? அப்ப சரி...ஹலோ டாக்டர்.

[திரும்பி வருகிறார்.]

டாக்: நீங்கள் ஒன்றும் கவலைப்படாதீங்க. உங்க மகளை நான் கவனிச்சிக்கிறேன்.

பாலு: ஆமா..கவனிச்சிக்கிறீங்களா? நல்லா கவனிச்சிக்கிருங்க.

டாக்: அம்மா! நீ ஒரு உத்தமமான பெண். உன்மத்தம் பிடித்த அவர் கண்ணுக்கு அவர் மகள்போல் தோன்று றாய் நீ.

அமிர்: எனக்கிருந்த பயம் தீர்ந்து போச்சு! எங்கே, நீங்களும் என்னைப் பைத்தியம் என்று நினைச்சிக்கிடுவீங் களோ என்று பயந்தேன்...

டாக்: இல்லை. பாலு முதலியாருக்குத்தான் பைத்தி யம். உன்னாலே அந்தப் பைத்தியத்தைத் தெளிய வைக்க லாம்.

அமிர்: அவர் பைத்தியத்தை நான் தெளியவைக்க முடியுமா?

டாக்: முடியும். அதிலே ஒரு ஆபத்தும் இருக்கு.

அமிர்: அவர் பைத்தியத்தைத் தெளிய வைக்க எனக்கும் ஆசைதான். ஆனா...ஆபத்து என்று என்னென்னமோ சொல்றீங்களே?

டாக்: உன்னாலே அவர் பைத்தியம் நீங்கும். நீங்கின உடனே, நீ அவர் மகளல்ல என்பதை அறிஞ்சிக்கிடுவார். மறுபடியும் நீ ஏழையாக வேண்டும். என்ன சொல்றே?

அமிர்: சொல்றது என்ன! அவரைப் பார்த்தாலே பரி தாபமாக இருக்கிறது. அவர் பைத்தியத்தைத் தெளிய வைக்க முயற்சி செய்கிறேன் டாக்டர்!

டாக்: அம்மா! நான் நினைத்த மாதிரி, நீ உண்மையில் ஒரு உத்தமி. கவனி...நீ அவர் மகள். பைத்தியம்போல் நடிக் கணும். நான் உனக்குக் கொடுக்கிற மருந்தெல்லாம் அவர் சாப்பிட்டாத்தான் நான் சாப்பிடுவேன் என்று அவரையும் சாப்பிடச் செய்ய வேண்டும். என்ன சொல்கிறாய்?

அமிர்: ஆகட்டும் டாக்டர்!

டாக்: மிஸ்டர் முதலியார்வாள்...

பாலு: என்னங்க டாக்டர்!...அட, என்னய்யா கூப் பிட்டுவிட்டுப் பேசாம இருக்கிறீங்களே...

டாக்: முதலியார்வாள்! உங்க மகள் பைத்தியத்தை நான் தீர்த்துவிடுகிறேன.

பாலு: ஆமா...தீர்த்துப்பிடுங்க.

டாக்: ஆனால் ஒன்று. உங்க மக மனசிலே கவலையோ, வருத்தமோ ஏற்படக்கூடாது.

பாலு: ஏற்படாது.

டாக்: அப்படி ஏதாவது ஏற்பட்டதோ, அப்புறம் பைத்தியம் முத்திடும்.

பாலு: டாக்டர்! பைத்தியம் முத்த வேண்டாம்.

டாக்: அப்போ...உங்க மகள் சொல்கிறபடி நீங்க நடக்க வேண்டும்.

பாலு: என்னங்க டாக்டர்! குழந்தை ஆடச் சொன்னா ஆடுறேன்; பாடச் சொன்னா பாடியே தீர்த்துவிடுகிறேன்.

[பாலு முதலியார் பைத்தியம் தெளிகிறது.]

பாலு: டேய், இங்கே வாடா! எல்லாம் தெளிஞ்சு போச்சுடா! எங்கேடா என் மகள் சுகிர்தம்?

அமிர்: இங்கேதான் இருக்கேனப்பா!

பாலு: அட, விளையாட்டு இருக்கட்டும் அம்மா... என் மகள் சுகிர்தம் எங்கே என்று கேட்கிறேன்.

அமிர்: ஐயா! விபரமாகச் சொல்கிறேன் கேளுங்க... நீங்க ஒருநாள் சிங்கப்பூர் வழியாக வரும்போது உங்கள் மகள் சுகிர்தம் வழியிலே செத்துப் போச்சுதுங்களே!

பாலு: ஆமா...ஞாபகம் இருக்கிறது.

அமிர்: அதிலிருந்து நீங்க கொஞ்சம் பைத்தியமாய் இருந்தீங்க.

பாலு: அதுவும் ஞாபகமிருக்கிறது...உட்காரம்மா!

அமிர்: அப்புறம் ஒருநாள் தெருவோடபோய்க் கொண்டிருந்த என்னை இழுத்துக்கொண்டு வந்து நீதான் என் மகளென்று பிடிவாதம் செய்தீங்க. நானும் டாக்டரு மாகக் கலந்து பேசி, பைத்தியம் தெளியவைக்க நான் உங்க மகள்போல நடிச்சேன்...

பாலு: அம்மா! உன்னைப் போலுள்ள குணவதியை நான் இதுவரையிலும் கண்டதில்லை. என் மகள் சுகிர்தம் இறந்துபோய்விட்டாள். இனிமே நீதான் என் மகள் சுகிர் தம்.

காட்சி—48

இடம்: பரமானந்தன் வீடு

இருப்: பரமானந்தன், மணி.

[மணியும் பரமானந்தனும் உரையாடுகின்றனர்.]

பர: மதுராபுரி ஆஸ்ரமத்துக்குப் போகணுமென்று சொன்னாயே, போய் வந்தாச்சா?

மணி: ஓ, போய் வந்தாச்சே! நம்ம பாக்கியத்தின் அப்பாயில்லே, அங்கே ஒரு காரியமாய் போயிருந்தேன்.

பர: என்ன விசேஷம்?

மணி: அது நம்ம சொந்த விஷயம்; அதை நீ கேட் காதே.

பர: சரி, போன காரியம் முடிந்ததா?

மணி: போய் வந்துட்டேன். அதோட, அங்கே ஒரு விஷயத்தையும் கவனிச்சேன். அங்கே நம்ம பழைய சிநேகிதி ஒருத்தி. சுந்தரி என்று பெயர். அவள் வேதாசலத்தின் கொடுமை தாங்கமுடியாமே...ஊரைவிட்டுப் போய்விட் டாள். இப்போ அங்கே சுந்தரகோஷாக இருக்கிறாள். அவ ளுடைய ஸ்டைலும் வாழ்க்கையும்...அடடடா...

பர: மணி! நானும் சும்மா இருக்கவில்லை...

மணி: என்ன செய்தே?

பர: மெட்ராசுக்குப் போயிருந்தேன். அங்கே நம்ம வேலைக்காரி அமிர்தம் இல்லே...

மணி: இல்லையா? இருக்கா...

பர: அங்கே அவள் பணக்காரியா...இருக்கா.

மணி: எப்படி ?

பர: பர்மா பாலு முதலியார் என்று ஒரு பைத்தியம், வீதியிலே போய்க் கொண்டிருந்தவளைப் பிடித்துக் கொண்டு நீ என் மகளென்று வைத்துக் கொண்டிருக்கிறார்.

மணி: பாரு அதிர்ஷ்டத்தை!

[இச்சமயம் பத்திரிகை விற்கும் பையன்]

பே.வி: பேப்பே, பேப்பர்! ஹரிஹரதாஸ் கொலை வழக்கு...பேப்பர்...

மணி: டேய், பேப்பே! இங்கே வாடா! ஏண்டா எழுத்தைப் போட்டுக் கொலை பண்றே? பேப்பர் என்று சொல். (மணி பத்திரிகைச் செய்தி படிக்கிறான்) ஹரிஹரதாஸ் கொலை! மூர்த்தி கைது. ஆனந்தா! பழி வாங்கும் படலத்துக்கு பஸ்ட் கிளாஸ் சான்ஸ்! பார், நம்முடைய வேலையை!

காட்சி—49.

இடம்: வேதாசலம் வீடு
இருப்: வேதாசலம் முதலியார், மணி.

[மணி, வேதாசலத்தின் வீட்டிற்கு வருகிறான்.]

மணி: என்னங்க, முதலியார்வாள்! நடந்ததை நினைத்து என்னங்க பிரயோஜனம்? இனி நடக்க வேண்டியதைப் பாருங்க...

வே: செக்ரட்டரி சார்! இன்னும் என்ன நடக்கணும்? ஒரே மருமகன். குடிகாரன் என்று ஊரெல்லாம் ஏசுகிறார்கள்; ஒரே மகள் கண்ணைப் போல் வளர்த்தேன்! ஆனால் இன்று கண் கலங்கி நிற்கிறாள். ஒரே மகன்; வீடு வேண்டாம் -வாசல் வேண்டாம் என்று வெளியே போய்விட்டான். இன்று அவன்மேல் கொலைக் குற்றம்

மணி: என்னங்க, போங்க! நீங்க இவ்வளவு சீக்கிரமா.. மனசை விடப்படாது. இன்னும் ஆக வேண்டியதிருக்கிறது, உங்களாலே எவ்வளவோ காரியம்! நீங்க நான் சொன்ன வக்கீலையே ஏற்பாடு செய்யுங்கள்; அப்புறம் பாருங்கள்.

வே: என்னமோ...செக்ரட்டரி சார்! உங்களைத்தான் மலைபோல நம்பிக்கிட்டு இருக்கேன்...

மணி: நம்புங்கள்...தாராளமாக நம்புங்க முதலியார் வாள்!

காட்சி—50

இடம்: நீதிமன்றம்

இருப்: பப்ளிக் பிராஸிகியூட்டர், சேவகன், சுந்தரகோஷ், வடநாட்டு வக்கீல், ஜட்ஜ்.

[பழைய ஆனந்தனாகிய பரமானந்தன் வடநாட்டு வக்கீலாகவும், மணி, அவன் வேலைக்காரனாகவும் மாறுகிறார்கள்.]

மணி: ஆனந்தா! நான் சொன்னதையெல்லாம் உண்மையிலேயே நம்பிவிட்டார் வேதாசல முதலியார். ஆனால் அவருடைய பரம விரோதியே வடநாட்டு வக்கீலாக வருவது அவருக்குத் தெரியாது. பாவம்! பழி வாங்கும் படலத்தின் கடைசிக் கட்டம். பஸ்ட் கிளாஸ் சான்ஸ்! விளம்பரப்படுத்தி பழி வாங்குவதற்கு அருமையான சந்தர்ப்பம்! ஆனந்தா!

நினைவிருக்கட்டும்! மூர்த்தியின்மேல் சுமத்தப்பட்டிருக்கும் குற்றம் கொலை!

[நீதிமன்ற விசாரணை]

பப்ளிக் பிரா: கொலை! பகிரங்கமாகச் செய்யப்பட்ட கொலை! துணிவோடு, சட்டத்தைத் துச்சமாக மதித்துச் செய்யப்பட்ட படுகொலை! பக்திமான் வேடம்பூண்டு பாதகச் செயல் புரிந்தவன், இதோ, இந்த மூர்த்தி. மூர்த்தி தான் கொலை செய்தான் என்பதற்கு ருஜு சாக்ஷி இருக்கிறது. கொலை செய்ததை அவனே ஒப்புக் கொண்டிருக்கிறான். அதற்கும் சாக்ஷி இருக்கிறது. கொலை செய்த இடத்திலேயே மூர்த்தியைப் பிடித்துக் கொண்டார்கள். சாக்ஷி உண்டு இதற்கும்.

சேவ: சுந்தரகோஷ்..சுந்தரகோஷ்...சுந்தரகோஷ்!

பப்ளி பிரா: தோட்டத்துப் பக்கம் இருந்து நீர் பயப்படும் படியாக சப்தம் கேட்டது. யாரோ—யாரையோ மிரட்டுவதுபோல!

சுந்தர: ஆம்! அய்யோ! ஏனடா இந்த அக்கிரமம்? பாவி என்று குருதேவர் கூறினார்.

பப்ளி பிரா: உடனே தோட்டத்துப் பக்கம் ஓடினீர்...

சுந்தர: ஆம்; அப்போது மூர்த்தி, குருதேவரின் கழுத்தைப் பிடித்து நெரித்துக் கொண்டிருப்பதைக் கண்டேன்; 'கொலை, கொலை' என்று கூவினேன். ஆஸ்ரமவாசிகள் ஓடிவந்து பிடித்துக் கொண்டார்கள்.

பப்ளி. பி: யாரை?

சுந்த: மூர்த்தியை.

பப்ளி. பி: அப்போது குரு மாண்டுபோய் விட்டார்?

சுந்த; ஆம்; மூர்த்தி அப்போது பக்கத்திலேயே இருந்தான்.

பப்ளி பி: குருவின் கழுத்தை மூர்த்தி நெரித்ததை நீர் பார்த்தீர்?

சுந்த: ஆம்; பார்த்தேன்...

பப்ளி பி: தெட்சால் மீ லார்டு

வடநாட்டு வக்கீல்: உமது பெயர்?

சுந்த: சுந்தரகோஷ்!

வட. வ: ஆஸ்ரமத்தின், பூர்வாசிரமப் பெயர்?

சுந்த: சுந்தர்...சுந்தரம்...

வட.வ: சரி, சுந்தரகோஷ்! குருதேவர் கொலை செய்யப்படுவதை நீர் பார்த்தீர்?

சுந்த: ஆம்!

வட. வ: கொலை செய்து கொண்டிருக்கும்போதே பார்த்தீர்?

சுந்த: ஆம்; பார்த்தேன.

வட. வ: ஆனால் அதைத் தடுக்க எந்தவித முயற்சியும் செய்யவில்லை. ஏன்? மூர்த்தி குருதேவரைத் தாக்குகிறான்; அதை நீர் பார்க்கிறீர்; அவன் மீது பாய்ந்து அவனைக் கீழே தள்ளி குருதேவரைக் காப்பாற்ற வேண்டுமென்று உமக்குத் தோன்றவில்லை. ஏன்? குருதேவர் கொலை செய்யப்படும் போது பிரதம சீடர் ஏன் பெண்போல் பதுங்கிக் கொள்ள வேண்டும்? சுந்தரகோஷ் குருவைக் காப்பாற்ற முயற்சிக்காமல் ஏன அங்கிருந்து ஓடவேண்டும்? பிரதம சீடரே! மீண்டும் கேட்கிறேன்...கொலையைக் கண்டு பயந்தீரா? அப்போது நீர் இருந்த நிலையைக் கண்டு பயந்தீரா? (மெம்பர்ஸ் ஆப் தி ஜூரி) பிரதம சீடர் பதில் கூற மறுக்கிறார். பரிதாபமாக இருக்கிறது, அவர் நிலையைப் பார்க்க! அந்த நள்ளிரவிலேகூட அவர் நிலை பரிதாபகரமாய்த்தான் இருந்திருக்க

வேண்டும். பாதி ராத்திரி வேளையிலே சத்தியத்தின் ஜுவாலை வீசுவதைக் கண்டு பதைபதைத்துத்தான் போயிருப்பார். சுந்தரகோஷ்! ஆஸ்ரமத்து ஆட்களை அழைத்து வரத்தானே அலறிக்கொண்டு அவசரமாக உள்ளே ஓடினீர்?

சுந்த: ஆம்.

வட. வ: ஆட்கள் ஓடிவந்தார்களா?

சுந்த: ஆம்.

வட. வ: நீரும் அவர்களோடு ஓடி வந்தீரா?

சுந்த: இல்லை...சற்றுப் பொறுத்து வந்தேன்...

வட.வ: ஆட்களை அழைத்துவரச் சென்ற நீர், ஏன் அவர்களுடன் திரும்பி வரவில்லை? சுந்தரகோஷ்! என்கேள்விகளை நன்றாகக் கவனிக்க வேண்டும். ஆட்களைக் கூவி அழைத்துவிட்டு, அவர்கள் வரும்போது நீர் அங்கில்லை. கொஞ்ச நேரம் கழித்து வந்தீர். இதுதானே உண்மை?

சுந்த: ஆம்!

வட. வ: அந்தக் கொஞ்ச நேரம் எங்கே போயிருந்தீர்? என்ன செய்து கொண்டிருந்தீர் சொல்லும்! நேரடியான கேள்வி. பிரதம சீடரே! ஏன் நெற்றியைச் சுளிக்கிறீர்? சொல்லும் பதில்? அந்தக் கொஞ்ச நேரம் எங்கே போயிருந்தீர்? என்ன அவ்வளவு அவசரமான வேலை? கொலை செய்யப்பட்டு கிடக்கிறார் குருதேவர். கொலை செய்தவன் பிடிபட்டான்; ஆட்கள் அவனைச் சூழ்ந்து நிற்கிறார்கள். நீர் மட்டும் இல்லை. நீர் பிரதம சீடர்! அந்தக் கொஞ்ச நேரம்எங்கே சென்றிருந்தீர்? சொல்லும் சுந்தரகோஷ், எங்கே சென்றிருந்தீர் அந்தச் சமயம்? சொல்லும் பதில்? சொல்ல மாட்டீர்? சொல்ல முடியாது. சுந்தரகோஷ்! உன் சூது கோர்ட்டாருக்குத் தெரியாது; உன் கள்ளக்காதல் கோர்ட்டாருக்குத் தெரியாது; உன் ஏமாற்று வித்தைகள் கோர்ட்டாருக்குத் தெரியாது. நீ நடித்த நாடகம் கோர்ட்டாருக்குத் தெரியாது; இவர்கள் காணட்டும், குருவுடன் நீ இருக்கும்போது மூர்த்தி

உன்னைக் கண்ட கோலத்தை! அவர்களும் காணட்டும். (தலைப்பாகையை அவிழ்க்கிறான்; சுந்தரகோஷ் பெண் ணாகக் காட்சியளிக்கிறாள். கோர்ட்டிலே சத்தம்)

ஜட்ஜ்: சைலன்ஸ்...சைலன்ஸ்!

வட. வ: பாடன் மீ மை லார்டு. கோர்ட்டிலே வழக்கத் திற்கும் ஒழுக்கத்திற்கும் விரோதமாக நடந்து கொண்ட தற்கு மன்னிக்கக் கோருகிறேன். இதோ, இந்தப் பரம பத்தினிதான் பாதி ராத்திரி வேளையிலே வேஷமிட்டு, ஊரை ஏய்த்த ஹரிஹரதாஸுடன் குலவிக் கொண்டி ருப்பதைக் கண்டுவிட்டான் மூர்த்தி. குருவும் சீடனும், காமுகனும் கள்ளியும் என்பதைக் கண்டான். அதன் விளைவு இக்கொலை.

ஜட்ஜ்: ஆச்சரியமாக இருக்கிறது. வக்கீல் வேலையுடன் துப்பறியும் வேலையும் செய்திருக்கிறீர்...

வட. வ: இந்த வழக்கிலே மேலும் பல மர்மங்கள் உள்ளன விளக்குவதற்கு. ஆஸ்ரமத்துக்குச் சென்று, அங்கு சில உண்மைகளைக் காண விரும்புகிறோம். கொஞ்சம் அவ காசம் வேண்டுகிறேன்.

ஜட்ஜ்: எஸ்...

வட.வ: தேங்க்யூ மை லார்ட்

காட்சி—51

இடம்: நீதிமன்றம்

இருப்: வடநாட்டு வக்கீல், பப்ளிக் பிராஸி கியூட்டர், ஜட்ஜ்.

[கோர்ட் விசாரணை: பிற்பகுதி]

வட. வ: ஆஸ்ரமத்தைக் கண்டோம். கடவுள் அரு ளுக்கு வழி காட்டப்படும் இடம் என்று பாமரர் நம்பும் அந்த இடம் காமவேள் நடனசாலையாக இருக்கக் கண்

டோம். இளித்தவாயர்களுக்குப் பகலிலே உபதேசம்; இன்ப வல்லிகளுக்கு இரவிலே சரசமாம்! குருடனுக்குக் கோல் தேவையாக இருப்பதுபோல், ஊரை ஏமாற்றிக் குடிகெடுப்பவனுக்கு வேஷம் தேவைப்படுகிறது. வேஷமணியாத வேதாந்தி—மோடி செய்யாத மாது-ஜோடி இல்லாத மாடப்புறா—சேடி இல்லாத ராஜகுமாரி இருக்க முடியாதாம்! ஹரிஹரதாஸ் இத்தகைய ஓர் வேஷதாரி! இந்த ஆஸ்ரமத்திலே காதினிலே குண்டலம் ஆட, கனத்த சாரீரம் பாட, காய்ச்சிய பால் தொண்டையில் ஓட, கண்கள் கதியற்றுக் கன்னியரை நாட, கடவுள் அருளுக்கு வழிகாட்டப்பட்டதாம்! சிரித்திடும் நரி, சிவ சொரூபத்தில் இருந்தது, இந்த ஆஸ்ரமத்தில்! 'ஓம் சாந்தி' என்று உரத்த குரலில் கூவிவந்த இந்தக் குருவைக் காண ஒழுக்கம் கூசிற்று; தருமம், இவன் இருக்கும் திக்கைக் காண மறுத்தது.

பப்ளி. பி: மை லார்ட்! நண்பர் கடிகாரம் இல்லாத இடத்திலே செய்ய வேண்டிய பிரசங்கத்தை, நண்பர் இடத்தை மறந்து இங்கே நடத்துகிறார். ஹரிஹரதாஸ் கொல்லப்பட்டது பற்றியே இப்போது வழக்கு!

வட. வ: ஆம்; கொலை வழக்குதான்! ஹரிஹரதாஸ் கொல்லப்பட்டது உண்மை; அவனைக் கொன்றது மூர்த்தி என்பது மறுக்க முடியாத உண்மை. படுமோசக்காரனைக் கொல்வது பரோபகாரம் என்று ஏன் நாம் மதிக்கக் கூடாது? பாம்பைக் கொல்வது பாவமா?

பப்ளி. பி: தர்ம சாஸ்திர விதிப்படி இங்கே நாம் விசாரணை நடத்த வரவில்லை. சட்டத்தின்படி கொண்டுவரப்பட்ட ஒரு கொலை வழக்கை விசாரணை நடத்துகிறோம்.

வட. வ: சட்டம் தர்மத்துக்குக் கட்டுப்பட வேண்டாம் என்பது என் நண்பரின் வாதமோ? சட்டம் ஓர் இருட்டறை; அதிலே வக்கீலின் வாதம் ஓர் விளக்கு. ஏழையால் அந்தப் பிரகாசமான விளக்கைப் பெறமுடியாது. இதோ, கோர்ட்டார் இதைப் பார்வையிடும்படி கேட்டுக் கொள்கிறேன். இது

ஹரிஹரதாஸின் பிணத்தை பரிசோதித்த டாக்டரின் குறிப்பு. இறந்தவனின் இரு கரங்களிலும் உள்ளங் கையில் குண்டு பாய்ந்த வடுக்கள் இருப்பதாகக் குறிப்பிட்டிருக்கிறார். மெம்பர்ஸ் ஆப் தி ஜூரி! 15 ஆண்டுகளுக்கு முன்பு பண்டாரப் பக்கிரி என்ற பயங்கரக் கொள்ளைக்காரன் இருந்தான். பெண்களிடம்கூட இரக்கம் காட்டாமல் அடித்துப் பிடுங்கி வாழ்ந்த பேயன் அவன். ஆனால் பலநாள் கள்ளன் ஒரு நாள் அகப்படுவான் என்பதுபோல், போலீசாரிடம் கடைசியாகச் சிக்கிக் கொண்டான். ஜெயிலிலே தள்ளப்பட்ட பண்டாரப் பக்கிரி, கம்பிகளை அறுத்து, அங்கிருந்து தப்பி, சுவர் ஏறிக் குதித்து ஓடினான். போலீசாரும் அவனை விடவில்லை; விரட்டினார்கள். தப்பிவிடுவான் என்று தெரியவே சுட்டனர். கைகளினால் தடுத்தான். இரு கரங்களிலும் குண்டு பாய்ந்தன. ஆனாலும் தப்பிவிட்டான். பிறகு சர்க்காரையும் சட்டத்தையும் மக்களையும் ஏமாற்ற, பண்டாரப் பக்கிரி ஹரிஹரதாஸ் ஆனான். அவனுடைய கள்ளக் காதலி சுந்தரி, சுந்தரகோஷ் ஆனாள். ஹரிஹரதாஸ் உபதேசம் செய்யும்போது ஹரியும் ஹரனும் ஒன்று என்பதை விளக்க ஒரு கையிலே திருநீறும், மற்றொரு கையிலே திருநாமமும் பொறித்துக் கொள்வது வழக்கம். அதை மகா பெரிய தத்துவம் என்று மக்கள் நம்பினார்கள். ஆனால் உண்மையில் உள்ளங்கையிலுள்ள வடுக்களை மறைக்கவே, அந்த வேலை செய்தான் அவன். இதோ போலீசாரின் விளம்பரம். பண்டாரப் பக்கிரியை உயிருடன் பிடித்துத் தருவோருக்கு ரூபாய் பத்தாயிரமும், அவன் பிணத்தையாவது கொண்டு வருவோருக்கு ரூபாய் ஐயாயிரமும் பரிசு தருவதாக வெளிவந்த அறிக்கை. இதன்படி மூர்த்தி ஆஸ்ரமத்திலே சேர்ந்து, உண்மையைக் கண்டுபிடித்து, ஹரிஹரதாஸ் என்ற பண்டாரப் பக்கிரியைப் பிடிக்கப் போகும்போது அவன் முரட்டுத்தனமாக நடந்து கொண்டு, மூர்த்தியைக் கொல்ல முயற்சித்தான். தற்காப்புக்காக மூர்த்தி அவனைக் கொல்ல நேர்ந்தது. ஆகவே மூர்த்தி சர்க்காரிடமிருந்து பரிசுத்தொகை பெற வேண்டியவன். குற்றவாளியல்ல.

ஜட்ஜ்: வாட்டீஸ் தி பொஸிஷன் ஆப்தி பிராசிக்யூஷன்?

பப்ளி.பி: ஐ வித்ரோ தி கேஸ் மை லார்ட்.

ஜட்ஜ்: ஐ அக்யூட்டட் தி கேஸ்.

[பப்ளிக் பிராசிகியூட்டர் வழக்கை வாபஸ் வாங்குகிறார். ஜட்ஜ் அனுமதிக்கிறார்.]

காட்சி—52

இடம்: வடநாட்டு வக்கீல் வீடு

இருப்: மூர்த்தி, வக்கீல், பாலு, வேதாசல முதலியார்.

[மூர்த்தி தன் நன்றியைத் தெரிவிப்பதற்காக வடநாட்டு வக்கீலைச் சந்திக்கிறான்.]

மூர்த்தி: ஐயா! என்னைத் தூக்குமேடையிலிருந்து காப்பாற்றினீர்கள். நீங்கள் என் கண்கண்ட தெய்வம். உங்களுக்கு நான் என்ன கைம்மாறு...

வட.வ: பிரதி உபகாரம் செய்யலாம். தடை எதுவுமின்றி பேசாமல்போய், பர்மா பாலு முதலியாரின் மகளை நீர் கல்யாணம் செய்துகொள்ள வேண்டும்.

மூர்த்தி ஐயா! என் கல்யாணத்தைப் பற்றி என் பிரதிக்ஞை...

வட. வ: அதுவும் எனக்குத் தெரியும். நீர் சுகிர்தத்தைக் கல்யாணம் செய்து கொள்வதால் அமிர்தத்துக்கு எந்த விதத்திலும் துரோகம் செய்தவர் ஆகமாட்டீர். நான் வருகிறேன்... கல்யாணத்தில் சந்திப்போம்.

மூர்த்தி· ஐயா...ஐயா...

வே. வக்கீல் சொன்னது சரியான யோசனை. பையன் என்னமோ தயங்குகிறான் போலிருக்கே?

பாலு: இப்போ...அப்படித்தான் இருக்கும்;பெண்ணை வந்து பார்க்கட்டும்; அப்புறம் எல்லாம் சரியாய்ப் போய் விடும்.

காட்சி—53.

இடம்: பாலு முதலியார் வீடு

இருப்: வேதாசல முதலியார், பாலு முதலியார், சுகிர்தம்.

வே: குழந்தை பாடுமென்று கேள்விப்பட்டேன்?

பாலு: ஆமாம்..குழந்தைக்கு கொஞ்சம் கல்வி ஞானம் உண்டு.

வே: அதனாலே பரவாயில்லை..பாடச் சொல்லுங்க...

பாலு: கூச்சப்படாதே அம்மா...சும்மா பாடு....

[சுகிர்தம் பாடுகிறாள்.]

வே: குழந்தைக்கு கல்வி ஞானம் மட்டுமல்ல; உலக ஞானமும் இருக்கு!

பாலு: சுகிர்தம் புத்தகங்களெல்லாம் நிறைய படிச்சிருக்கு...

சுகிர்: அனுபவப் பள்ளியிலே இரண்டு வருஷம் படிச்சேன் என்று சொல்லுங்க மாமா கிட்டே.

வே: அப்போ...சரி! இதோ, ஜோசியரும் இருக்கிறார்; நாள் பார்த்து வைத்துவிடுவோம்

தண்ட: என்னங்க! நம்ம தோட்டத்துப் பக்கம் காத்தாட வர்றீங்களா?

[யாவரும் எழுந்து போய்விடுகின்றனர். மூர்த்தியும் சுகிர்தமும் தனித்திருக்கின்றனர்.]

வே: ஒரு அதிசயமுங்க! நம்ம வீட்டிலே ஒரு வேலைக் காரி ஒருத்தி இருந்தாள். என்ன, உங்க மகளை ஒரு வேலைக் காரிக்குச் சமமாகச் சொல்கிறேன் என்று வருத்தமா...

பாலு: அப்படி ஒன்றுமில்லே...உம்...

வே: இல்லை. இது நிஜம்தான். அமிர்தத்துக்கு ஒரு படாடோப ஆடையும், சுகிர்தத்துக்கு ஒரு பட்டிக்காட்டு ஆடையும் அணிந்திருந்தால் எப்படி இருக்குமோ, அப்படி இருந்தாள். ஒருவேளை, பையனுக்கு இஷ்டம் இருந்தாலும் இருக்கும்...

பாலு: சந்தேகம் என்ன, அதோ பாருங்க...

[மூர்த்தியும் சுகிர்தமும் தனித்துப் பேசுவதைச் சுட்டிக் காண்பிக்கிறார்.]

மூர்த்தி: பேதைப் பெண்ணே! வண்டு மனம் கொண்ட வன் அல்ல நான். என் உயிரைக் காத்த உத்தமரின் ஆலோ சனை, புத்திமதி, கட்டுப்பாடே இதற்குக் காரணம்.

சுகிர்: ஓ, அப்படியா! உங்கள் உள்ளத்தில் ஒரு அமிர் தம் குடி கொண்டிருந்த இடம்; அங்கே எனக்கும் இடம் அளித்தால் நெருக்கடிதானே ஏற்படும்?

மூர்த்தி: சுகிர்தம்! நீ அறியமாட்டாய், என் ஆவித் துடிப்பை. அது ஏனோ தெரியவில்லை. அது உன்னைக் கண்டதுமே என் உள்ளத்தில் உனக்குத் தானகவே இடம் ஏற்பட்டுவிட்டது.

சுகிர்: அப்படியானால் என்னைக் கண்டதுமே அமிர் தத்தின் நினைவு மறந்துவிட்டது. அப்படித்தானே?

மூர்த்தி: இல்லை, இல்லை! உன்னைப் பார்க்கும் போதெல்லாம் என் அமிர்தத்தைப் பார்ப்பது போலவே இருக்கிறது.

சுகிர்: எப்படி இருப்பாள் அந்த அமிர்தம்?

மூர்த்தி: சுருக்கமாகச் சொல்கிறேன். நீ பாலு முதலியாரின் மகளாகி, பட்டுப் பட்டாடை உடுத்தி, படாடோபம் இல்லாமல், பட்டிக்காட்டுப் பார்வையில் ஏழ்மையின் தோழமை கொண்டிருந்தால் எப்படி இருப்பாயோ, அப்படி இருப்பாள் என் அமிர்தம்!

காட்சி—54

இடம்: வேதாசலம் வீடு.

இருப்: ஆனந்தன், வேதாசல முதலியார், மூர்த்தி, மணி, பாலு, அமிர்தம், சரசா...

[மூர்த்திக்கும் சுகிர்தத்திற்கும் திருமணம் நடக்கிறது. பரமானந்தன் ஆனந்தனாக மாறுகிறான்.]

ஆனந்: மணி! கல்யாணம் என்றால் இப்படியல்லவா இருக்க வேண்டும்? ஊரிலே ஆயிரம் நடக்கிறது! என்ன பிரயோஜனம்?

வேதா: ஊம்...ஆரம்பமாயிட்டுதுங்க, ஆனந்தனுடைய அர்ச்சனை! என் மனதைப் புண்படுத்துவதற்காகவே இவன் பூமியிலே பிறந்திருக்கிறான் போலிருக்கு!

ஆனந். உமது புண் ஆறாமல் இருக்க வேண்டும் என்பதுதானே என் ஒரே ஆசை!

பாலு: இந்தாப்பா, ஆனந்தா! உன் மாமனார் உனக்கு என்ன கெடுதல் செய்தார்? அதை என்கிட்ட சொல்...நான் கேட்கிறேன்.

ஆனந்: மாமா! உன்னை மாமா எனறு அழைக்கக்கூட என் வாய் கூசுகிறது.

மூர்த்தி: ஆனந்தா, போதும்! அதிகமாகப் பேசாதே! உனக்குப் பெண் கொடுத்துவிட்டதாலே நீ செய்கிற அக்கிரமங்களை எல்லாம் பொறுத்துக் கொண்டிருக்க வேண்டும்

என்கிற விதி இல்லை. இனி பொறுக்க முடியாது. தெரிகிறதா?

ஆனந்: துள்ளாதே மூர்த்தி! உன் கள்ளக் காதல் கைகூடிவிட்ட சந்தோஷத்தில் துள்ளுகிறாய். மூர்த்தி! என்னைப் போல் துன்பத்தைக் கண்டிருந்தால் தெரியும். நீ சீமானின் மகன். சொகுசாக வாழ்ந்தாய். என் சஞ்சலத்தை நீ அறிவாயா? பசி உனக்குத் தெரியுமா? பட்டினி கிடந்தது உண்டா? பகலெல்லாம் வேலை செய்து அலுத்து இரவிலே தூக்கம் பிடிக்காமல் புரண்டதுண்டா? மூர்த்தி! நீ புத்தி உள்ளவன். கேள், என கதையை! கேட்டபின் யோசித்துப் பதில் சொல். நான் யார்? மேவார் விலாச மைனர்; சரசாவின் புருஷன்; ஜமீன் வேதாசலத்தின் மருமகன் என்றுதானே நினைத்துக் கொண்டிருக்கிறீர்கள்? மணி, ஊருக்குள்ளே எனக்கு என்ன பெயர்?

மணி: என் சிநேகிதன் என்றால் அதிலே சகலமும் அடக்கம். ஊருக்குள்ளே உனக்கு என்னப்பா பெயர்? குடிகாரன், சூதாடி, கூத்திக் கள்ளன்...

ஆனந்: ஆம்; குடியன், வெறியன், கூத்திக் கள்ளன், மனைவியைக் கொடுமை செய்தவன், மாமனாரின் மனதை நோகச் செய்த மகா பாதகன்; இவ்வளவும் ஏன் செய்தேன் தெரியுமா? வேதாசலத்திற்கு வேதனை தருவதற்குத்தான். ஏன் திகைக்கிறீர்கள்! உண்மையின் உருவம் பார்ப்பதற்குப் பயமாயிருக்கிறதோ? அன்று கோர்ட்டிலேயும் எப்படித்தான் சகித்துக் கொண்டிருந்தீர்களோ?

பாலு: ஆனந்த்! என்ன, என்ன! நீ அன்று கோர்ட்டில் இல்லையே?

ஆனந்: ஆம்; கோர்ட்டிலே நான் இல்லைதான். மூர்த்திக்காக வாதாடிய வக்கீல் இருந்தாரல்லவா? பாருங்கள் அவரை. (திரையைத் தள்ளுகிறான்) நான்தான் மூர்த்திக்காக வாதாடிய வக்கீல். என் நண்பர் மணிதான் ஆஸ்ரமத்து உண்மைகளை அறிந்து சொன்னவர்.

மூர்த்தி: ஆனந்த்! நீயா என்னைத் தூக்கு மேடையி லிருந்து காப்பாற்றினாய்? நீயா வடநாட்டு வக்கீல்! உனக்கா ...என்மீது இரக்கம் பிறந்தது?

ஆனந்: படித்த முட்டாளே, கேள். இலங்கைத் தோட் டத்திலே, இரவு—பகலாக வேலை செய்து, 200 ரூபாய் சேர்த்து, அதைத் தன் வயோதிகத் தந்தைக்குத் தந்து, அவர் மகிழ்வதைக் கண்டு மகிழ வேண்டும் என்று எண் ணியே ஈரம், பச்சாதாபம், அன்பு ததும்பிக் கொண்டி ருந்த மனந்தாண்டா இது. பாடுபட்ட கைகளடா. காடு மேடு சுற்றிய கால்கள், உழைத்து உழைத்து, உருக்குலைந் தவன் நான். உன்னைப்போல் உல்லாசபுரியில் உலவியவ னல்ல. படித்துப் பட்டம் பெற்று, வேலை கிடைக்காத தினால் சிலோன் காட்டிலே கணக்கெழுதப் போன ஆனந்தன் நான். என்னை மேவார் விலாச மைனா என்று எண்ணிக் கொண்டு சரசாவை எனக்குக் கல்யாணம் செய்து தந்தார் சீமான் வேதாசலம்.

உன் சகோதரி சரசாவை ஏன் கல்யாணம் செய்து கொண்டேன்? உன்னைப் போல் காதலுக்காகவா? இல்லை. சீமானின் பணத்திற்காகவா? கடுகளவும் இல்லை. சரசாவை நான் கல்யாணம் செய்து கொண்டது என் வேதனையை வெளிப்படுத்துவதற்கு! உன் தகப்பனார் பணத்தாசை பிடித்து பல ஏழைகளைக் கசக்கிப் பிழிந்தார். அப்படி அவதிப்பட்டவர்களிலே என் தந்தையும் ஒருவர்.

பக்கத்து ஊர்! சுந்தரம் பிள்ளை என்று பெயர். பட்ட கடனுக்காக வீடும் தோட்டமும் உன் தகப்பனாருக்குக் கொடுத்தார்; பராரியானார். வீடு இழந்த என் தந்தையை ஜெயிலிலே தள்ள இந்தத் தயாள மூர்த்தி ஏற்பாடு செய் தார். பாவம்! ஏழை என்ன செய்ய முடியும்? மரக்கிளை யிலே பிணமாகத் தொங்கினார். என் தந்தை பிணமானார். என் தந்தையைக் கொன்ற பாதகனை நான் கொடுமைப் படுத்தியது குற்றமா?

சரசா, நீ சொல்! உன் தந்தையை நான் கொடுமைப் படுத்தியது குற்றமா?

மூர்த்தி, நீ பேசு! உன் தந்தையைக் கொடுமைப் படுத்தியது குற்றமா?

பாலு முதலியாரே! நியாயம் தெரியுமே, உமக்கு! நீர் சொல்லும், வேதாசல முதலியாரை நான் கொடுமைப் படுத்தியது குற்றமா?

வேதாசல முதலியாரே! இப்போது என்னைப் பார்க்க கூசுகிறதோ! நீரே சொல்லும், உம்மை நான் கொடுமைப் படுத்தியது குற்றமா?

வே: ஐயோ...என்னால் இதைத் தாங்கமுடியவில் லையே...

ஆனந்: இப்படி நான் எத்தனை ஆயிரம் தடவைகள் சொன்னேன் தெரியுமா, மரக்கிளையிலே பிணம் தொங்கும் போது. அப்போதே உம்மைக் கொனறு இரத்தத்தைக் குடித் திருப்பேன்.

மணி: நான்தான் அதைத் தடுத்தேன்...நானதான்...

பாலு. அப்பா, மணி! நல்ல சமயத்திலே நீ நல்ல புத்தி தான் சொல்லியிருக்கிறே....

மணி: பாருங்க...பாம்பு கடிச்சா பட்டுண்ணு உயிர் போயிடும். அதனால் ஒரு பயனும் இல்லை. தினமும் படுக் கையிலே போய் படுக்கணும்; பாம்பு வரணும்; கடிக்கணும்; உயிர் துடிக்கணும்... ஆனால் பிராணன் மட்டும் போகக் கூடாது. அதைப்போலே, உன் தகப்பனைக் கொன்ற சண் டாளனை வாட்டி வாட்டி, வதச்சி வதச்சி சித்ரவதை செய் யணும்னு நான்தான் யோசனை சொல்லிக் கொடுத்தேன்.

ஆனந்: ஆம்; அந்த யோசனைப்படிதான் மருமகனான உடனே, அட்டகாசத்தை ஆரம்பித்தேன்...குடித்தவனைப் போல் நடித்தேன். சரசாவை அடித்தேன்; வேதாசல முதலி

யாரை வாட்டினேன்; வேதனையால் அவர் கஷ்டப்படும் போது என் கண் குளிரப் பார்த்தேன். அதுமட்டுமா? மூர்த் திக்கும் இவருக்கும் சண்டை மூட்டினேன். சீமான் வீட்டுப் பெண்ணை இவர்கள் கண்ணெதிரிலேயே காய்கறி விற்கச் செய்தேன். இவ்வளவும் ஏன் செய்தேன்? பணத்திமிரை ஒடுக்க, செல்வம் இருந்தாலும சுகம் பெறாமல் தடுக்க, கேட்டுப் பாருங்கள் அவரை! செல்வம் இருந்து அவர் கண்ட தென்ன? வேதனை! வேதனை!! வேதனை!!! ஏன், ஆச்சரி யப்படுகிறீர்கள்? என் மனம் சாந்தி அடைய வஞ்சம் தீர்த் துக் கொள்ள எண்ணினேன். வெற்றி பெற்றேன்.

வே: ஆனந்தா! போதும், போதும்; எனக்கு இந்தத் தண்டனை. என்னை மன்னித்துவிடு. என்னால் உன்னைப் போல் எத்தனை பேர் கஷ்டப்பட்டார்களோ? எனக்குத் தெரியாது. பாழும் பணத்தாசையால், பணதிமிரினால் நான் பல ஏழைகளைக் கொடுமைப்படுத்தி வந்தேன். உண்மைதான்! ஆனால் உன்னை இதுவரை பெரிய துஷ் டன் என்றே எண்ணி இருந்தேன் உண்மை இப்போதுதான் தெரிகிறது, நீ எவ்வளவு நல்ல பிள்ளை என்று

மணி: என்னங்க போங்க, முதலியார்வாள்! இப்ப வெல்லாம் எவ்வளவோ நல்லத்தான பேசுறீங்க. முன்னெல் லாம் என்ன முறுககு! ஏழைகளைக் கண்டால் என்ன கடு கடுப்பு! பச்சென்று யாராவது வாழ்ந்தால், அடாடாடா, வட்டிப் பணத்தைக் கணக்கு தீர்த்து வாங்குவதிலே என்ன கண்டிப்பையா...இப்படி ஊரை ஏமாற்றி, பணத்தை மிச்சப் படுத்தி என்னய்யா சுகத்தைக் கண்டீர்? தங்கத்தினாலே அரிசி செய்து சமைத்து, கோமேதகக் கூட்டும், வைர வருவ லும், முத்துப் பச்சடியும், மோர்க்குழம்புலே கெம்புமா கலந்து சாப்பிட்டு வந்தீர்?

வே: ஆமாப்பா மணி! நீ சொல்வது அத்தனையும உண்மைதான். பணத்தாசையால் பல கொடுமைகள் புரிந்த வேதாசலம் மாண்டே போனான். நான் புத்தி வந்த புது வேதாசலம். தவறை உணர்ந்து கொண்டவன்.

ஆனந்: வேதாசல முதலியாரே! மற்றொன்றும் நீர் உணர வேண்டும். பணத்திமிர் மட்டுமல்ல உமக்கு! ஜாதித் திமிரும் அமோகம். ஆனால் நடந்ததென்ன? பஞ்சை சுந்தரம் பிள்ளையின் மகன் ஆனந்தன், வேதாசல முதலியாருக்கு மருமகன். அதுமட்டுமா? இதோ, வீற்றிருக்கும் மணமகள் பேங்கர் பர்மா பாலு முதலியாரின் மகள் என்பது உமது எண்ணம். அல்லவா? இதோ பாருங்கள், அவரது பெற்றோரை! (திரையைத் தள்ளிக் காண்பிக்கிறான்.]

மூர்த்தி. என்ன அமிர்தமா சுகிர்தம்?

பாலு: ஒன்று சொல்ல மறந்துட்டேன். அமிர்தம்தான் சுகிர்தம்; என் வளர்ப்புப் பொண்ணு.

ஆனந்: ஆம்; உமது மருமகள் யார்? வேலைககாரி அமிர்தம். வேற்று ஜாதிப்பெண். எங்கே உன் ஜாதித் திமிர்! பணம் பத்து நாளில் ஜாதியைப் பட்சணமாக்கிவிட்டது. பார்த்தீரா? பணத்திமிர் ஒழிந்தது; ஜாதித் திமிரும் ஒழிந்தது; என் வேலையும் முடிந்தது; நான் வருகிறேன்...

சர: நில்லுங்கள்! நீங்கள் இல்லாத இந்த வீட்டில் எனக்கு என்ன வேலை? நானும் தங்களுடன் வரவேண்டியதுதான்.

மூர்த்தி: ஆம்! ஆனந்தன் இல்லாத இடத்தில் இனி யாருக்கும் இடமில்லை. அவர் போகும் உலகம்தான் எனக்கும்.

அமிர்: நீங்கள் போய்விட்டால் எனக்கு மட்டும் இந்த வீட்டில் என்ன வேலை? நானும் உங்களுடன் வரவேண்டியவள்தான்...

வே: நில்லுங்கள்! யாரும் எங்கேயும் போகவேண்டாம். இனி, உங்களுக்கு வேறு உலகம்; எனக்கு வேறு உலகமில்லை; ஆனந்தா, வா! சரசா! இந்தப் பாதகனை நல்லவழிப்படுத்திய உன் புருஷன் ஆனந்தனோடு ஆனந்தமாக வாழ்ந்திடு; அமிர்தம், பலே! நீ பெரிய வேலைக்காரிதான்! காதலால்

ஜாதியை வென்ற உத்தமி. உன் புருஷன் மூர்த்தியோடு சுகமாக வாழ்ந்திரு! பாலு முதலியாரே! வாரும், புறப்படுவோம்.

பாலு: எங்கே?

வே: பணத்திமிரும் ஜாதித் திமிரும் ஒழிய வேண்டும் என்றும், 'ஒன்றே குலம்; ஒருவனே தேவன்' என்றும் நாட்டு மக்களுக்கு உரைப்போம.

''ஒன்றே குலம் ; ஒருவனே தேவன்''

LIBRARY
MADRAS
சென்னை-1

# செவ்வாழை

*(சிறுகதைகள்)*

**பேரறிஞர் டாக்டர் சி.என். அண்ணாதுரை**

*மனிதன் மறைவான். ஆனால் மனிதருள் மாணிக்கமாகத் திகழும் மேதைகள் படைத்த இலக்கியம் என்றுமே மறைவதில்லை.*

*அது சாகாவரம் பெற்றது. வாழையடி வாழை யென வரும் திருக்கூட்டம் செய்யும் தவறைத் திருத்தும் பணியைத் தொடர்ந்து செய்துகொண் டிருக்கும் சக்தி அதற்குண்டு.*

*அமரர் அண்ணாவின் பொற்காலக் கதை இலக் கியமும் அத்தகையதே.*

*'செவ்வாழை' கதையோடு கைகோர்த்து வரும் ஒவ்வொரு கதையும் நாட்டுக்குத் திறவு கோல் போன்றது.*

*எனவே—*

*சமூகத்தில் நெறியோடு வாழக் கற்றுக் கொடுக் கும் அண்ணாவின் சிறுகதையாம் நறுங்கனியை நீங்களும சுவையுங்கள்; மற்றவர்களையும் சுவைக் கச் செய்யுங்கள்.*

**விலை ரூ. 5.90**

**பூம்புகார் பிரசுரம் பிரஸ்**
**63, பிராட்வே, சென்னை-1.**